www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 02-09-1994

### பலாலியில் விமானம் இறங்க முடியவில்லை

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகளில் தேர்தல் கடமைக்கென 50 பேரை ஏற்றிவந்த சிறீலங்கா விமானம் பலாலியில் தரையிறங்க முடியாது திரும்பியதாக அறியப்படுகின்றது. பலாலி முகாமுக்குள் விடுதலைப்புலிகள் அண்மையில் ஊடுருவித் தாக்குதல் நடத்தியபோது, விமான ஓடுபாதை சேதமடைந்ததன் விளைவாகவே விமானங்கள் தரையிறங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்விமானத்திலிருந்த 20 பேர் அனுராதபுரத்திலும், 30 பேர் திருமலையிலும் இறக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ■

# நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தத்திற்கு விடுதலைப்புலிகள் தயார்

## யாழ்ப்பாணத்தில் அறிவிப்பு

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் இதற்கு உதவும் முகமாக யுத்தநிறுத்தத்தை மேற்கொள்வதற்கும் விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக யாழ்ப்பாணத்தில், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார் என சர்வதேச செய்தி முகவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களின் செய்தியின்படி, பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண வெளிப்பாட்டின் அடையாளமாக வடக்கு கிழக்கின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மக்களுக்கு எதிரான பொருளாதாரத்தடையினை, சிறீலங்கா அரசாங்கம் விலக்கிக்கொள்ள வேண்டுமெனவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கோரிக்கை விடுத்ததாகவும் தெரியவருகிறது.

சிறீலங்காவின் புதிய பிரதமர் சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா, தான் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக கொழும்பில் அறிவித்திருந்தார். சிறீலங்காவின் புதிய பாதுகாப்பு பிரதியமைச்சரான அனுருத்த ரத்வத்த, பொருளாதாரத் தடையை அகற்றுவது விடுதலைப்புலிகளின் பதிலைப் பொறுத்தே நடைபெறும் எனவும் கொழும்பில் வைத்துக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ★

## சர்வதேச அவதானிகள் யாழ்-வன்னி தேர்தலை நிராகரிப்பு

வன்னி மாவட்டத் தேர்தலில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிப்பில் பங்குபற்ற முடியாத நிலை இருந்ததாகவும், எனவே இத் தேர்தல் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலாக இருக்கவில்லை என, சர்வதேச அவதானிப்பு தொண்டர்கள் (IOM) எனும் அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது. இப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அதிகளவான மக்கள் வாழ்கின்றார்கள் என்ற உண்மையையும் இவ் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வவுனியா திரும்பிய அகதிகளில் 2500 பேரில் 700 பேர் மட்டுமே வாக்களிக்க விண்ணப்பித்ததாகவும், அதில் 75 பேருக்கு மட்டுமே தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கினார் எனவும், மிகுதியானவர்களுக்கு அனுமதி வழங்கப்படாததற்குக் காரணம் கூட கூறப்படவில்லை எனவும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இங்கு வாழும் யாழ். அகதிகள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வாக்களிக்க உரிமையிருந்த போதிலும் அவர்கள் அதில் அக்கறை காட்டவில்லை எனக் கூறும் இவ்வமைப்பு; பொலிஸ் அதிகாரிகள், வாக்காளர்களை

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...



சுவிசில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் போது தமிழீழத் தேசியக் கொடி ஏற்றல்.

## தமிழீழ மக்களின் ஒப்புதல் பெறாதவர்களை தமிழர் பிரதிநிதிகளாகச் சிறீலங்கா அறிவிப்பு

சிறீலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்களில், தேர்தலை நடாத்த சிறீலங்காவால் இயலாமல் போனமை, தமிழீழ மக்களின் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான அரசுநோக்கிய அரசை உலகுக்கு தெளிவாக்கியுள்ளது.

இதேவேளை சிறீலங்கா தனது இறைமை இலங்கைத்தீவு முழுவதும் செல்லுபடியாகின்றது என்பதை உலகுக்கு வலியுறுத்துவதற்காக, மீட்கப்பட்ட பிரதேசங்களுக்கு வெளியே தனது ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் போலியான தேர்தல் சாவடிகளை அமைத்து, வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றதாகக் காட்டியது.

ஆயினும் சிறீலங்கா அரசு அறிவித்த தேர்தல் வாக்களிப்பு விபரங்களின்படி, மீட்கப்பட்ட பிரதேச மக்கள் தேர்தலை நிராகரித்துள்ளமை தெட்டத் தெளிவாகியுள்ளது.

நல்லூர் 19, மானிப்பாய் 12, பருத்தித்துறை 34, கிளிநொச்சி 66, கோப்பாய் 57, சாவகச்சேரி 79, உடுப்பிட்டி 08, யாழ்ப்பாணத்தில் 1,208 வாக்குகள் பதிவாகிய போதிலும், இவற்றில் 1,151 வாக்குகள் முஸ்லீம் காங்கிரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 57 தமிழ் வாக்குகளே யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...


உள்ளே...

- பலாலி விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் — பக்கம் – 6
- இரண்டாம் கட்ட ஈழப்போரின் நான்காம் ஆண்டின் முடிவில்.. — நடுப்பக்கங்கள்
- நான் தேசியத் தலைவரைச் சந்தித்தது என் வாழ்நாளில் கிடைத்த அதிஸ்டம். — பக்கம் – 7
- தமது தலையில் தாமே மண்ணைப் போடும் யேமானியர். — பக்கம் – 5
- தமிழீழ உட்கட்டுமானம் — பக்கம் – 12
- சிறுகதை :- துணிவு — பக்கம் – 11


## எறிகணை - குண்டுவீச்சுக்களால் உயிரிழப்புகள்

### அச்சுவேலியில்...

சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள், பலாலி இராணுவ முகாமுக்குள் விடுதலைப் புலிகள் நடாத்திய ஊடுருவித் தாக்குதலை அடுத்து, மிகுந்த மனக் கிலேசத்துடன் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் அளவெட்டிப் பகுதியில், தமது ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் உள்ள வீடுகள் எல்லாவற்றையும் குண்டுவைத்தும், பார இயந்திரங்களால் மோதியும் தகர்த்தெறிந்துள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன. அதேவேளை, சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களால் அளவெட்டி, ஏழாலை, மல்லாகம், தெல்லிப்பளை, வல்வெட்டித்துறை,

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

## யாழ் மாவட்டத்தில் பிறந்த குழந்தைகளில் 44.5% மரணம்

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 13,491 குழந்தைகள் பிறந்ததாகவும் அதில் 6,010 குழந்தைகள் மரணித்துவிட்டதாவும் யாழ். செயலக பதிவாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

சிறீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடையினால், ஏற்பட்டுள்ள இக் கொடுமையான விளைவினைக் கண்டு, உலக குழந்தைகள் ஆரோக்கியம் பேணும் நிறுவனங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தில் பிறந்த குழந்தைகளில் 54 வீதம் பெண்குழந்தைகள் எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. போசாக்கின்மை வீதம் 63 லிருந்து மேலும் அதிகரித்துச் செல்லும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும், எனவே உலக சுகாதார நிறுவ

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net





# தெளிவும் துணிவும்

சிறீலங்காப் பாராளுமன்றத்திற்கான தேர்தல், மூவாயிரத்துக்கும் அதிகமான வன்முறைச் சம்பவங்களுக்கான பதிவுகளுடன் நடந்து முடிந்துள்ளது. திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ. தே. க ஐக் காட்டிலும் பதினொரு ஸ்தானங்களை மட்டுமே மேலதிகமாகப் பெற்று, சிறீலங்கா அரசாங்கத்தின் பாராளுமன்றத் தலைமையை ஏற்றுள்ளது. அதேவேளை சிறீலங்காவின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், சிறீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சராகவும், முப்படைகளின் தலைவராகவும், நிறைவேற்று அதிகாரமுள்ள சிறீலங்காவின் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்காவே தொடர்ந்தும் பதவிவகிக்கின்றார்.

இது ஒரு புறமிருக்க, சிறீலங்காவின் இன்றைய அரசியலமைப்புச் சட்டத்திற்குள்ளேயே, திருமதி. சந்திரிகா தலைமையிலான சிறீலங்காப் பாராளுமன்றம் இயங்கப் போகின்றது. அதனை மாற்றுவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை, பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் சிறீலங்காவின் புதிய அமைச்சரவையும், புதிய பிரதமரும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான நடைமுறைச்சாத்தியமான செயற்பாடுகளை எவ்விதம் முன்னெடுக்கப் போகின்றார்கள் என்பது, பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

அதே நேரத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று கூறும் பொழுது, நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் செயற்பாடே முக்கியமான ஒன்றாக உள்ளது. இலங்கைத் தீவின் வரலாற்றில் முறிந்த பேச்சுவார்த்தைகளும், சிதைந்த வாக்குறுதிகளுமே தமிழர் முன்பாகக் குவிந்து கிடக்கின்றன. இந்நிலையில் இயல்பாகவே நம்பிக்கை வரட்சி உணர்வை தமிழர்கள் மத்தியில், வாலாற்றுப் பார்வை தூண்டும் என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை. 1920 களின் மத்திய காலப் பகுதியில் இலங்கைத் தீவிற்கு மூன்று சபைகளுடன் கூடிய சமஸ்டியை முன்மொழிந்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காதான் 1950 களின் இறுதியில் சிங்களம் மட்டும் சட்டத்தையும், தமிழர் எதிர்ப்புக் கோசங்களையும் நிலைப்படுத்தினார். 1960 க்களின் நடுப்பகுதியில் தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியினர்தான், 1980 க்களில் தமிழினத்தையே சங்காரம் செய்யப் புறப்பட்டனர். ஆகவே இன்று சந்திரிகா அம்மையார் அவர்கள், தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே, அர்த்தமுள்ள தீர்வு ஒன்றைக் கொண்டுவர முடியும்.

நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்குத் தெளிவும், துணிவும் வேண்டும். இன்று தமிழீழத் தேசம் தெரிகிறது. தெரிகின்ற அந்தத் தேசத்தை, சிங்கள தேசம் எந்தவிதமான ஒப்பந்தம், உயர் கட்டமைப்பு (Supra Structure) க்கு ஊடாக, தீவின் அமைதிக்கும் சுபீட்சத்திற்குமான பொருளாதார கூட்டிணைப்பாக இயங்கவைக்கலாமென்பதை உணர்ந்து செயற்படுவதன் மூலமே, உண்மையான தீர்வைக் கொண்டு வரலாம். இங்கு அரசியலமைப்பு மாற்றங்கள் என்ன என்பதை விட, அதற்கு இட்டுச் செல்லக் கூடிய மன மாற்றங்களே முக்கியமானவை. மனம் உண்டானால் இடம் உண்டு என்பது தமிழ் மொழியின் அனுபவ மொழி. எனவே இன்று நடப்பது என்ன? என்ற தெளிவுடன் துணிவும் இணையுமானால் மட்டுமே, தீர்வு பிரசவமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் உறுதிக்கும், வெற்றிக்கும் இரு தூண்களாக நிற்பவை இந்தத் தெளிவும், துணிவுமே ஆகும். அன்று தமிழ்த் தலைமைகள் தெளிவற்று சலுகைகள் கேட்டார்கள்; சிலுவைகள் கிடைத்தன. துணிவற்று உயிர் வாழ்ந்த தமிழ்த் தலைமைகள் தமிழர் தாயகப் பூமியும், தமிழர் வாழ்வும், ஆக்கிரமிப்புக்கும் இன அழிப்பிற்கும் உள்ளாகும் சூழ்நிலையைத் தோற்றுவித்தன. இந்த வரலாற்றுத் தவறுகள் தந்த படிப்பினைகளின் தெளிவில், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் தெளிவோடு துணிவுடன் நிற்கின்றனர். 'உயிராயுதம்' தாங்கி நிற்கும் தமிழீழ மக்களை ஏமாற்றவோ அடிமைப்படுத்தவோ எவருக்கும் இனி சக்தியில்லை. தனது உயிரையே தன்னினத்துக்காக, தன் தேசத்துக்காக அர்ப்பணிக்கும் அந்தத் தன்மையே, 'தேசியம்' தோன்றிவிட்டதன், 'மக்கள்' எனும் தன்மையைப் பெற்றுவிட்டதன் அதி முக்கிய சான்று.

ஆகவேதான் 'தமிழ்த் தேசியம்', 'தமிழர் தாயகம்', தமிழீழ 'மக்கள்,' அவர்களது சட்ட பூர்வமான சுயநிர்ணய உரிமை என்பன கனவுத் தொகுதிகள் அல்ல. நனவுக் காட்சிகளே. இந்தக் காட்சிகள் வரலாறுகள். இதனை ஏற்கும் தெளிவு வேண்டும். அந்தத் தெளிவோடு தீவின் இரு தேசியங்களும், எவ்விதம் தீவின் அமைதிக்கும் சுபீட்சத்திற்குமான பாதையை உருவாக்கலாம் எனும் சர்வதேச சட்ட நுட்பங்களை நோக்கும் துணிவு வேண்டும். இது இரண்டும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு வந்தால் மட்டுமே, நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் முயற்சி வெற்றி பெறும். இதனை ஐ. தே. க. வாலோ அல்லது அரசியல் அமைப்புக்களாலோ தடுக்க முடியாது. தீவில் அமைதியைக் கொண்டுவரும் மகத்தான பொறுப்பில் சந்திரிகாவிற்கும் முக்கிய பங்குண்டு. இந்தப் பொறுப்பை நடைமுறையாக்குவதற்கு, விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களைத் தொடங்கி மக்களை நாளாந்தம் பாதிக்கும் யுத்தத்தை நிறுத்தி பொருளாதாரத் தடைகளை அகற்றுவாரேயானால் நம்பிக்கை பிறக்கும். ■

# தமிழீழத்தில் தேர்தல் திணிப்பு ஒரு ஜனநாயக அவலம்

தமிழர் தாயகப் பகுதிகளில் நடைபெற்ற தேர்தலை எவருமே நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலாகக் கணிக்கவில்லை. அரசாங்கமும் தேர்தல் ஆணையாளருமே ஒரு கட்டத்தில், வடபகுதித் தேர்தலை இரத்துச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். பொதுசன ஐக்கிய முன்னணி, வடபகுதி முடிவுகளை நிராகரித்தபோதும், அதனை இரத்துச்செய்யுமாறு நிர்ப்பந்தித்தால், முழுமையான இன்னொரு தேர்தலுக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பம் தோன்றிவிடலாம் என அஞ்சுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடவோ, தேர்தலில் வாக்களிக்கவோகூட, இராணுவத்தாலும் அரச சார்பு ஆயுதம் தாங்கிய குழுக்களாலும் அனுமதி மறுக்கப்பட்ட ஏனைய சில குழுக்கள், இத்தேர்லைக் கண்டித்துள்ளன. வடபகுதித் தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கச் சட்ட ஆலோசனை செய்துவருவதாக அவை தெரிவித்துள்ளன. யாழ். குடாநாட்டில் வேட்பாளராக நின்ற ஒரு குழுவைச் சேர்ந்தவருக்கு, அவரது சொந்த வாக்கைப் போடவே அனுமதி கிடைக்கவில்லை என்றால், நிலைமையை பார்க்கவேண்டியதுதானே. ஒட்டுமொத்தமாக, வடபகுதியில் அரங்கேற்றப்பட்ட தேர்தலை உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களை சேர்ந்த கண்காணிப்புக் குழுக்களே ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனநாயக அவலம் என வர்ணித்துள்ளன.

1986 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் வாக்காளர் பட்டியலின் பிரகாரம் 596, 366 வாக்காளர்கள் யாழ். குடாநாட்டில் உள்ளனர். இவர்களில் 2.3 வீதமானோரே வாக்களித்துள்ளனர். அதாவது, 13, 831 வாக்குகள் மட்டுமே விழுந்துள்ளன. இதில், யாழ். குடாநாட்டிலிருந்து புத்தளத்திற்கு இடம்பெயர்ந்த முஸ்லீம் மக்கள் 2, 098 வாக்குகளை போட்டதாகத் தெரிகின்றது. யாழ்ப்பாண முஸ்லீம்கள், தேர்தலை பகிஸ்கரிக்கத் தீர்மானித்ததாகவும் தேர்தல் திருகுதாளம் செய்தே, இவ்வாக்குகளை சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பெற்றதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. ஏனைய வாக்குகள் ஈ. பி. டி. பிக்கு விழுத்தப்பட்டுள்ளன. குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி முழுமையிலுமே தற்போது இருக்கின்ற வாக்காளர்கள் ஆறாயிரம்தான். அப்படியிருக்க, ஊர்காவற்றுறையில், ஈ. பி. டி. பிக்கு 9, 978 வாக்குகள் விழுந்துள்ளதானது புதுமைதான். இதன் அர்த்தம் என்னவெனில், தீவுப்பகுதி மக்கள் அனைவரும் ஆயுத முனையில் வாக்களிக்கவைக்கப்பட்டுள்ளனர். புலம்பெயர்ந்து வேறு இடங்களில், வாழுகின்ற மக்களின் வாக்குகள் களவாடப்பட்டுள்ளன. கொழும்புக்கு இடம்பெயர்ந்த குடாநாட்டு மக்களில் பெரும்பாலோரும் தேர்தலை பகிஸ்கரித்த நிலையில், ஈ. பி. டி. பிக்கு விழுந்த வாக்குகள் உண்மை நிலைமையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. நல்லூர் 8 வாக்குகள், சாவகச்சேரி 15 வாக்குகள், பருத்தித்துறை 3 வாக்குகள், மானிப்பாய் 4 வாக்குகள், கிளிநொக்கி 2 வாக்குகள் இத்தகைய வாக்குகளைப் பெற்று, ஈ. பி. டி. பியினர் சிறீலங்காப் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அதுவும் பத்துப்பேர். இது ஒரு உலக சாதனையே.

வடக்கோ, கிழக்கோ தேர்தல் நடைபெற்ற தமிழர் தாயகப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அவ்வாறு நடைபெறும் தேர்தல் நிச்சயமாக நீதியும் சுதந்திரமானதுமாக இராது. அதிகார பீடத்தின் ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியே அங்கு வெற்றி பெற முடியும். இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போது EPRLF; சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் போது அதன் உதிரியான EPDP. அரச அனுசரணை இல்லாத EPRLF க்கு ஒரு இடமும் இல்லை. இந்த நிலை வவுனியாவில் DPLF (PLOT) க்குப் பொருந்தும். இராணுவ நெருக்கடி, மிரட்டலுக்குப் பயந்தே தென் தமிழீழ மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதற்கு, கொழும்புப் பகுதிகளில் பெரும்பான்மையான தமிழர்கள் இத் தேர்தலைப் புறக்கணித்தது காட்டுகின்றது. மேலும், தென் தமிழீழ மக்கள் வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில், அரசால் ஆயுதபாணியாக்கப்பட்டு, இராணுவத்தோடு இணைந்து செயல்படும் குழுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை வேற்றினப்பிரதிநிதித்துவம் ஏற்படாத வகையில் அரசாங்கத்தோடு கூட்டுச் சேராத TULF க்கு மக்கள் வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழர் தாயக பகுதிகளிலுள்ள , இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வைக்கப்படும் தேர்தல், பெரும் ஊழல் நிறைந்ததாக இருப்பது அனைவருக்கும் தெரிந்ததாயினும், தேர்தலை அப்பகுதிகளில் வைப்பதன் மூலமும், மக்களை வாக்களிக்கச் செய்வதன் மூலமும் சிலரை சிறீலங்கா பாராளுமன்றத்திற்கு அனுப்புவதன் மூலமும் அடக்குமுறை அரசாங்கம், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிக்கும் என்பது கண்கூடு. சிறீலங்கா அரசினுள்ளும் அதன் பாராளுமன்ற "ஜனநாயக" வழி மூலமும் அதன் அரசியல் யாப்பினுள்ளும் பிரச்சினையைத் தீர்க்கலாம், அப்படிப் பேசித் தீர்ப்பதற்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பலர் உள்ளனர் என்பதை உலகிற்குக் காட்டவே இத்தகு தேர்தல்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடக்கின்றன. இதனையே ஜனநாயக பிரதான நீரோட்டமென்று அரசாங்கம் அழைக்கின்றது. ஆனால் இதற்குச் சமனான, விடுதலைக்கும், ஜனநாயகத்திற்கும், சமாதானத்திற்குமான இன்னொரு நீரோட்டம் விடுதலைப்புலிகளின் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புதிய அரசுக்கான கட்டமைப்புக்களைக் கட்டி வளர்த்துக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை, தம்மீது திணிக்கப்பட்ட இத்தேர்தல் மூலமும் தமிழ் மக்கள் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். ■

— லோதி —

# பலாலித்தளம் மீதான கரும்புலித்தாக்குதல் வெற்றி நாள் நிகழ்ச்சிகள்

பலாலி விமானத்தளத்தின் மையப்பகுதிவரை ஊடுருவி, கரும்புலித்தாக்குதல் நடாத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், அவ்வெற்றியைக் கொண்டாடியும் மூன்று நாள் நிகழ்ச்சிகள் தமிழீழத்தில் நடைபெற்றன.

இது குறித்து யாழ். மாவட்ட அரசியல்துறையினர் விடுத்த அறிக்கையில், சிறீலங்காவின் இராணுவத்தளங்களில் மிகப் பெரிய பலம் பொருந்திய பலாலி இராணுவத்தளத்திற்குள் துணிகரமாகப் புகுந்து விமானப்படைத்தளத்தின் மையப் பகுதிவரை ஊடுருவிச் சென்று, ஊரில் நம்மக்கள் உழைப்பதற்கும், உலாவருவதற்கும், கடலிலே தம் வாழ்க்கைத் தொழிலைச் செய்யவிடாதும் பயணங்கள் மேற்கொள்ளவிடாதும் எம் மக்களின் வாழ்வைப்பறித்த "பெல்" ரக உலங்கு வானூர்தியையும், நெருப்புத்தணலைக்கக்கும் உருக்கு மிருகமாம் எதிரியின் "பவள்" கவச வாகனத்தையும் முற்றாக அழித்து சிங்களப்படையினரில் பலரைக் கொன்றும் வீரசாதனை படைத்து வீரச் சாவைத் தழுவிக் கொண்ட ஆறு கரும்புலி மாவீரர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாகச் சென்ற இரண்டு விடுதலைப்புலி வீரர்களுக்கும், மூன்று நாட்கள் தமிழீழமெங்கும் வீரவணக்கம் செலுத்தி நினைவு கூரப்பட்டுள்ளது.

இம் மூன்று நாட்களும் தமிழீழத்தின் இல்லங்கள் தோறும், இம் மாவீரர்களின் உருவப்படங்கள் வைத்து ஈகைச் சுடரேற்றி மலர் சாத்தியும், தமிழீழத்தின் வீதிகள் தோறும் தோரணம், கறுப்பு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டியும் முக்கிய இடங்களில் கரும்புலிகள் பாடல்கள் இசைத்தும்-

இரண்டாம் நாளில் இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்திகள் கோட்ட மட்டத்தில் முக்கிய வீதிகளூடாக எடுத்துவரப்படுகையில் தமிழீழ மக்கள் தமது இல்ல வாயில்களில் குத்துவிளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செய்தும்-

இறுதி நாளாகிய ஏழாம் திகதி கோட்ட மட்டத்தில் நடைபெற்ற இறுதி வீரவணக்கக் கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டும் தமது இறுதி வணக்கத்தை இம் மாவீரர்களுக்குச் செலுத்தினர். ■

# பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இரண்டு மடங்கான ஆதரவு

சிறீலங்கா பாராளுமன்றத் தேர்தலில், பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இரண்டு மடங்காக ஆதரவு பெருகியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அப்போதைய எதிர்க்கட்சிக்கு 17, 85, 3-69 வாக்குகள் கிடைத்தன. ஆனால், இம்முறை பொது சன ஐக்கிய முன்னணிக்கு 38, 8-7, 799 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 34, 98, 172 வாக்குகளும், கிடைத்துள்ளன.

இதன்படி கடந்த முறையை விட, இரு மடங்கு வாக்குகளை பொது சன ஐக்கிய முன்னணி பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, தேவையற்ற யுத்தத்தினால் ஏற்படுத்திய அழிவுகளே, சிங்கள மக்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இவ்வளவு தூரத்திற்குத் திருப்பியது என அவதானிகள் கருதுகின்றனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகள் தத்தெடுப்பு அங்குரார்ப்பண விழா

ஆயிரம் குழந்தைகள் தத்தெடுக்கும் அங்குரார்ப்பணமும், சுயதொழில் திட்டத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

முல்லை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் திரு. சிவனடியார் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில், பல பொதுத்தாபனங்களைச் சேர்ந்தவர்களும், அரச நிறுவனங்களைச் சேர்ந்தோரும் உரைநிகழ்த்தினர்.

இவ்வுரைகளில் அரச வங்கிகளைவிட, சுயதொழில் திட்டத்தின் கீழ், குறுகிய காலத்தில் அதிகளவு கடன் வழங்கப்பட்டிருப்பதாகவும், சேமிப்பினை ஊக்குவித்து வருவதாகவும், இராணுவ நடவடிக்கை காரணமாக ஆதரவிழந்த குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்குவது பற்றியும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. 1000 குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டம் பற்றியும், தற்போது தெரிவு செய்யப்பட்ட 20 குழந்தைகளின் பல்துறை வளர்ச்சி பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் விளக்கமளித்தார்.

சுயதொழிலுக்காகக் கடன்பெற்று, அதை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியதுடன், சேமிப்பிலும் கூடிய கவனம் செலுத்தியமைக்காக, முன்னுரிமை அடிப்படையில் இருவருக்குத் தலா 1000 ரூபா பரிசில்கள் வழங்கப்பட்டன. ■

# மக்கள் அனைவரும் இணைந்து போராடவேண்டும்

■ பாரதிபுரம் வட்ட பொறுப்பாளர்

"தமிழீழ பிரதேசத்தின் பெரும் பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழீழத்தில் நீதி நிர்வாகத்துறை, பொதுத்துறை காவல்துறையென சிவில் நிர்வாகம் செயற்படுகின்றது".

இவ்வாறு திருமுறிகண்டி கிராம அபிவிருத்தி சங்க புனருத்தாரண கூட்டம், றெட்பானா நிலையத்தில் நடைபெற்றபோது, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய, தமிழீழ விடுதலைப்புலிகளின் பாரதிபுர வட்டப் பொறுப்பாளர், திரவியம் அவர்கள் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இன்றுவரை விடுதலைப்போரில் உயிரிழந்த போராளிகள் ஆறாயிரம் பேர்வரைதான், ஆனால் -சாதாரண பொதுமக்கள் -வீடுகளில், வர்த்தக தொழில்களில் ஈடுபட்டிருந்த நாற்பதாயிரம் பேர்வரை உயிரிழந்துள்ளார்கள்.

"இந்த நாற்பதாயிரம் பேரும் போர்க்களத்தில் நின்று இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடியிருந்தால், இன்று நாம் சுதந்திரமான தமிழீழத்தில் வாழ்ந்திருக்க முடியும்".

"தமிழ் மக்கள் அனைவரும் போர்க்களத்தில் நின்று சிங்கள ஏகாதிபத்தியத்தை முறியடிக்கப் போராளிகளாக -போராட்டத்திற்குப் பங்களிப்பவர்களாக முன்வர வேண்டும்" எனவும் தெரிவித்தார். ■

# மல்லாகம் குடியிருப்புக்கள் மீது அகோர விமானக் குண்டுவீச்சு

## இருவர் பலி, 9 பேர் படுகாயம்

மல்லாகம் பகுதியில், மக்கள் குடியிருப்புக்கள் மீது அண்மையில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா விமானமொன்று மேற்கொண்ட அகோர குண்டுவீச்சுத் தாக்குதலில் இருவர் பலியாகியதுடன், ஒன்பது பேர் படுகாயம் அடைந்தனர். ஒரு வீடு தரைமட்டமாக்கப்பட்டதுடன், பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

அண்மையில், அதிகாலை 2.15 மணியளவில் பேரிரைச்சலுடன் தாழப் பறந்துவந்த புக்காரா விமானமொன்று, 15 நிமிடநேரத்தில் ஏழு குண்டுகளை இலக்கின்றி வீசித்தள்ளியது. இவற்றில் ஒன்று, வயல்வெளியில் ஆழப்புதைந்து, வெடிக்காத நிலையில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டது.

இக்குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி, படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்ட பதினொரு பேரில், இருவர் யாழ். போதனா மருத்துவமனையில் மரணமானார்கள். ஏனைய ஒன்பதுபேரும், சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதேவேளை, பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பல பயன்தரு மரங்கள் வெட்டி வீசப்பட்டதுடன், கால்நடைகள் பலவும் கொல்லப்பட்டன.

இக்குண்டு வீச்சுக்கு முன்னதாக, அதிகாலை 12.15 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று இப்பகுதியை வட்டமிட்டுச் சென்றதுடன், அதிகாலை 1.30 மணியளவில் விமானமொன்றும் அப்பகுதியை வட்டமிட்டுச்சென்றது. ■

# "விமானம் என்னைத் தாண்டிய மறுகணம் கண்ணைப் பறிக்கும் ஒளி பளிச்சிட்டது"

## ■ குண்டு வீச்சில் உயிர் தப்பியவர் தகவல்

"தலைக்கு மேலால் வீட்டுக் கூரையை உரசிக்கொண்டு செல்வதுபோல, புக்காரா பேரிரைச்சலுடன் என்னைத் தாண்டிய போது, பயத்தினால் அருகில் நின்ற தென்னை மரத்தை இறுகக்கட்டிப் பிடித்துக்கொண்டேன். மறுகணம் கண்ணைக் கூசவைக்கும் வெளிச்சம் படலையில் பளிச்சிட்டது. வானம் இடிந்து தலையில் வீழ்ந்தது போல, பாரிய வெடி ஓசை கேட்டது. தொடர்ந்து, என்மீது மண்ணும் கற்களும் வீழ்ந்தன".

இவ்வாறு அண்மையில் புக்காராக் குண்டுவீச்சின்போது, மயிரிழையில் உயிர்தப்பிய, திருமதி வாதவூரர் தெரிவித்தார். இவர் நின்ற இடத்திலிருந்து, சுமார் 25 யார் தூரத்தில் இக்குண்டு வீழ்ந்து வெடித்தது. அவரது வீடு பலத்த சேதம் அடைந்ததுடன், அந்த வளவில் நின்ற தென்னை மரங்கள் வெட்டி வீசப்பட்டும், அடியோடு பெயர்த்தெறியப்பட்டும் காணப்பட்டன. அருகில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்திருந்தன. சம்பவம் பற்றி அவர் மேலும் விபரிக்கையில்:

"எனது கணவர் கொழும்பு சென்றுள்ளதால், நானும் மகளும் எனது தங்கை வீட்டில் இரவு சென்று உறங்குவது வழக்கம். அன்றும் அவ்வாறே தங்கை வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை, புக்காரா விமானம் வட்டமிட்ட சத்தம் கேட்டது. அடுத்து எங்கோ குண்டொன்றும் வீழ்ந்து வெடித்த சத்தம் கேட்டது. உடனே தங்கையிடம் வீட்டுக்குச்சென்று, உடுப்புப் பாக்குகளை எடுத்துக்கொண்டு வருகின்றேன் என்றுசொல்விட்டு, வீட்டைநோக்கி வந்தேன்.

நான் வீட்டை அண்மித்தபோது புக்காராவின் இரைச்சல் அதிகரிக்கவே பயத்தில் தென்னை மரத்தை இறுகப்பற்றிக்கொண்டேன். அப்போது எனது வீட்டுப் படலையடியில் பெரும் வெளிச்சத்தை அடுத்து, பாரிய ஓசையுடன் குண்டுவெடித்துச் சிதறியது. தென்னை மரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த நான், அப்படியே சரிந்து வீழ்ந்துவிட்டேன்" என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "வீட்டுக்குச் சென்ற என்னைத் தேடி, எனது தங்கையும் மகளும் வந்தபோது, மண்மூடிய நிலையில் உடலெங்கும் புழுதியுடன் கிடந்த என்னைக் கைத்தாங்கலாகத் தங்கையின் வீட்டுக்குக் கொண்டு சென்றார்கள். விடிந்தும் விடியாத பொழுதில், வந்து பார்த்தபொழுது, வளவில் நின்ற தென்னைகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்ட நிலையில் பாதையில்கிடந்ததை முதலில் கண்டேன். பின்னர் வீட்டை அண்மித்தபோது, கட்டியிருந்த ஆடு வயிறு பிளந்தநிலையில் இறந்து கிடப்பதையும் கதவுகள் உடைந்து கூரையே இல்லாத நிலையில் வீடு சிதறிக்கிடப்பதையும் கண்டேன்" என்றார். ■

# சூழல் பாதுகாப்பு அலுவலகம் மணற்காட்டில் திறப்பு

மணற்காட்டில் அண்மையில் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் புதிய அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியினைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர், மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த, திரு. அரசண்ணா அவர்கள் பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்துவைக்க, நிதர்சனப் பொறுப்பாளர் திரு. ஜவான் அவர்களால் புதிய அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியினைத் தலைமையேற்று நடாத்திய, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதி பொதுமுகாமையாளர் அங்கு உரையாற்றுகையில், "இந் நிறுவனம் தனியே மணற்காட்டின் சூழலைப் பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்படவில்லை; இது தமிழீழத்தின் சூழலைப் பாதுகாப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்போடு, இச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் தமிழீழத்தின் எதிர்காலச் செல்வங்களை ஒரு மாசற்ற சூழலில், வாழ வழிவகுக்கும்" எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார். இந்நிகழ்வில் அப்பகுதியைச் சார்ந்த பொதுமக்களும் நிறுவனத் தொழிலாளர்களும் மற்றும் அரசியல் துறையினரும் கலந்துகொண்டனர். ■

# உணவு விநியோகத்தில் அதிகாரிகள் ஊழல்

கொழும்பில் சிறீலங்கா அரச அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கான கப்பல் மூலமான உணவு விநியோகத்தில் ஊழல் புரிகிறார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான கப்பல் மூலமான உணவு விநியோகம் சிறீலங்கா புனர்வாழ்வு புனர்நிர்மான அமைச்சின் கீழ் உள்ளது. அத்தியாவசியத் தேவைகள் ஆணையாளர் இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ளார்.

கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி அறிவித்தல்கள் விடுவிக்கப்படவில்லை எனவும், அரச அதிகாரிகள் கேள்வி அறிவித்தல் விடுப்பதைத் திட்டமிட்டுத் தடுத்தனர் எனவும் தெரிய வந்துள்ளது. நாளொன்றிற்கு 3000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் கப்பலொன்றிக்கு வாடகை வழங்கப்படுகிறது. ஆனால் 2400 டொலர் வாடகைப் பணமாகப் பெற்று கப்பல் சேவையை நடாத்த பல கப்பல் நிறுவனங்கள் தயாராக இருந்ததாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடமொன்றிற்கு 40 மில்லியன் ரூபா கையாடப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. ■

# வடமராச்சி கிழக்குப் பகுதியில் மருத்துவமனை திறப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் நலன்கருதி, விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் அனுசரணையுடன், நோயாளர் நலன்புரிச் சங்கம் அங்கு மருத்துவமனை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. 'அன்பு மருத்துவமனை' எனப் பெயரிடப்பட்டுள்ள இம்மருத்துவமனையின் திறப்பு விழாவன்று, தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

கடற்புலிகள், நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், மாவீரர் அன்புவின் தாயார், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர், பொதுச் சுகாதார சேவைப் பொறுப்பாளர், மருத்துவப் பிரிவு ஆலோசகர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இம்மருத்துவமனையில், விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவால் பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# காதலித்துக் கைவிட்டவருக்கு தண்டனை விதிப்பு

காதலித்துக் கைவிட்ட குற்றத்திற்காக, இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறைத் தமிழீழ நீதிமன்றம் இருபதினாயிரம் ரூபா குற்றமும் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்கியுள்ளது.

கரவெட்டி மேற்கு சாண்டில் குளத்தடியைச் சேர்ந்த யுவதி ஒருவரை, கரவெட்டி சாமியன் அரசடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், காதலித்துக் கைவிட்டமை தொடர்பாகப் பருத்தித்துறைக் காவல் துறையினர் நீதிமன்றில் இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மன்று விசாரனையின் பின்னர், அவரைக் குற்றவாளியாகக் கண்டு, நீதியாளர் பிரதீபா இத்தண்டனையை வழங்கினார். ■

# தமிழீழ சட்டக்கல்லூரி திறந்துவைப்பு

தமிழீழத்தின் முதலாவது சட்டக்கல்லூரி அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வின்போது, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கை நிதித்துறையைச் சேர்ந்த பாண்டியன் ஏற்ற, சட்டக்கல்லூரியின் பெயர்ப் பலகையை கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார். தமிழீழ சட்டக் கல்லூரியை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து, தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். ■

www.tamilarangam.net



# துணிவு...

றிற்கு ஆச்சரியமாக இருந்தது, மனைவி வந்து சேர முன்னரே அவசரமாக வினவினார் ஆச்சி எங்க ஏன் அவாவ விட்டிட்டு வாறாய்?

"ஆச்சி தன்ர வீட்ட விட்டு ஒரு இடமும் வரமாட்டாவாம்" மனைவிக்கு கவலை கண்கள் குளமாயின. சேகரரிற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. உடல் நடுங்கத் தொடங்கியது. அவருக்கு ஆச்சியின் குணம் தெரியும். ஆனாலும், இந்த நேரத்தில் அவள் இப்படிச் சொல்வாளென்று அவர் எதிர்பார்க்கவில்லை. தான் போய் கேட்டுப் பிடித்திழுத்து வருவோமென்றால் பயம், சரியான அவசரம். எந்தக் கலவரம் வந்தாலும் ஆச்சி தன் சொந்த மண்ணை விட்டு அசைந்தவளல்ல. அவராலும் ஒன்றும் செய்ய முடியாதநிலை. திட்டியபடி சைக்கிளை அவசரமாக வெளியே தள்ளினார். மனைவியும் பிள்ளைகளும் கலகத்துடன் பின்னால் விரைந்தனர்.

"இந்தப் பழசோட நான் படுற பாடு... கொழுப்புக் கூடிப்போய் திண்டாடுது. ஆரும் சனங்கள் கண்டால் கிழவியக் கூட்டிக் கொண்டு போறது கரைச்சல் எண்டுதான், நாங்கள் விட்டிட்டுப் போறமெண்டு சொல்லப் போகுதுகள். எக்கணம் ஆமிக்காறங்கள் உள்ள வந்தாங்களெண்டா கண்ட துண்டமா வெட்டிக் கொத்தப் போறாங்கள்" எனக் கடு கடுத்தார். ஆனால், அவர் மனதில் பயமும் துக்கமும் சேர்ந்து கொண்டது.

ஆமிக்காறங்கள் வந்தாங்களெண்டால் கிழவிய என்ன செய்வாங்களோ?.
பக்கத்தில பங்கரும் கிடக்கு அவங்கள் கண்டாங்களெண்டால் ஒரு உறவும் பக்கத்தில இல்லை கிழவி அநாதையாத்தான்.....
மனைவிக்கும் இதே கவலைதான். பயத்தோடு கவலையையும் சுமந்து கொண்டு அவர்கள் நால்வரும் வேகமாகப் பிரதான வீதியில் ஏறிக்கொண்டனர்.

இராணுவம் கிராமத்தில் புகும் செய்தி அறிந்து வீதி வழியே மக்கள் கூட்டங்கள் அகதிகளாகி சென்று கொண்டிருந்தார்கள். பலர் பயமிகுதியால் அவசரத்தில் கையிற்கு அகப்பட்டவற்றைத் தூக்கிக் கொண்டு உடுத்த உடையுடன் ஓடிக் கொண்டிருந்தார்கள். சிலர் அதிகாலையிலே எழுந்ததுமே முகம் கூடக் கழுவிக் கொள்ளாமல் நாலு கால் பாச்சலில் விரைந்தார்கள். இவர்களுக்கு தம் இருப்பிடத்தை விட்டு எங்கே சென்று தங்குவது என்ற பிரச்சினை விஸ்வரூபமெடுத்தாட பாதுகாப்புத் தேடி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

சேகரரிற்கும் மனைவிக்கும் அவர்கள் போகும் போக்கில் செல்வதற்கு மனமில்லை, வீட்டிலிருக்கும் ஆச்சியே அவர்களைக் குழப்பிக் கொண்டிருந்தாள். பிள்ளைகளுக்கு ஒரு புறம் பயம், மறுபுறம் ஆச்சியின் நினைவு. அவாவும் எங்களுடன் வரவில்லையே வீட்டில் என்ன செய்கிறாவோ என்ற ஏக்கத்தில் பின் தொடர்ந்தார்கள்.

தொலைவில் எங்கோ வெடித்த குண்டுச் சத்தம் அவர்களை அதிர வைத்தது. வானில் பலத்த சத்தத்துடன் பறந்து கொண்டிருந்த கெலி அதிகாலையிலே சிப்பாய்களை தரையிறக்கிவிட்டு மக்களை அழிக்க முயன்று கொண்டிருந்தது. அவ்வரக்கர்களை எதிர்த்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போராளிகளைக் கீழே பதிந்து சுட முயன்றது. ஆனால், போராளிகளின் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளினால், எங்கே கீழே வீழ்ந்து விடுவேனோ என்ற அச்சத்தினால் மேலெழுந்தது.

'போக்கறுந்து போவான்கள் கெலியாலையும் பம்பராலையும் கொண்டு வந்து கொட்டினால் எங்கட பிள்ளையளும்தான் என்ன செய்யிறது. எங்கட பெடியளிட்டையும் ஒரு கெலியிருந்தால் இப்ப மேலேயே துலைஞ்சாங்கள்' என முதியவர் ஒருவர் கடுகடுத்துக் கொண்டு அவர்களைத் தாண்டிச் சென்றார்.

அவர்கள் வீட்டிலிருந்து வெகு தூரம் வந்து விட்டார்கள். சேகரரிற்கு அரைகுறையாய் வெட்டப்பட்டிருக்கும் பங்கர் மறுபடியும் ஞாபகத்திற்கு வந்தததும், இதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது. பலத்த சிந்தனையின் பின் ஒரு முடிவுக்கு வந்தவராக 'இனி இஞ்சால பயமில்ல, நீங்கள் மெல்லமா நடந்து போங்கோ. நான் பட்டெண்டு வீட்ட போட்டு ஓடியாறன்' என்றபடி சைக்கிளில் கட்டியிருந்த பொருட்களை அவிழ்த்தார்.

'இப்ப ஏனப்பா அங்க போறியள்? ஆமிக்காரங்களும் கிட்ட வந்திருப்பான்கள், நீங்கள் பேசாம வாங்கோ' என்று தடுத்தாள் மகள்.

'இல்லப்பிள்ள அவங்கள் இப்ப தூரத்தான் எங்கேயும் நிப்பாங்கள், நான் போய் ஆச்சியையும் கூட்டிக் கொண்டு, பங்கரையும் மளமளவெண்டு மூடிப்போட்டு ஓடியாறன்' என்று கூறியபடி சைக்கிளைத் திருப்பினார்.

'ஆச்சி அப்போதே வரமாட்டன் எண்டவா, இப்ப வாறாவே'? என்றான் மகன். மனைவிக்குப் பயமேற்பட்டது. எதுவும் பேசாது அவ்விடத்திலேயே தரித்து நின்றாள். பிள்ளைகளுக்கும் அவ்வாறு உணர்வேற்பட்டிருக்க வேண்டும்.

'அம்மா வாங்கோ, அப்பா வருமட்டும் இந்த மரத்துக்குக் கீழ இருப்பம்' மகன் அழைத்தான்.

'மூண்டு நாளாய்ப் பாடுபட்டு நாங்கள் தற்பாதுகாப்பாய் இருக்கோணுமெண்டு சொல்லிக் கொண்டு, தடுக்கத்தடுக்க பங்கர் வெட்டினாரே! இப்ப உதாலதான் ஆச்சிக்கும் வீட்டிற்கும் ஆபத்து வரப்போகுது' என்று புலம்பியபடி மரத்தின் கீழ் அமர்ந்தாள்.

'அம்மா ஒன்றுக்கும் கவலைப்படாதேங்கோ, அப்பா போறார் தானே ஆச்சியைக் கூட்டியருவார்' என்று மகன் தேற்றினான்.

அவனுக்கும் உள்ளூரப்பயம் அப்பா பங்கரை மூடிவிட்டு ஆச்சியைக் கூட்டிக்கொண்டு வாறதுக்கிடையில் ஆமி வந்து விட்டால் என்ன நடக்குமோ? அப்படி மூடிவிட்டு வந்தால் பிறகு நாங்கள் போயிருக்கிறதுக்கு தற்பாதுகாப்பு என்று அவன் கவலைகள் நீண்டது. அவனுக்குத் தனக்கு தெரிந்தளவிலான கவலைகள்.

வீதிகளிலோ சந்திகளிலோ மக்கள் நடமாட்டம் இல்லை. சுதந்திரத் தாகம் கொண்ட போராளிகள் மாத்திரம் எதிர்த் தாக்குதலை எதிர்பார்த்து அங்கு உலாவிக்கொண்டிருந்தார்கள். மற்றப்படி வீதியெங்கும் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. ஆச்சியைக் கூட்டிவர வீடு நோக்கிப் போன சேகரர் என்ன நினைத்தாரோ? சைக்கிளைத்திருப்பிக் கொண்டு மனைவியும் பிள்ளைகளும் நின்ற இடத்திற்கு வந்தார்.

'வாங்கோ போவம். ஆச்சியும் அங்க ஒருத்தரும் துணையில்லாமல் தனிய இருக்கிறா'!

'எங்க வீட்டை திரும்பிப் போகவா'? மனைவி நடுங்கும் குரலில் கேட்டாள். 'ஓம்..... அங்க எங்களுக்காக நிண்டு போராடுகிற போராளிகளுக்கும் ஏதாவது உதவியைச் செய்வம். நாங்கள் உங்கால எங்க போய்த் தங்கிறது? எங்கட வீட்டபோயிருந்து போராளிகளுக்கும் ஏதாவது உதவி செய்தமெண்டால் போராளிகளுக்கும் ஒத்தாசையாய் இருக்கும். ஓட ஓட துரத்திறவனுக்கும் சுகம். வாருங்கோ போவம்'.

அவர் முகத்தில் பிறந்த உறுதி அவர்களிடமும் பரவுகின்றது.

வானத்தை அண்ணாந்து பார்க்கின்றனர்.

கெலி எங்கோ ஒரு தொலை தூரத்தில் வட்டமிடுகின்றது. ■

# சுதந்திரத் தமிழீழத் தாயகத்தில் சீதனக்கொடுமை இருக்காது

"எமது சுதந்திர தாயகமான தமிழீழத்தை முழுமையாக மலரவைக்கும்போது, இந்த மண்ணிலே சீதனக்கொடுமைகள், முறைகேடுகள் இல்லாதொழிய வேண்டும். எந்த ஒரு பிரஜையும் சீதனம் என்கின்ற மாயையில் சிக்கி, அல்லல் உறுவதைத் தவிர்த்து, நல்ல சமுதாயத்தை உருவாக்கி, இப்படியான கொடுமைகளின்றி வாழ, மக்களாகிய நீங்கள்தான் ஒத்துழைப்பினை நல்கவேண்டும்".

## "சீதனம் வாங்குதல் இனியும் தொடர்ந்தால், இயந்திர வாழ்வே இங்கினித் தங்கும்".

இவ்வாறு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில், சங்கானைவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ந. மதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சீதன ஒழிப்புப் பிரச்சாரக் கருத்தரங்கில், யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. சி. எழிலன் உரையாற்றுகையில் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது, "சீதனம் என்பது மிகவும் சிக்கலான சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. முன்னைய காலங்களில், திருமணத்தின்போது பெண்ணுக்கு அவரது பெற்றோர் தாய்வழிச் சொத்தாக வழங்கும் உடமைகள், 'சீதனம்' என வழங்கப்பட்டது. ஆனால் இன்று அந்த முறை மாறி, மணப்பெண்ணுக்கு மட்டுமன்றி, மணமகனுக்கும் அவனின் குடும்பத்தாருக்கும் பல்வேறு முறைகளில் பணமாகவும், சொத்துக்களாகவும் பரிமாறும் முறையாக சீதனக் கொடுப்பனவுகள் மாறியுள்ளன.

எமது தேசத்தைப் பொறுத்தவரை சீதனப் பிரச்சினையானது, பெண்களின் திருமண வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய காரணியாக அமைந்து விட்டதுமல்லாமல், பொருளும், நகையும், பணமும் ஒரு பெண்ணின் திருமண வாழ்வைத் தீர்மானிக்கும் மிகப்பெரிய சக்தியாக வளர்ந்துள்ளது.
இந்தச் சீதனக் கொடுமையின் தாக்கமானது, திருமணத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி பெண் இனத்தை பலவகையிலும் கடுமையாகப் பாதித்துவருவதோடு, ஆண்களையும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்திவருகின்றது. பல பெண் சகோதரங்களுடன் பிறந்த ஆண் ஒருவர், தனது சகோதரிகளுக்குத் திருமணம் செய்துவைக்க, சீதனவசதி இல்லாத நிலையில், அவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் காலம்பூராவும் உழைத்துப் போடவேண்டிய நிலைக்கு ஆளாகி, தனது ஆசைகள், அபிலாசைகளை விட்டெறிந்து, இல்லற வாழ்வையே வெறுக்கின்ற நிலைக்கு அந்த ஆண் ஆளாகுகின்ற அவலநிலை ஏற்படுகின்றது.

நடந்தவற்றையும், வரலாற்றையும் விடுதலைப் புலிகளாகிய நாம், புரட்டிப்பார்க்கின்றவர்கள். எமது சுதந்திர பூமி மலர்ந்த பின், இங்குள்ள பெண்கள் சீதனம் என்ற கொடுமையை எதிர்நோக்க நாம் இடமளிக்கமாட்டோம். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஒத்துவராத இந்தப் பிற்போக்குத்தனமான பிரச்சினையை இல்லாதொழிப்பதில், நாம் உறுதியான கொள்கையுடன் நிற்கின்றோம். இங்குள்ள மக்களின் முழுமையான ஒத்துழைப்புடனும், பங்களிப்புடனும் அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களுடனும், கருத்துக்களுடனுமே இந்த சீதனப் பேயை எமது சமுதாயத்திலிருந்து விரட்டியடிக்க முடியும். எனவே இந்த அரும்பெரும் முயற்சியினை நாம் வென்றெடுப்பதற்கு பொதுமக்களாகிய உங்களது ஆதரவையும், கருத்துக்களையும் வேண்டி நிற்கின்றோம்" எனத் தெரிவித்து, அங்கு கூடியிருந்த மக்களின் கருத்துக்களையும் கேட்டு அறிந்துகொண்டார். நிகழ்வில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி பொன்னிலாவும் உரையாற்றினார். இறுதியில் வீடியோப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. ■

# சிங்கள இளைஞரை காப்பாற்றவே இந்திய இராணுவத்தை அழைத்தோம்

'வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காக வருடாந்தம் செலவிடும் பணம், மகாவலித் திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத்தின் பாதியாகும். அமைச்சரவைக்கும் கூறாமல் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதன் பலாபலனை இன்று அனுபவிக்கின்றோம். எமது இளைஞர்கள் போரில் பலியாவது தொடர்வதை அனுமதிக்கக் கூடாது. இதற்காகவே இந்தியப் படைகளை இங்கு வரவழைத்தோம்". இவ்வாறு காமினி திசநாயக்கா அண்மையில் மாத்தறையில் நடந்த ஐ.-தே.க கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.
வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு தீர்வுகாணவே இந்தியப் படைகளை அழைத்தோம். நோயைச் சுகப்படுத்த கசப்பான மருந்தையேனும் பாவிக்க வேண்டும். இன்று நாட்டில் வேலையில்லா திண்டாட்டமும் வடக்கு -கிழக்கு பிச்சினையுமே உள்ளது எனவும் காமினி திசநாயக்கா தெரிவித்தார். ■

# இந்திய உறவுக்கு முக்கியத்துவம் மனித உரிமை ஒப்பந்தங்களில் கையெழுத்து

## ■ சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் தகவல்

சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்தியாவுடனான உறவுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும், அதேவேளை மற்றைய தெற்காசிய நாடுகளுடனும் உறவை வலுப்படுத்தும் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் சிறீலங்கா, தான் கையெழுத்திடாது விட்டுள்ள மனித உரிமைகள் பாதுகாப்பு சம்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தங்களிலும், ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட உள்ளதாக அறிவித்துள்ளார். இவ் ஒப்பந்தங்களில் சிறீலங்கா கையெழுத்திடும், ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு, பாதிக்கப்படும் தனிப்பட்டவர்களும் மனுச் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது.

மனித உரிமைகளைப் பேணப் போவதாகக் கூறும் சிறீலங்காவின் புதிய அரசாங்கத்தின் கருத்துக்களை வரவேற்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு அவதானிகள், சிறீலங்காவின் புதிய அரசாங்கம் வடக்கு -கிழக்கு பகுதிகள் மீதான மனிதாயமற்ற சட்டங்களையும் தடைகளையும் அகற்றுவதன் மூலமும், தமிழர்களை தமிழ் இனத்தவர் என்பதற்காகக் கைது செய்தல் சித்திரவதை செய்தல் போன்றவற்றை கைவிடுவதன் மூலமுமே மனித உரிமைகள் பற்றிய தனது உண்மையான ஈடுபாட்டை நிரூபிக்க முடியும் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்கள். ■

# இந்தியா "தடா" சட்டத்தை அகற்றுகிறது

இந்தியாவில் எவரையும் கைது செய்து, விசாரணையின்றி காவலில் வைத்திருப்பதற்கு பொலிசாருக்கு உதவி வந்த 'தடா' சட்டத்தை இந்தியப் பாராளுமன்றம் 1995 சித்திரை மாதம் முதலாம் திகதியிலிருந்து விலக்கிக்கொள்வதாக அறிவித்துள்ளது. இந்த தடா சட்டத்தைப் பயன்படுத்தி மாநில அரசுகள், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம், இதனை அகற்றுவதென்ற முடிவை இந்திய லோக் சபையில் அறிவித்துள்ளது.

சிறீலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச்சட்டம், தடா சட்டத்தைப் போன்ற கொடுமையான ஜனநாயக பறிப்பு சட்டம் எனவும், இந்தியா 'தடா' சட்டத்தை அகற்றுவதுபோல, சிறீலங்காவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றுவது மனித உரிமை மேம்பாட்டுக்கு அவசியம் என சர்வதேச தென்னாசிய ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமது தலையில் தாமே மண்ணைப் போடும் யேமானியர்

பாலகுமாரன்

"யேமனின் சனாதிபதியாகவுள்ள சாலே, சதாம் குசையினின் வழியிலே இப்போது நடைபோடுகின்றார். தென் யேமன் மக்களின் நியாயமான கோரிக்கைகளை புறம் தள்ளிவிட்டு, இராணுவ பலம் மூலம் அம் மக்களை அவர் இன்று அடக்க முற்படுகிறார். இருபதாம் நூற்றாண்டு முடியப்போகும் இன்றைய நிலையிலும் சருவாதிகாரப் போக்குள்ள - மற்ற நாடுகள் மேலும்,ஆதிக்கம் செலுத்தும் நோக்குள்ள ஆட்சியாளர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள்"

இப்போது இன்னுமொரு சதாம்குசைன் வளைகுடாப் பகுதியில் தோற்றம் பெறுகிறார். 13 வருடங்களாகவே வட யேமனின் சர்வாதிகாரியாக இருந்து இரண்டு யேமன்களும் இணைந்த பின், யேமனின் சனாதிபதியான அலி அப்துல்லா சாலே அப்படியானதொரு தோற்றத்தையே இப்போது கொடுக்கிறார். தென் யேமனின் தலைநகரமும், செங்கடலின் வாவியில் உள்ளதும், மேற்காசியாவின் கொங்கொங் என முன்னர் அழைக்கப்பட்டதுமான பிரதான துறைமுகமான ஏடன் நகரை, எப்படியேனும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் அவர் விடாப்பிடியாக இருந்து தென்யேமன் மீது படையெடுத்து, சென்ற மாதம் அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார். அவரின் இந்தப் போக்கிற்கு இதுவரையில் ஈராக் மட்டுமே உத்தியோக பூர்வமாக ஆதரவு தெரிவித்துள்ளது. ஏன் என்றால் 'பாலைவனப் புயல்' வீசிய வளைகுடாப் போரின் போது, சதாமிற்கு ஆதரவாக சாலே செயற்பட்டவராவார். ஆனால் யேமனுக்கும், ஈராக்கிற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், ஈராக் போல வளங்களோ வசதிகளோ யேமனில் இல்லை. வறுமையின் பிடியிலேயே இன்னமும் உள்ளது. எனவே இப்போது யேமனில் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடி, யேமன் மக்களுக்கு பெருத்த இன்னல்களைக் கொடுத்துள்ளது. அது மட்டுமன்றி, யேமனில் அடைக்கலம் புகுந்த பல்லாயிரக்கணக்கான சோமாலிய அகதிகளுக்கும் பெருத்த துன்பத்தை விளைவிப்பதாகிவிட்டது.

### பலனளிக்காத போர் நிறுத்தம்

தென்யேமன் மீது, வடயேமன் தொடுத்த போரை நிறுத்த எடுத்த முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. ஐ. நா உட்பட எகிப்து, யோர்தான், ஓமான், சவுதி ஆகிய பல நாடுகளும் எடுத்த முயற்சிகள் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முடியவில்லை. அதே வேளை, போரின் தீவிரம் வலுத்துக்கொண்டே வந்தது. ஏடனைக் கைப்பற்றுதல் அல்லது சுற்றி வளைத்தல் என்கிற இலக்கினை அடைவதற்கான தனது முயற்சியை, பேச்சுவார்த்தைகள் நடக்கின்றபோதும் சாலே கைவிட்டுவிடவில்லை. பேச்சுவார்த்தைகள் என்பது காலத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பாக சாலே பயன்படுத்துவதாகக் கூறிய தென் யேமன் தலைவரான அல்பேய்த் தென் யேமனை, வடயேமனிலிருந்து பிரிந்த தனி நாடாக அறிவித்திருந்தார். போர் வலுத்துக்கொண்டுவரவே சவுதி, ஓமான், குவைத், பகுரேன் போன்றவை, பெருமளவு அகதிகள் தம்பகுதிக்குள் வரப்போவதை எண்ணி, அச்சம் தெரிவித்தனர்.

### யேமனின் வேறுபட்ட வரலாற்றுப் பின்னணி

யேமனின் முன்னைய வரலாறே இன்றைய மோதலின் பின்னணியை விளக்கும். ஒரு கலவையான வரலாறு யேமனுடையது. ஒன்றாக இருக்கவேண்டுமென்பதில் யேமானிய மக்கள் விருப்பமுடையவர்களாக இருந்தபோதும், அதற்கான வரலாற்று வாய்ப்பு இல்லையென்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனென்றால் வட, தென் யேமன்களுடைய சமூக, அரசியற் தோற்றப்பாடுகளும், அவை படிப்படியாக வளர்ந்த விதமும் முற்றிலும் வேறு வேறானவை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனென்றால், துருக்கியரின் ஒட்டோமென் சாம்ராச்சியத்தின் கீழ், முந்நூறு வருடங்களாக இரு யேமன்களும் அடிமைப்பட்டுக் கிடந்தன. எனினும் தென் யேமனின் ஏடன் நகரை 1839 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் கைப்பற்றியதோடு, வரலாறு வேறாகியது. அதேவேளை வட யேமனோ, முதலாம் உலகப் போரின்போது, துருக்கியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்த காலம்தொட்டு, பழமைவாதப் போக்குள்ள பூர்வீகக்குடிகள் கையிலே வட யேமன் ஆட்சி அதிகாரம் இருந்து வந்துள்ளது.

ஆனால் தென் யேமனோ, 1967 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைபெற்றபின் முற்றிலும் வித்தியாசமான போக்கில் செல்லலாயிற்று. பொதுவுடமை வழியில் அரபுப் பகுதியில் முதலாவது மாக்சிய அரசு என்று கூறப்படும் வகையில் தென் யேமன் அடிபோட்டது. இதன் காரணமாக, தென் யேமனின் சமூக பண்பாட்டு முறைமைகள் பெருமாற்றம் கண்டன. சோவியத்தின் அரவணைப்பில் தென் யேமன் பெருமளவு மதச் சார்பின்மை நாடாக, பெண்கள் இஸ்லாமிய வழக்கங்களிலிருந்து பெரிதும் விடுவிக்கப்பட்டவர்களாக, அறிவியல் வளர்ச்சி பெற்றோராக மாறினர். தென் யேமன் பாதுகாப்புக் கடமைகளில் பெண்களும் முக்கிய பங்கேற்றனர். ஆனால், வட யேமன் கதையோ வேறானது. அங்கு இஸ்லாமிய மதவாதம், பூர்வீகத் தன்மை வாய்ந்த வழக்க முறைகள் கோலோச்சுகின்றன. இந்த வேறுபாடுகள் இன்றளவும் நீக்கப்படாததாலும், ஏற்கனவே நடந்த பல மோதல்களும் வட, தென் யேமன்களிடையே நிரம்பிய கசப்புணர்வை வளர்த்து இருந்தன.

### யேமனியக் குடியரசின் முதல் பொதுத் தேர்தல்


இத்தகைய நிலையிலே சோவியத் சாம்ராச்சிய வீழ்ச்சியோடு எல்லாமே மாற்றம் கண்டன. சோவியத்தின் பாதுகாப்பற்ற நிலையில் தென் யேமன் நிலையும் தளர்ச்சி கண்டது. ஏனென்றால், வட யேமனோடு ஒப்பிடும் போது, தென் யேமன் எல்லா வகையிலும் சிறியது. ஏறத்தாள பத்து மில்லியன் மக்கள் வாழும் நிலையில் 2 மில்லியனுக்கும் கூடுதலாகவே தென் யேமனியர் உள்ளனர். இத்தகைய நிலையிலே இணைப்பு முயற்சி எடுக்கப்பட்டு அரபு உலக ஆதரவோடு 1990 ஆம் ஆண்டு இரு யேமன்களும் ஒன்றாக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட யேமனிய குடியரசாகியது. பெரும் எதிர்பார்ப்புக்களை யேமனியக் குடியரசு தொடக்கத்தில் ஏற்படுத்தியது. ஆனால், இன்று எல்லாமே பொய்த்துவிட்டன. முழு உலகமுமே வியக்கும் வண்ணம், அரபு உலகிலே முதல் முறையாக மிகச் சுதந்திரமான ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தலாக, 1993 ஏப்ரல் மாதம் யேமனியக் குடியரசில் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஆனால், தேர்தலின் பின்னே மோதல்கள் ஆரம்பித்தன. பிளவுகள் மேலும் விரிவடைந்தன.

ஏனென்றால் 301 தொகுதிப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், சாலேயின் கட்சியான G. P. C எனப்படும் பொதுமக்கள் காங்கிரஸ்கட்சி 122 ஆசனங்களையும், அல்பெய்த்தின் Y. S. P எனப்படும் யேமனிய சோசலிசக் கட்சி 56 ஆசனங்களையுமே பெற்றது. அதே சமயம், இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சியான சவுதிஅரேபியாவின் ஆதரவு பெற்ற இஸ்லா கட்சி 62 இடங்களைப் பெற்றது. தேர்தல் முடிவுகள் தென் யேமனியத் தலைவரான அல்பெய்த்துக்கு துயரத்தையே தந்தன. ஏனென்றால், அவரது முற்போக்கு எண்ணங்களை வட யேமனியர் அதிகம் விரும்பாததோடு, அவர் 3 ஆம் இடத்திற்கும் தள்ளப்பட்டார். எனவே தேர்தல் முடிவுகளும் வட, தென் யேமனிய வேறுபாடுகளையே சுட்டி நின்றன. அத்தோடு இஸ்லா கட்சியோ, தென் யேமனின் மதச் சார்பின்மைப் போக்கினை மாற்றி, இஸ்லாமிய அடிப்படைவாத அடிப்படையில் சமூக வாழ்க்கை அமைய வேண்டுமென்ற விருப்பைத் தெரிவித்தது.

### தேர்தலின் பின்னெழுந்த பிரதான சிக்கல்கள்

யேமனில் எழுந்த பிரதான சிக்கல்கள், சமூக பொருண்மியத் துறைகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள், மாற்றங்கள் தொடர்பாக மட்டுமன்றி, இராணுவங்களை எவ்வாறு ஒன்றாக்குவது என்பதிலும் தோன்றின. இறுதிவரை இராணுவத்தை ஒரே தலைமையின் கீழ் கொண்டுவர முடியவில்லை. அல்பெய்த்தோ தனது ஆதரவாளர்கள் 120 பேருக்கும் மேற்பட்டவர்களை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கொன்றுவிட்டதாகக் கூறி, இது தொடர்பாக விசாரணை வேண்டுமெனக் கோரினார். சூடானின் ஆதரவோடு இயங்கும் 'ஜிகாத்' எனும் ஒரு புதிய குழுவே இதனைச் செய்ததாக அவர் குற்றம் சாட்டினார். இதற்கிடையில், சாலே தனது ஆட்சியை உறுதிப்படுத்த இஸ்லா கட்சியோடு உடன்பாடு காணவே, நிலைமைகள் மோசமாகின. சாலே, அமைச்சரவையில் 31 பேரில் 21 அமைச்சர்களை தனது கட்சியிலிருந்தும், இஸ்லாமிய கட்சியிலிருந்தும் நியமித்தார். கடந்த வருடம் யூன் மாதம் இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சி, சோசலிச சார்பான சட்ட முறைமைகளை நீக்கி, இஸ்லாமிய அடிப்படைவாத சட்டவாக்கங்கள் கொண்டுவரவேண்டுமென கோரிக்கை விடுக்கவே, நிலைமைகள் மேலும் மோசமாகின. தான் புறக்கணிக்கப்படுவதாக அல்பெய்த் உணரத் தலைப்பட்டார். இதனால், கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அவர், புதிய தேசிய மன்றைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறி, தனது ஆதரவாளர்களோடு பழையபடி தென் யேமனின் ஏடன் நகருக்குச் சென்று விட்டார். இதனால் முன்போலவே வட யேமன் 'சானா'நகரை மையமாக வைத்தும், தென் யேமன் ஏடனை மையமாக வைத்தும் இயங்கத் தொடங்கின. இரு பகுதிகளுமே தமது தரப்பினைப் பலப்படுத்தத் தொடங்கின. குறிப்பாக சாலே, முதலில் இருந்தே தனது இராணுவத் தரப்பை ஆயத்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டார் என்றே கூறப்படுகின்றது.

இச் சூழலால் யேமன் நிர்வகிக்கப்பட முடியாத குழப்ப நிலையை அடைந்தது. நாட்டில் அமைதியின்மை குழப்பங்கள் மலிந்தன. ஆட்கடத்தல்கள் தொடர்ந்தன. எண்ணெய் ஏற்றுமதித் துறையும் பாதிப்பு அடைந்தது. தனது எண்ணெய் வளங்களை, வட யேமன் சுரண்டுவதாக தென் யேமன் முறைப்பட்டது. இத்தகைய நிலையில், மக்கள் வாழ்க்கைத்தரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. 100 விழுக்காட்டிற்கு மேலாக பணவீக்கம் சென்றது. உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, சென்றவருடம் டிசம்பர் மாதம் பெருங் கலவரங்கள் யேமனில் ஏற்பட்டன. 100க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.




### யேமனின் சிக்கலும் சவுதியின் நிலையும்

இத்தகைய சிக்கலுக்கு, வளைகுடாப் போரில் சாலே, சதாமுக்கு ஆதரவாகச் செயற்பட்டதால் அதுவரை காலமும் வளைகுடா நாடுகளிலிருந்து கிடைத்து வந்த உதவிகள் நிறுத்தப்பட்டதோடு, சவுதியில் உழைத்து பணம் அனுப்பிய எட்டு லட்சத்திற்கு மேற்பட்ட யேமனியரை, சவுதி திருப்பியனுப்பியதும் பிரதான காரணமாகியது. இதனால், வருடாந்தம் 2 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பும் ஏற்பட்டது. இவ்வாறு பல்வேறு சிக்கல்கள் தொடரவே, நிலைமைகள் தீவிரமடைந்தன. ஜோர்தான், சிரியா, எகிப்து போன்றவை அமெரிக்க ஆதரவோடு, இவ்வருடம் பெப்ரவரி மாதமளவில், அம்மானில் ஏற்படுத்திய இரு தரப்பு இணக்கமும் பலன் தரவில்லை. இங்குள்ள இன்னொரு சிக்கல், இப்பிராந்தியத்தில் சவுதி அரேபியா மேலாதிக்கம் பெறுவதை விரும்பாத யோர்தான், ஓமான் போன்றவை யேமன் ஒன்றாக, ஒருமைப்பாடாக இருந்தால்தான் நல்லது என விரும்புகிறார்கள். அதே சமயம் சவுதியைப் பொறுத்தவரை தனக்கு அருகில் யேமன், பலம் மிக்க நாடாக உருவெடுப்பதை விரும்பவில்லை. அத்தோடு, இரு நாடுகளுக்கும் எண்ணெய் வளமுள்ள எல்லைப் பகுதி தொடர்பாக பிணக்குகளும் உண்டு. வேறு எவரையும் விட, யேமனின் பாதுகாப்பு என்பது தன்னைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது என்று சவுதி கூறிக்கொள்கிறது. யேமனின் குழப்பநிலை தனக்குப் பாதகமில்லாமல் தொடர்வதையே சவுதி விரும்பக்கூடும் எனக் கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலையிலேயே அரபு லீக், ஐ. நா என இரு அமைப்புக்களும் எடுத்த முயற்சிகள் பயனளிக்காது போயின.

### தென் யேமன் மீது வட யேமன் போர்

வட யேமன் தலைவர் சாலே, கடந்த மே மாதம் அவசரகால நிலைமையை நாட்டில் பிறப்பித்து, இராணுவத்தைத் தனது ஆணையின் கீழ் கொண்டுவந்து, உப சனாதிபதி அல்பெய்த் ஏனைய அவரது கட்சி உறுப்பினராக உள்ள பிரதமமந்திரி உட்பட பல முக்கிய அமைச்சர்கள் யாவரையும் பதவி நீக்கம் செய்து, தென் யேமன் மீது போரைத் தொடங்கி விட்டார். ஏடன் மீதே, மிகக் கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், போரைத் தொடர்ந்தால் தென் யேமனோ, தன்னைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்குமாறு ஏனைய அரபுநாடுகளை வற்புறுத்தும் என எதிர்பார்க்கப் பட்டது. பொதுவில் நியாயம் தென் யேமன் பக்கம் உள்ளதாகவே கருதப்பட்டது. "வட யேமன் படைகள் ஏடனுக்குள் நுழைந்தால், அது ஆக்கிரமிப்பாகவே கருதப்படும்" என எகிப்து அறிவித்திருந்தது. இந்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# பலாலி விமானப்படைத் தளம் மீதான தாக்குதல்

# படைத்தளங்களின் பாதுகாப்பு வியூகத்திற்கு கரும்புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கை

ஆவணி இரண்டாம் திகதி அதிகாலை 2.45 மணியளவில் , கரும்புலிகள் அணியொன்று, பலாலி விமானப்படைத் தளத்தின் மத்தியில் நடாத்திய, 'கொமாண்டோப்' பாணியில் அமைந்த கரும்புலித் தாக்குதலானது, சிறீலங்கா இராணுவ

**இத்தாக்குதலானது, சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஏற்படுத்திய இராணுவ தளபாட இழப்புக்கள் எவ்வளவு?துருப்புக்களின் உயிர் இழப்புக்கள் எவ்வளவு? என்பதல்ல இங்கு முக்கியமானது. இத்தாக்குதலானது, இரண்டாம் கட்ட ஈழப்போரில் சிறீலங்கா இராணுவம் இறுதியாகத் தெரிவு செய்திருந்த 'தற்பாதுகாப்பு' ஏற்பாடுகளுக்கு சவாலாகியுள்ளது என்பதே முக்கியமானதாகும்.**

வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் பெரும் வியப்பேதும் இல்லை.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற இருந்த இவ்வேளையில், இடம் பெற்ற இத்தாக்குதல் குறித்து, அப்போதைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வெளியில் பேசுவதற்குத் தயங்கியிருப்பினும், அரசாங்கத்தினதும், இராணுவத்தினரினதும் நடவடிக்கைகள் தாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்த்தத் தவறவில்லை.

இத்தாக்குதலானது, சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஏற்படுத்திய இராணுவ தளபாட இழப்புக்கள் எவ்வளவு? துருப்புக்களின் உயிர் இழப்புக்கள் எவ்வளவு? என்பதல்ல இங்கு முக்கியமானது. இத்தாக்குதலானது, இரண்டாம் கட்ட ஈழப்போரில் சிறீலங்கா இராணுவம் இறுதியாகத் தெரிவு செய்திருந்த, 'தற்பாதுகாப்பு' ஏற்பாடுகளுக்கு சவாலாகியுள்ளது என்பதே முக்கியமானதாகும்.

### கேள்விக்குள்ளாகும் இராணுவத்தின் இருப்பு

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதில் இருந்து வடபுலத்தில் சிறீலங்கா இராணுவத்தின் 'இருப்பு', காலத்திற்குக் காலம் கேள்விக்குரியதாகவே மாறிவந்தது. இந்த வகையில், ஆரம்பத்தில் இருந்த சிறுமுகாம்களை போர் தொடங்கிய காலத்திலேயே இழக்கவேண்டி வந்தது. இந்நிலையில் ஒவ்வொரு இழப்பின் போதும் போர் முறைத் திட்டத்திலும், பாதுகாப்பிலும் சிறீலங்காத் தரப்பு தீவிர கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

இந்நிலையில், பாரிய முகாம்கள் மட்டுமே தாக்குப் பிடிக்க முடியும் என்ற நிலை உருவாகிய போது, 1990 ஆம் ஆண்டின் இறுதியிலும், 1991 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் மாங்குளம், முல்லைத்தீவு, சிலாவத்துறை, ஆனையிறவுப் படைமுகாம்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குல்கள் பாரிய முகாம்களின் இருப்பையும் சர்ச்சைக்குரியதாக்கியது.

இதைத் தொடர்ந்து, இராணுவத்தின் இருப்பானது, 'கூட்டுப்படைத்தளங்கள்' என்ற வடிவத்தைப் பெற்றன. இத்தளங்கள் பெரும்பாலும் கடல்வழி வினியோகத்துடன் தொடர்புகொண்டவையாக இருந்ததோடு, விமானப்படையின் உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவையாகவும், இதேசமயம் விமானங்கள் இறங்கிச்செல்ல முடியாத இடங்களில், உலங்குவானூர்திகளின் இறங்கு தளங்களைக் கொண்டவையாகவும் இருந்தன.

### ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவக் கிராமங்கள்

முப்படைத்தளங்களின் இவ் விரிவாக்கமானது, இறுதியில், இராணுவ முகாம்கள் என்ற நிலையில் மாறி, 'ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவக் கிராமங்கள்' என்ற நிலையைப்பெற்றன. இவ் ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவக் கிராமங்கள், இருபத்திநான்கு மணி நேரமும் இராணுவத்தினரின் நேரடிக் கண்காணிப்பிற்குள் கொண்டுவரப்பட்டன.



**பலாலியில் பகைவன் குகைக்குள்ளேயே சாதனை படைத்து தமிழீழத்தின் சரித்திரமாவதற்கு சற்று முன், தங்கள் உயிர் மூச்சாகவுள்ள அண்ணனுடன் எங்கள் கரும்புலி வீரர்கள்**

ஆனால், சிறீலங்கா அரசுத் தரப்பினால் இதற்கு 'பாதுகாப்பு வலயம்' அல்லது 'விடுவிக்கப்பட்ட பகுதி' என விளக்கம் கொடுக்கப்பட்டது. உண்மையில் இது இராணுவத்தினரின் பாதுகாப்பு ஏற்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது.

இவ்வாறான, பாதுகாப்பு வலயங்களுக்கு பெளதிகரீதியான அமைப்புடன் கூடிய பாதுகாப்போடு, பல ஆயிரக்கணக்கான ஆளணியினருடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த வகையிலேயே தீவுப்பகுதிகள், மற்றும் வலிகாமத்தின் வடபகுதி இராணுவத்தின் பாதுகாப்பு வலயங்களாகக் கொள்ளப்பட்டன.

### பாதுகாப்பு வலயத்தின் சிதைவு

ஆனால், இன்றைய நிலையில் சிறீலங்கா இராணுவத்தின் இத் தற்பாதுகாப்பு ஏற்பாடுகளே கேள்விக்குரியனவாகியுள்ளன. ஏற்கனவே இப்பாதுகாப்பு ஏற்பாடுகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த வகையில், மன்னார்த் தீவினுள்ளும் வடபகுதியிலுள்ள தீவினுள்ளும் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் முக்கியமானவை. இப்பாதுகாப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சில தாக்குதல்களினால், 'பாதுகாப்பு' ஏற்பாடுகள் மட்டுமல்ல, சிறீலங்காவின் இராணுவ வரலாற்றினையே அவை தலைகீழாக மாற்றியும் இருந்தன.

இந்தவகையில், 1992 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அராலித் துறையில் வெடித்த கண்ணி வெடியானது, சிறீலங்காவின்

**பலாலி விமானத்தளத்தின் ஓடுபாதைவரை விடுதலைப் புலிகள் ஊடுருவிச் சென்றமையானது விமானப்படையின் பாதுகாப்புமையத்தையே விடுதலைப் புலிகள் எட்டி விட்டதற்கு சமனானதாகும்.இதன் மூலம், கரும்புலிகள் வடபகுதியில் உள்ள சிறீலங்கா ஆயுதபடையினரின் எந்த இலக்கையும் தாக்கும் வல்லமையைப் பெற்றுள்ளமை நிரூபணமாகியுள்ளது.**

வடபகுதி இராணுவத் தலைமையையே அழித்தது. ஆனால், உண்மையில் இவ் அழிவானது, சிறீலங்காவின் முக்கிய தளபதிகளை மட்டுமல்ல, வடபகுதியின் அதன் 'பாதுகாப்பு' ஏற்பாடுகளின் தந்திரோபாயத்தையும், சிறீலங்கா இராணுவத்தின், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருபாயத்தையுமே அழித்ததெனலாம்.

இதேசமயம் பூநகரிக் கூட்டுப் படைத்தளம் மீது, கடந்த ஆண்டு நவம்பரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'ஒப்பரேசன் தவளை' என்னும் தாக்குதலானது, வடபகுதியில் கூட்டுப் படைத்தளங்களின் பாதுகாப்பையே கேள்விக்குரியதாக்கியிருந்தது.

இந்நிலையில், வடபகுதியில் உள்ள ஒவ்வொரு முகாமும் கூட்டுப்படைத்தளமாக மட்டுமல்ல, மொத்தம் இரு பட்டாலியன்களுக்கும் மேற்பட்ட அணிகளைக் கொண்டதாகவும் ஆழ்கடல்வழித் தொடர்பு உள்ளதாகவும் இருந்தால் அன்றி, படையினர் நீண்டநேரம் தரிக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்தியது.

ஆனால், பலாலி விமானப்படைத்தளத்தினுள் கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது, ஒட்டுமொத்தமாக சிறீலங்காவின் போர்முறைத் திட்டத்திற்கும், பாதுகாப்பு வியூகத்திற்கும் பெரும் சவால் விட்டுள்ளது.

'பாதுகாப்பு வலயத்தினுள்' அதிகரித்த இத்தாக்குதல்களானது, பலாலி விமானப்படைத்தளத்தில் இடம்பெற்ற தாக்குதலோடு அதன் மையம்வரை சென்றது. இது பலாலி விமானப்படைத் தளத்தின் இதயம்வரை முன்னேறி நடாத்தப்பட்ட, தாக்குதலாகும் -இந்த வகையில் இத் தாக்குதலானது, எதிரியின் குகைக்குள் புகுந்து, அவன் நெஞ்சில் குத்திய செயலுக்கு ஒப்பானதாகும்.

இதேவேளை, கடந்தகாலத் தாக்குதல்களில் இருந்து, இத் தாக்குதல் சில வகைகளில் வேறுபடுகின்றது. ஆரம்பத்தில் பாதுகாப்பு வலயத்திற்குள் ஊடுருவி, விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல்கள், அனேகமாக அதன் எல்லையில் இடம் பெற்றதோடு, அத்தாக்குதலின் வடிவமும் மாறுபட்டதாக, பெரும்பாலும் நேரடி மோதலைத் தவிர்ப்பவையாகவுமே இருந்தன.

இருப்பினும், தொடர்ச்சியாக இவ்வலயத்திற்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இருந்ததோடு, பாதுகாப்பு வலயத்தின் உட்பகுதிவரையும் அது விரிந்தது. ஆனால், அவை -பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது இடம்பெற்ற பலாலி முகாம் மீதான ஊடுருவலைத் தவிர -கரும்புலித் தாக்குதலாக அமையவில்லை என்பதோடு, பாதுகாப்பு வலயத்தினுள் அதன் மையமாக இருந்த இராணுவத் தளங்களின் மையப்பகுதி வரை செல்லவில்லை என்றே கூறலாம்.

### கரும்புலித் தாக்குதலின் தேவை

ஆனால், இத்தாக்குதல் கரும்புலித் தாக்குதலாகவே அமைய வேண்டிய தேவையும் அவசியமும் இருந்தது. ஏனெனில், எதிரியின் இருதயம் வரை முன்னேறவேண்டிய அவசியம் தாக்குதல் அணிக்கு இருந்தது.

இதேசமயம், இத்தாக்குதல் நடவடிக்கையானது கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும்பாலான கரும்புலித் தாக்குதல் மாதிரியில் இருந்து வேறுபட்டதாகும். இத் தாக்குதல் முன்னைய தாக்குதல்களைப் போன்று ஒரு 'தற்கொடைத்' தாக்குதல் ஆயினும், இது ஒரு 'கொமாண்டோப்' பாணியில் அமைந்ததொன்றாகும். இத்தாக்குதலின்போது, கரும்புலிகள் கடைப்பிடிக்க வேண்டிய போர்முறைகள், நடவடிக்கைகள் என்பன முன் எப்பொழுதும் இல்லாதவாறு வேறுபட்டிருந்தன.

இதில் முக்கியமான மாறுபாடுகளில் முதலில் குறிப்பிடவேண்டியது, கரும்புலிகள் அணியாகச் செயற்பட்டு, இலக்கு நோக்கி முன்னேறவேண்டி இருந்தமையாகும். . கடந்தகாலத் தாக்குதலில் ஒன்றைத் தவிர, ஒருவர் அல்லது இருவர் என்ற ரீதியில் ஒரு வாகனத்திலோ அன்றி படகிலோ தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் தடங்கல்களைத் தவிர்ப்பதும், முடிவுகளை எடுப்பதும் ஒரு வகையில் சுலபமானதாகவே இருந்திருக்கமுடியும். ஆனால் ஒரு 'கொமாண்டோ'அணியாக கரும்புலிகள் ஒரு இலக்குநோக்கி முன்னேறி வெற்றிகரமாக தாக்குதலை மேற்கொண்டமை, இராணுவ ரீதியில் கிடைக்கப்பெற்ற புதிய பரிணாமம் என்றே கொள்ளமுடியும்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான் தேசியத் தலைவரைச் சந்தித்தது என் வாழ்நாளில் கிடைத்த அதிஸ்டம்

**ஐரோப்பிய நாடொன்றிலிருந்து அண்மையில், தமிழீழம் சென்று திரும்பிய, தமிழீழ மகன் ஒருவரின் நேரடி அனுபவங்களையே இக்கட்டுரை விளக்குகின்றது.**

எல்லோரும் தமிழீழத் தாய் மண்ணிற்குச் செல்லும்பொழுது, எத்தனையோ ஆசைகளை மனதில் தாங்கிக்கொண்டு செல்வார்கள். நான் தமிழீழத்திற்குச் சென்றால், தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களை எப்படியும் பார்க்கவேண்டுமென்ற ஆசை என்மனதில் நீண்டகாலமாகவே இருந்தது.

தமிழீழ எல்லைக்குள் காலடி எடுத்துவைத்த பொழுது, என்னையும் அறியாமல் எனக்குள் ஒரு தேசப்பற்று உருவானது. தமிழீழத்திற்குள் நுழையும், எவரும் எல்லைக் காவல் துறையினரின் தமிழீழ உள்வரவு வெளியகல்வு பகுதியினரிடம் தமது விபரங்களைக்கூறித் தமிழீழத்திற்குள் நுழைவதற்கான அனுமதி அட்டையைப் பெறவேண்டும். அப்பகுதிக்குள் நுழைந்தபொழுது வணக்கம் தமிழீழம் வரவேற்கிறது என்ற வார்த்தைகளுடன் ஐயா வாங்கோ என்று மரியாதையாக அழைத்தது மிகவும் கவர்ந்தது. வெளிநாட்டிலிருந்து செல்பவர்களை மட்டுமல்ல, எல்லோருடனும் அவர்கள் இவ்வாறுதான் பழகுகிறார்கள் என்பதையே இங்கு குறிப்பிடுகிறேன் .

தமிழீழத்திற்குள் சென்றவுடன், தமிழீழக் கடற்படைத் தளபதி சூசை அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. மிகவும் சாதுவானவராகவும், அமைதியான சாந்தம் நிறைந்த ஒருவராகவும் காணப்பட்டார். என்னுடன் கதைத்த ஒவ்வொரு கணமும் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு உணர்வும்,



தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள்.

தமிழீழ மண்ணின் ஒரு அங்குலத்தையேனும் எதிரிக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற உணர்ச்சியும் அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. பாரிய ஆயுதங்களுடன் பழகும் உங்களால் எப்படி இவ்வளவு சாதுவானவராகவும் , அன்பானவராகவும் இருக்கமுடிகிறது என்ற பொழுது, "எல்லாமே அண்ணனின் வழிநடத்தலில் வந்தது தான்". "தமிழீழமண்ணும் தமிழீழமக்களும் தான் என் இதயத்தில் நிறைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சுதந்திரத்தமிழீழத்தைப் பெற்று கொடுக்க நான் என்னையே அர்ப்பணித்துள்ளேன்", என்ற அண்ணணின் வழியில், நாம் கற்றுக் கொண்டவைதான் இவை என்றார். தமிழீழக் கடற்புலிகளின் கடற்போக்குவரத்து ஒழுங்குவிதிகள், கடற்பாதைச் சைகைகள் என்பன வகுக்கப்பட்டு சர்வதேச கடற்போக்குவரத்து விதிமுறைகளுக்கு உட்பட்டதாகக் காணப்பட்டது. தமிழீழக்கடல் போக்குவரத்தில் 100க் கணக்கான படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன.

இவை, மக்கள் பிரயாணப் படகுச்சேவை, மக்கள் பொதிகள் படகுச் சேவையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தனியார்களால் நடாத்தப்படும் இப்படகுச் சேவைகள் தமிழீழக் கடற்படையினரின் அனுமதி பெற்றவையாகக் காணப்பட்ட பொழுதும், இப்படகுகள் பாவனைக்கு உகந்ததா? என்றும் படகுகளின் ஓட்டிகள் சேவையில் இருக்கும் பொழுது கடற்போக்குவரத்து விதிக்கு அமைய நடக்கிறார்களா? எனவும் திடீர்சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். முக்கியமாக இச்சோதனையில் கவனிக்கப்படுவது, இதில் பாவனைக்கு உகந்ததல்லாத படகுகளைச் சேவையில் ஈடுபடுத்துவதும், சேவையில் இருக்கும் பொழுது படகுகளின் செலுத்துனர்கள் மது அருந்தி இருக்கிறார்களா? என்பதும், அப்படகில் அதன் கொள்ளவுக்கு அதிகமாகப் பிரயாணிகளை ஏற்றுகிறார்களா? என்பதும் அவதானிக்கப்படுகிறது. இவைகள் தமிழீழ கடற்போக்குவரத்து விதிகளுக்கு முரணானவை. இவ் விதியை மீறுவோர் தண்டனைக்குரிய குற்றவாளிகளாகக் கருதப்படுவர். இப் போக்குவரத்துக்கள், காலநிலைச் சீர்கேடு காரணமாக இடை நிறுத்தப்படும் பொழுது, தமிழீழக் கடற்பிரிவினரால் முன்கூட்டியே தமிழீழத்தில் அறிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்குப் பொறுப்பாக இருக்கும் கஸ்ரோ அண்ணரைச் சந்தித்தேன். என்னை விட வயதில் இளையவர்தான், ஆனாலும் அவரின் தோற்றமும், தமிழீழ மண்மீட்புப் போரில் அவர் எடுத்துக் கொண்ட பங்கும் அவரைப் பார்த்த உடனேயே, தலை குனிய வைக்கிறது. மரியாதைக்காக அவரை அண்ணன் என்று அழைப்பதில் பெருமிதம் அடைகிறேன். சிங்கள இராணுவத்திற்கு எதிரான தாக்குதலின் பொழுது குண்டடிபட்டதால், இடுப்புக்குக் கீழ் எந்த உணர்ச்சியும் இல்லாமல்; கால்கள் வழங்காத நிலையில் காணப்பட்டார். ஒரு நாளைக்கு, ஒன்றரை மணித்தியாலங்கள்தான் அவரால் நிமிர்ந்து இருக்க முடியும். இந் நிலைமையிலும் மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுகிறார். வெளிநாடுகளில் உள்ள ஒரு



கிளையின் விபரத்தைக் கேட்டால், எந்த ஆண்டாக இருந்தாலும் சரி, சில நொடிக்குள் அவைகள் அடங்கிய கோவையே எமது முன்னால் வந்துவிடும். வளர்ச்சியடைந்த மேலைத்தேய அலுவலகங்களில் காணப்படுவதுபோன்று, அவர்களின் செயல்கள் அமைந்திருக்கின்றன. அவர்கள் ஆற்றும் பணி எதுவுமே ஒரு ஒழுங்கு நிரல்படுத்தப்பட்டதாக இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரைச் சந்திப்பதாக இருந்தால் அந்நேரம் அவருக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கும். ஒதுக்கப்பட்ட நேரத்துக்குள் அந்தக் கருமம் செய்து முடிக்கப்பட வேண்டும். ஒரு விடயத்தை ஒத்திப் போடுவதோ தாமதப்படுத்துவதோ தவிர்க்கப்படுகின்றது.

**புதியவன்**

கஸ்ரோ அண்ணன், தான் நிமிர்ந்து இருக்கும் அந்த ஒன்றரை மணித்தியாலத்திற்குள்ளும் எதைச் செய்யவேண்டும் என்பதை, முன்கூட்டியே தீர்மானித்துவிடுவார். குறிப்பாகக் கடிதம் எழுதும் பணியை இந்த நேரத்தில்தான் செய்து முடிப்பார். உங்கள் உடல் நிலை எப்படி இருக்கிறது? நீங்கள் போர்க்களத்தில் எப்படி இவ்வளவு திறமைகளைச் செய்தீர்கள்? இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் பதிலே வராது! தன்னைப்பற்றிப் புகழ்வதையோ, அல்லது தான் செய்தவற்றை சொல்லிக்காட்டுவதையோ விரும்பாதவராக; அந்தக் கேள்விகளுக்குப்பதிலளிப்பதை விடுத்து, தமிழீழ விடுதலைக்காக வெளிநாட்டில் தமிழ் மக்கள் செய்யும் பணியை, விபரமாகக் கேட்கிறார். உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையிலாவது, நீங்கள் உங்கள் பெற்றோரிடம் போய் வீட்டில் இருக்கலாம்? எனக் கேட்டபோது, எனக்கு எல்லாமே எமது தலைவர் தான். உடலில் ஒரு தடிக்குச்சியைத் தூக்கும் சக்தி இருக்கும்வரை, இறுதி மூச்சு உள்ளவரையிலும் அண்ணனின் பாசறையில் பணியாற்ற வேண்டும் என்பதே, என் ஆசை என்றார். அவரிடம் கலந்துரையாடிக் கொண்டிருந்த வேளையில், ஒரு தடவையாவது அவர் நான், எனது என்ற சொற்பதங்களைப் பிரயோகிக்கவில்லை. எதிலும் எங்கள் விடுதலை, எமது மண், எங்கள் மக்கள், எங்கள் தலைவர் என்ற சொற்பதங்களே வெளிவருகிறது. இது கஸ்ரோ அண்ணனிடம் மட்டுமல்ல; தமிழீழத்தில் சந்தித்த பொறுப்பாளர்கள் எல்லோருமே நான், எனது, என்பதை விடுத்து எங்கள் தேசம், எம் மக்கள் , எங்கள் தலைவர் என்றுதான் வாழ்கிறார்கள்.

தமிழீழத்தில் இருந்த காலத்தில் சந்தித்த போராளிகள் தொடக்கம் பொறுப்பாளர்கள்வரை எல்லோரும் ஒரே கருத்தை உடையவர்களாகவும், எந்த ஒரு விடயத்தையும் பேசிக்கொண்டே காலத்தைக் கழிக்காமல், செயற்பாட்டிலேயே ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

என் வாழ்நாளில், தமிழீழத் தேசியத் தலைவரை சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிட்டுமென நான் எதிர்பார்க்கவில்லை. ஏதோ ஒரு பொது வைபவத்திலாவது தலைவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் தான் கிடைக்கும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் தலைவருடன் ஒரு மேசையிலிருந்து நேருக்குநேர் கதைக்கும் வாய்ப்புக்கிடைத்தமை, எனக்கு அதிர்ச்சியாகவும், உருக்கமாகவும் இருந்தது.

தலைவரின் முகத்தை நிமிர்ந்து பார்க்க என் கண்கள் கூசின. என் கண்களிலிருந்து நீர் கலங்கியது. அவரைப்பார்த்த ஆனந்தத்தில் என் வாய் இறுகியது. என் இதயம் இன்பத்தால் நிறைந்தது. என்னை அறியாமலே என் உடல் பூரித்தது. எனக்கு கிடைத்த மனக்கிளவை என்னால் விபரிக்க முடியவில்லை.

"வணக்கம் தம்பி" என்ற அந்த முகத்தின் ஒளி, கதைக்கும் பொழுது வந்த நிதானமான, ஆழமான, கருத்துமிக்க வார்த்தைகள்! குறிப்பாகச் சொல்லப் போனால் எமது தேசியத்தலைவர் தமிழீழ மக்களுக்குக் கிடைத்த இயற்கையின் கொடை என்றுதான் கூறவேண்டும். தமிழீழ தேசிய விசுவாசத்திற்குத் தீங்கு விளைவிக்க எண்ணும் எந்த ஒரு தமிழனுக்கும் அந்த முகத்தை மட்டுமல்ல, அதன் நிழலைக்கூட நெருங்க அருகதை கிடையாது என்றுதான் கூறவேண்டும். நான் சந்தித்த போராளி ஒருவர் கூறினார், போர்க்களத்தில் நிற்கும் பொழுது தலைவரிடமிருந்து எனக்குச் செய்தி வந்தது என்ற சொல்லைக் கேட்டாலே போதும், பல போத்தல் சேலைன் என் உடலில் ஏற்றியது போன்ற உணர்வு வேகம் வந்துவிடும் என்றார். நான் தேசியத் தலைவரைச் சந்தித்தது, என் வாழ்நாளில் கிடைத்த அதிஸ்டம் என்றே சொல்ல வேண்டும். ஏன்எனில் வெளிநாடுகளிலிருந்து தமிழீழம் செல்லும் எல்லோருக்கும் இச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

எமது தலைவருடன் நேரில் இருந்து கதைக்கிற சந்தர்ப்பம் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. தமிழீழத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் ஒவ்வொரு தெருவிலும் தலைவர் தினமும் எப்படியோ சென்று வருகிறார். அங்கு நடக்கும் ஒவ்வொரு விடயமும் உடனுக்குடன் அவருக்குத் தெரிய வருகிறது. ஒரே சந்தர்ப்பத்தில் பல விடயத்தில் அவதானிக்கும் தன்மையும், எல்லாத்துறைகளிலும், கருமங்களிலும் அவதானமும், நிதானமாக தீர்க்க தரிசனமான முறையில் முடிவுகளை எடுக்கும் ஆற்றலையும், என்னுடன் கதைத்த சில நிமிடங்களில் அவரிடம் அவதானிக்க முடிந்தது. வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களைப் பற்றி உரையாடிய பொழுது வந்த கருத்துக்களில், வெளிநாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழீழ மகனும் எமது நாட்டின் பிரசைகளே. அவர்கள் எமது மண்ணின் நிகழ்வுகளை வந்து பார்க்க வேண்டும். வெளிநாடு



விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தொடர்புப் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ அவர்கள்.

களில் வாழும் தமிழ் மக்கள் தமிழீழ மண் மீட்புப் போரில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகும். எமது நாட்டின் மண்மீட்புப் போரையும், நாட்டின் அரச கருமம், நீதி நிர்வாகச் செலவுகளையும் தமிழீழ மக்களே சுமக்கிறார்கள். காவல்துறை, நீதிமன்றங்கள், வங்கி இவற்றுடன் தமிழீழ நிர்வாகச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பணியாற்றுபவர்கள் யாவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டே சேவையில் அமர்த்தப்படுகின்றனர். இதற்கான செலவுகளின் தேவை விரிந்துகொண்டே போகின்றது. தமிழீழத்திற்கு வெளியில்வாழும், தமிழ் மக்கள் எல்லோரும் தமது தாய் மண்ணிற்காக ஒருமித்துப் பங்களிப்பார்களேயானால், விற்பனைப்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

*வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழீழத்தவரும் எமது நாட்டின் பிரசைகளே. அவர்கள் எமது மண்ணின் நிகழ்வுகளை வந்து பார்க்கவேண்டும். வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள், தமிழீழ மண்மீட்புப் போரில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டியது, அவர்களது தார்மீகக் கடமையாகும். எமது நாட்டின் மண்மீட்புப் போரையும், நாட்டின் அரச கருமம், நீதி, நிர்வாகச் செலவுகளையும் தமிழீழ மக்களே சுமக்கின்றார்கள். காவல் துறை, நீதிமன்றங்கள், வைப்பகம் (வங்கி) இவற்றுடன், இன்று தமிழீழ நிர்வாகச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பணியாற்றுபவர்கள் யாவருக்கும், பயிற்சி அளிக்கப்பட்டே சேவையில் அமர்த்தப்படுகின்றனர். இதற்கான செலவுகளின் தேவை, விரிந்துகொண்டேபோகின்றது. தமிழீழத்திற்கு வெளியில் வாழும், தமிழ் மக்கள் எல்லோரும் தமது தாய்மண்ணிற்காக ஒருமித்துப் பங்களிப்பார்களேயானால் விற்பனை வரியை, போராட்டத்தில் பல துன்பங்களின் மத்தியில், தாய்மண்ணில் வாழும் மக்களிடம் விதிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படாது.* ■

- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டாம் கட்ட ஈழப்போரின்

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி கடந்த யூன் பத்தாம் திகதியுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன -இக் காலப் பகுதி இலங்கையின் இராணுவ, அரசியல் வரலாற்றில் முக்கியமான பகுதி என்பதில் கேள்விக்கே இடம் இல்லை. இராணுவ அரசியல் ரீதியாகப் புதிய பரிணாமங்களைப் பெற்ற இக்காலப் பகுதியை மதிப்பீடு செய்தல் என்பதும் இலகுவான காரியமல்ல.

1990 யூன், 10 ஆம் திகதி கிழக்கில் ஆரம்பித்த இரண்டாம் கட்ட ஈழப் போரானது, ஓரிரு தினங்களுக்குள் வடக்கு -கிழக்குப் பகுதி எங்கும் பரவியது. இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன. இதன் பின்னர் பேச்சு வார்த்தைகள், போர் நிறுத்தங்கள் என்ற பேச்சே இன்றி கடந்த நான்கு ஆண்டும் போராண்டாகவே கழிந்துள்ளது -ஒப்பீட்டு ரீதியில் இது ஒரு நீண்ட காலப் பகுதியே.

இந் நான்கு போராண்டும், இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பல மாற்றங்களையும், பரிணாமங்களையும் கொண்டவை. இராணுவத்தின் விரிவாக்கம், நவீனப் படுத்தல், போர் யுக்திகளில் மாற்றம், கட்டமைப்புகளில் மாற்றம் என சிறீலங்கா தனது இராணுவ பலத்தை விஸ்தரித்துக் கொண்டு சென்ற வேளையில், விடுதலைப் புலிகளும் போராடும் யுக்திகளை காலத்துக்கும், பிரதேசத்திற்கும் ஏற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொண்டே சென்றனர்.


**கடந்த நான்கு ஆண்டுகளும் இலங்கையின் அரசியல், இராணுவ வரலாற்றில் பல முக்கிய பதிவுகளாகக் கொண்டவை. சிறீலங்காவைப் பொறுத்தவரையில், பல தோல்விகளுக்கும் இழப்புக்களுக்கும் காரணமாகிய இப்போராண்டுகள், இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது என்பதைத் தெளிவாகவே புலப்படுத்தியுள்ளன. விடுதலைப்புலிகள் இக்காலப்பகுதியில் ஈட்டிய வெற்றிகள், தமிழர் தேசிய இனப் போராட்ட வரலாற்றில் பெரும் முன்னேற்றப் படிகளாகும்.**

இந்த நிலையில், கடந்த நான்கு போராண்டின் சம்பவங்களை பட்டியல் இடுவது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. 6000 க்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும், 4000 க்கும் மேற்பட்ட புலிகளையும், நூற்றுக்கணக்கான தாக்குதல்களையும் பட்டியல் இடுவதை விட, கடந்த நான்கு போராண்டிலும் சிறீலங்கா அரசின் குறிக்கோள்கள் எந்தளவில் நிறைவேறியது என்பதும், விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள், எந்தளவுக்கு சிறீலங்கா இராணுவத்தின் நோக்கங்களை எதிர் கொண்டன என்பதுமே முக்கியமாக நோக்கப்படவேண்டியுள்ளது.

## கிழக்கில் முதற்படையெடுப்பு


போரைத் தொடங்கிய சிறீலங்கா அரசின் முதற் குறிக்கோளாக கிழக்கு மாகாணமே இருந்தது. போர் தொடங்கிய ஒரு வார காலத்திற்குள்ளேயே மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையில், ஒரு பெரும் படை எடுப்பு கிழக்கில் நடத்தப்பட்டது. பெரும் அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறிய இராணுவத்தினருடன் இணைந்து சிங்களக் காடையர்களும் முஸ்லிம் காடையர்களும் தமிழருக்கு எதிராகப் பெரும் இனப் படுகொலை ஒன்றையே நடத்தினார்கள்.

ஆயினும், கிழக்கில் சிறீலங்கா இராணுவம் நினைத்தது போன்று இலகுவில் பெரும் வெற்றியை ஈட்டிவிட முடியவில்லை. போர் ஆரம்பித்து இரண்டு மாதங்களின் பின்னர் கிழக்கு மாகாணம் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக சிறீலங்கா இராணுவம் அறிவித்த போதும், அதன் பின்னர் விடுதலைப் புலிகள் தொடுத்த அதிரடித் தாக்குதல்கள் சிறீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு வியூகத்தையே மாற்றும்



கடற்புலிகளின் ரோந்துப் படகொன்று

நிலைக்குக் கொண்டு சென்றது. அதிலும் 1992 இல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடி முறையில் அமைந்த கரந்தடித் தாக்குதல்கள், இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை விளைவிப்பனவாக இருந்தன. இருப்பினும் கிழக்கில் இராணுவத்தின் கை இந் நான்கு ஆண்டுப் போரின் பின்னர் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. ஆனால், இராணுவத் தரப்பு குறிப்பிடுவது போன்று, கிழக்கு மாகாணம் பூரணகட்டுப்பாட்டுக்குள்



மணிகின்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி

கொண்டுவரப்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இராணுவம் தற்பொழுது அப்பகுதியில் மேற்கொள்ளும் தேடுதல், சுற்றி வளைப்புக்கள், பெயரிட்டு மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள் என்பன, விடுதலைப் புலிகள் அப்பகுதியில் நிலைத்திருப்பதையே காட்டுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான யூ. எல். எம். முகைதீன், மட்டக்களப்பில் 40 வீத பிரதேசமும், திருமலையில் 50 சதவீத பிரதேசமும், அம்பாறையில் 20 சதவீத பிரதேசமும் இன்னும் புலிகளின் கைவசம் இருப்பதாகத் தெரிவித்துள்ளமை இராணுவத்தினதும், அரசாங்கத்தினதும் கூற்றுக்கு முரணானது என்பதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தப்பாடானது.

கிழக்கின் நிலை இவ்வாறு இருக்க, கடந்த நான்கு போராண்டிலும் சிறீலங்கா இராணுவத்தின் பெரும்படை எடுப்புக்கள் யாவும் வடமாகாணத்திலேயே இடம் பெற்றன. தமிழர் தாயகத்தின் இருதய நிலப்பரப்பான மணலாற்றுப் பகுதியையும், தமிழர் தாயகத்தின் தலைப்பாகம் எனக் கருதப்படும் யாழ். குடாநாட்டு பகுதியையும் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் நோக்குடையவைகளாகவே இப்படை எடுப்புக்கள் இருந்தன. இவ்விரு பகுதிகளும் கேந்திர பகுதிகளாகவும், புலிகளின் வலுவுள்ள நிலைகளாகவும் இராணுவத்தால் கருதப்பட்டன. இப்பிராந்தியங்களில் பெறப்படும் வெற்றிகள் போரின் இறுதி வெற்றிகளாகவும் சிறீலங்கா இராணுவத்தாலும், அரசாலும் கருதப்பட்டது.

ஆனால், வடக்குப் போர் முனைகள் கடந்த நான்கு வருடங்களில் எப்பொழுதுமே சிறீலங்கா இராணுவத்திற்கு பின்னடைவுகளையும், தோல்விகளையும் வழங்கியவையாகவே இருந்தன. இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே கொண்டச்சி, கொக்காவில் இராணுவ முகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சி கண்டன. ஆயினும் 1990 செப்டம்பரில் யாழ். கோட்டை இராணுவமுகாமும், நவம்பரில் மாங்குளம் இராணுவ முகாமும் வீழ்ச்சி கண்டமை, புலிகளின் இராணுவ வரலாற்றில் பெரும் சாதனையாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதே சமயம் 1991 இல், இடம் பெற்ற சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலும், ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலும் விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முக்கிய பரிணாமத்தைக் கொண்டன. சிறீலங்கா இராணுவமும் விடுதலைப் புலிகளும் இரு மரபு வழி இராணுவமாக மோதிக் கொண்டன. பலவாரங்களாக இடம்பெற்ற இம் மோதல்களின்போது, இலங்கைத் தீவினுள் இரு பலம் பொருந்திய இராணுவ அமைப்புக்கள் உருவாகியிருந்தமை விமர்சகர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இருதரப்பிலும் பெரும் உயிரிழப்பினை ஏற்படுத்திய இம் மோதல்களின் பின்னர், இரு பகுதியினருமே தமது போர் யுக்திகளை மாற்றி அமைப்பது பற்றி சிந்தித்தனர். இதன் பின்னர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாற்றி அமைத்த புதிய போர் யுக்தியானது, 1992 ஆம் ஆண்டில் அவர்களுக்கு பெரும் வெற்றியாண்டாக அமைவதற்கு வழிவகுத்தது எனலாம். இவ்வாண்டு இராணுவத்திற்கு பெரும் இழப்பையும், மனக்கிலேசத்தையும் ஏற்படுத்திய ஆண்டாக அமைந்தது.



ஒப்பரேசன் த
பூநகரியில் கை

மரபுவழிப் போர்முறையும் இல்லாது, கெரில்லா பாணியின் உயர்நிலையாக அமைந்த இத் தந்திரோபாயமானது இராணுவத்திற்குப் பெரும் உயிர்-மற்றும் தளபாட இழப்புக்களையும் ஏற்படுத்தியது. தொடர் காவலரண்கள் ஊடாக ரோந்து சென்ற இராணுவ அணிகள் விடுதலைப்புலிகளின் முக்கிய குறியாக இருந்தன.

புலிகளின் இத்தாக்குதல் திட்டத்தினை, இராணுவத்தரப்பு எதிர்கொள்ள முடியாத ஒரு நிலையே உருவாகியது. விடுதலைப்புலிகளின் போர் யுக்திகளை, எதிர்த்தரப்பினரே கண்டு ஆச்சரியம் கொள்ளத்தக்க நிலையில் இருந்தன. இவ்வாண்டில் 1500 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட, ஆயிரக் கணக்கானோர் இராணுவத்தை விட்டு ஓடினர்.

இதே சமயம் வடபகுதி போர் முனையானது இரு தரப்பினரையும் பொறுத்து, தாக்குதல்-பாதுகாத்தல் என்பதன் அடிப்படையில் மாறி மாறி இடம் பெறும் ஒன்றாக இருந்தது. ஆனால் இதில் இராணுவத்தின் முக்கிய குறிக்கோள் மேற்குறிப்பிட்ட யாழ். குடாநாடு, மணலாறு ஆகிய இரு பிரதேசங்களையும் கைப்பற்றுதல் அல்லது முற்றுகையிடுதல் என்பதன் அடிப்படையிலேயே இருந்தது. விடுதலைப்புலிகளின் நடவடிக்கை,

www.tamilarangam.net

# நான்காம் ஆண்டின் முடிவில்....

அதற்கு எதிரானதாக பிரதேசத்தைக் கைப்பற்றுதல், முற்றுகையை உடைத்தல் என்ற முக்கிய குறிக்கோளாக இருந்தது.

## மணலாற்று போர்கள்

கடந்த நான்கு ஆண்டு காலத்திலும் மணலாற்றுப் பிரதேசத்தின் மீது சிறீ லங்கா இராணுவம், சிறிய பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும், 1991 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொண்ட, 'ஒப்பரேசன் மின்னல்' இராணுவ நடவடிக்கையும், 1992 இல் மேற்கொண்ட 'ஒப்பரேசன் சிக்ஸ்சர்' இராணுவ நடவடிக்கையும் முக்கியமானவையாகும்.

ஆனால் இவ்விரு இராணுவ நடவடிக்கைகளும், விடுதலைப்புலிகளின் பலமான பதிலடி காரணமாகத் தோல்வியில் முடிவடைந்தன. ஒப்பரேசன் மின்னலின் போது மூன்று வாரங்களுக்கு மேலாகப் போர் நீடித்ததாயினும், இராணுவம் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

இதேவேளை ஒப்பரேசன் சிக்ஸ்சரின் போது இராணுவம் எதிர்பாராத வகையில், நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அன்றே, இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலேயே பலமான பதிலடியைப் பெற்றுக் கொண்டது. இதில் பல இராணுவத்தையும் ஆயுத தளபாடங்களையும் பறிகொடுத்த இராணுவத்தின் இம் முயற்சியானது, "முதல் கோணல் முற்றும் கோணல்" என்ற நிலையிலேயே முடிவடைந்தது.



ஒப்பரேசன் யாழ்தேவியில் புலிகளிடம் அடிவாங்கிய டாங்கி



ளையின் போது
ற்றப்பட்ட டாங்கி

## யாழ் குடாநாட்டுக்கான சமர்கள்

அடுத்ததாக, இராணுவத்தின் இரண்டாவது குறிக்கோளான யாழ். குடாநாட்டின் மீதான படையெடுப்புத் திட்டம், 1991ம் ஆண்டின் இறுதியிலேயே ஆரம்பித்து விட்டதெனலாம். ஒப்பரேசன் வலம்புரி மூலம் 1991 அக்டோபர் 20 ம் திகதி தீவுப் பகுதிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த இராணுவம், எப்பொழுதும் எந்த வேளையிலும் யாழ் நகருக்குள் பிரவேசிக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தது. நாம் யாழ் நகரிலேயே இருந்து 1.5 கிலோமீற்றர் தொலைவிலேயே உள்ளோம் எப்பொழுதும் யாழ். நகருக்குள் பிரவேசிக்க முடியும் என அப்போதைய இராணுவத் தளபதி கமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

அத்தோடு ஒப்பரேசன் வலம்புரியின் இறுதிக் கட்டமாக பூநகரிப்பாதையும் இராணுவத்தால் அக்டோபர் 22ல் மூடப்பட்டது. இந் நிலையானது குடாநாட்டை முற்றுகையிடும் ஒரு பகுதி நடவடிக்கை முடிந்ததாகவே கருதப்பட்டது.

யாழ். குடாநாட்டை முற்றுகையிடும் அடுத்த கட்டம், ஒப்பரேசன் பலவேகய -2 ன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. இதன் மூலம் இராணுவ வேலியொன்று கட்டைக்காடு -வெற்றிலைக்கேணி என்பனவற்றிலிருந்து போடப்பட்டது. பல ஆயிரக்கணக்கான துருப்புக்கள் பயன்படுத்தப்பட்டனர். இந் நடவடிக்கையைத் தொடர்ந்து, "புலிகளை போத்தலின் வாய்க்குள் அடைத்துவிட்டோம்" எனச் சிறீலங்கா இராணுவத் தரப்புக் கூறியது. இதன் மூலம் முற்றுகையின் பெரும்பகுதி நிறைவேறியதாகக் கொள்ளப்பட்டது.

ஆயினும் இதன் இறுதிக்கட்டமாக 'ஒப்பரேசன் யாழ் தேவி' மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடம் செப்டெம்பரில் மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையானது, புலிகளின் பலமான எதிர்த் தாக்குதல்களினால் பின்வாங்க வேண்டியதாயிற்று. ஒரு படை நகர்த்தலின் போது இது வரைகாணாத பின்னடைவு ஒன்றை, ஒப்பரேசன் யாழ்தேவியின் போது சிறீலங்கா இராணுவம் சந்திக்க வேண்டியிருந்தது. டாங்கிகள், கவச வாகனங்கள் என்பனவற்றோடு சுமார் 150 சிப்பாய்களையும், கனிஷ்ட நிலை அதிகாரிகள் பலரையும் அது இழந்தது.

இந்த நிலையில் இராணுவத்தினரின் இரு பிரதான குறிக்கோள்களும் நான்காவது போராண்டின் முற்பகுதியிலேயே பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தன என்றே கூறமுடியும். ஆனால் இத் தோல்விகள் தனியாகப் படையெடுப்பின் போது எதிர்த்துப் போரிட்டதன் விளைவு என்று கொள்ள முடியாது. சுமார் இரண்டு ஆண்டுப் போரில் தொடர்ந்து பெறப்பட்ட வெற்றிகளின் ஒட்டுமொத்தமான விளைவு என்றே கொள்ள வேண்டும்.



கட்டைக் காடு மினி முகாம் தகர்ப்பில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதி

## புலிகளும் மணலாறும்

இதில் மணலாற்றைப் பொறுத்தவரை, ஒப்பரேசன் மின்னல், ஒப்பரேசன் சிக்ஸ்சர் என்பனவற்றில் புலிகளின் பலமான எதிர்த் தாக்குதல்களே இராணுவத்தினரின் பின்னடைவுகளுக்குக் காரணமாக இருப்பினும், 1991 டிசம்பரிலிருந்து கொக்குத் தொடுவாயில் 25 இராணுவம் பலி-1992 டிசம்பர் வரையில் கொக்குத் தொடுவாய்க்கும் கோட்டைக் கேணிக்குமிடையில் 40 இராணுவம் பலி -விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களே இப்பகுதியில் இராணுவப் பின்வாங்கல்களுக்குக் காரணமாக அமைந்தன.

இதன் உச்சக்கட்டமாக அமைந்ததே 1993ல் மண்கிண்டிமலை இராணுவ முகாமைப் புலிகள் தகர்த்து எறிந்தமையாகும். மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பானது, தனியாக ஒரு இராணுவ முகாம் வீழ்ச்சி என்பதைவிட சிறீலங்கா அரசின் கொள்கைக்கு விழுந்த பலமான அடியாகும் என்றே கூறலாம்.

மணலாற்றுப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சிறீலங்கா அரசு எத்தகைய முக்கியத்துவம் கொடுத்தது என்பதும், அங்கு ஏற்பட்ட தோல்விகள் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தின என்பதும், ஒப்பரேசன் சிக்ஸ்சரின் பின்னரும் மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சின் பின்னரும், சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களைக் கொண்டே புரிந்து கொள்ள முடியும். ஒப்பரேசன் சிக்ஸ்சரின் பின்னர், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திடம் இருந்து முப்படைத் தளபதிகளிடமும், மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் பின்னர் கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்து பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடமும் அதிகாரங்கள் மாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## யாழ் முற்றுகையும் புலிகளும்.

இதே போன்றே யாழ் குடாநாட்டின் முற்றுகையும் நீண்டதொரு செயற்பாட்டின் விளைவாகவே புலிகளால் உடைக்கப்பட்டது. 1991ல் ஒப்பரேசன் வலம்புரி -1, 1992ல் ஒப்பரேசன் பலவேகய -2 ஆகியவற்றின் போதும் விடுதலைப்புலிகள், இராணுவத்துடன் பெரும் மோதல்களைத் தவிர்த்தபோதும் அவர்கள் இம் முற்றுகைக்கு எதிராக மேற்கொண்ட இரு தாக்குதல்கள் இராணுவத்தினரின் திட்டத்தையே கேள்விக்குரியதாக்கியது.

இதில் ஒன்று, யாழ் குடாநாட்டின் மீதான இறுதி யுத்தத்திற்கு இரு தினங்கள் இருக்கையில், அராலிப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதல் ஆகும். இதில் சிறீலங்கா இராணுவத்தின் நம்பிக்கை நட்சத்திரமான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 9 இராணுவ கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்டமை முக்கியமானதாக அமைந்தது. இத் தாக்குதலானது யாழ். குடாநாட்டின் மீதான இறுதித் தாக்குதலைக் காலவரையறையின்றி ஒத்தி வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், சிறீலங்கா இராணுவத் தலைமைப்பீடத்தில் நிரப்பமுடியாத வெற்றிடத்தையும் ஏற்படுத்தியது என்று துணிந்து கூறலாம்.

இதே சமயம் இதேவருடம் ஒக்டோபர் இரண்டாம் திகதி விடுதலைப்புலிகள் கட்டைக்காடு இராணுவ மினி முகாம் மீது மேற்கொண்ட தாக்குதல்கள், யாழ் குடாநாடு மீதான தாக்குதலை மட்டுமல்ல யாழ். குடாநாட்டு முற்றுகை குறித்த கேள்வியையும் எழுப்பியது. இது இராணுவக் கட்டமைப்பில் மீண்டும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. அதாவது 1992 மார்ச்சில், கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்து முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆனால் இத் தோல்விகளின் பின்பும் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவமும், சிறீலங்கா அரசும் குறியாகவே இருந்தன. மண்கிண்டிமலையிலேற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவக் கட்டமைப்பு மாற்றத்துடன் ஒரு பெரும்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

இந்நான்கு ஆண்டு காலம், ஒரு பெரும் பிரதேசத்தைத் தமது கட்டுபாட்டிற்குள் வைத்திருந்ததோடு, தமிழீழ அரசு ஒன்று உருவாவதற்கான கட்டுமான பணிகளாக காவல்துறை, நீதித்துறை, வைப்பகம், நிர்வாகத்துறை போன்றவற்றை ஆரம்பித்துள்ளமை, தமிழீழ மக்கள் தமது அரசை நிறுவுவதற்கான வழியில் கணிசமாக முன்னேறிச் சென்றுள்ளனர் என்றே கூறமுடியும்.

www.tamilarangam.net



# சர்வதேச அவதானிகள் ...

யும், சர்வதேச அவதானிகளையும் துப்பாக்கி ஏந்தியபடியே வரவேற்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**"புளட்"இன் கைங்கரியம்.**

வவுனியாவில் புளட் குழுவைச் சேர்ந்த மூன்று பேர், போலியான அடையாள அட்டைகளுடன் வாக்களிக்க முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், வேறு ஆறு பேர் ஆட்களை வாகனங்களில் கொண்டுவந்து வற்புறுத்தி வாக்களிக்கச் செய்தமைக்காக கைது செய்யப்பட்டதாகவும் இவ் அறிக்கை மேலும் கூறுகிறது. தாங்கள் விஜயம் செய்த வாக்களிப்பு நிலையங்கள் எங்கும், புளட் அமைப்பினரது வாக்களிப்பு முகவர்களை மட்டுமே காணக்கூடியதாக இருந்ததாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடை சர்வதேச யூரிகள் அமைப்பு எனும் மற்றொரு நிறுவனம், யாழ் -வன்னி தேர்தல்களில் ஆயுதக் குழுக்களின் பிரதிநிதிகளே வேட்பாளர்களாகவும், பிரச்சாரம் செய்பவர்களாகவும் திகழ்ந்தமையால் யாழ் -வன்னி தேர்தல்கள் செல்லுபடியற்றவையாக சர்வதேச அமைப்புக்களால் கணிக்கப்படுவதாகக் கூறியுள்ளது.

**தேர்தலை மேற்பார்வையிட்டோர் கருத்து**

மேலும், "யாழ் - வன்னி மாவட்டத் தேர்தல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடைபெறவில்லை. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுபவர்கள் மக்கள் ஒப்புதலைப் பெறவில்லை. எனவே அவர்களுக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையில்லை. ஆதலால் அங்கு நிலைமை சீரடையும் பொழுது மீளவும் தேர்தல் நடத்தப்படவேண்டும்" என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான நடவடிக்கைக் குழு (PAF-FREL) எனும் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. இவ் அமைப்பு தேர்தலை மேற்பார்வையிடும் பணியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. ■

# இரண்டாம் கட்ட ஈழப் போரின் ...

வெற்றி ஈட்டப்பட வேண்டும் என புதிதாக ஜனாதிபதிப் பதவியை ஏற்ற டி. பி. விஜேதுங்கா இராணுவத்திற்கு நிர்ப்பந்தம் கொடுத்தார்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கான இறுதி முற்றுகையையும், படை எடுப்பையும் நோக்காகக் கொண்டு ஒப்பரேசன் யாழ்தேவி கடந்த ஆண்டு செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஒப்பரேசன் யாழ்தேவி எதிர்பாராத படுதோல்வியை அடைந்தபோது, யாழ்ப்பாணத்தின் முற்றுகையும், இறுதித் தாக்குதலும் கேள்விக்குள்ளானவையாக மாறின.

## கடற்புலிகளின் பிரவேசம்

இதே சமயம் கடற்புலிகளின் பிரவேசமும் வளர்ச்சியும் யுத்தத்தை புதியதொரு கட்டத்திற்குக் கொண்டு சென்றது. இறுதியாக யாழ் குடாநாட்டின் நுழைவாயிலாக இருந்த யாழ் கடல் நீர் ஏரியில் சிறீலங்காக் கடற்படையால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து, கடற்புலிகளின் பிரவேசம் முக்கியம் வாய்ந்ததாக மாறியது. (இதற்கு முன்னரே கடற்புலிகள் பல தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பினும் கிளாலிக் கடற்பரப்பே அவர்களின் இராணுவ முக்கியத்துவத்தை முதலில் வெளிப்படுத்தியது) இதன் பின்னர் கிளாலிக் கடற்பரப்பில் கடற்புலிகளும், சிறீலங்கா கடற்படையும் அடிக்கடி மோதிக் கொண்டன. ஆனால் 1993 மே மாதத்தில் கடற் கரும்புலிகள் கிளாலிக் கடலில் கடற்படையினரின் இரு நீரூந்து விசைப் படகுகளை மூழ்கடித்ததைத் தொடர்ந்தும், பருத்தித்துறைக் கடற்பரப்பில் 'சுப்பர்டோறா' படகு ஒன்றை மூழ்கடித்ததைத் தொடர்ந்தும்நிலைமையில்மாற்றம் ஏற்பட்டது. யாழ். கடல்நீர் ஏரியில் கடற்புலிகளின் கை ஓங்கத் தொடங்கியது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு நவம்பரில் "ஒப்பரேசன் தவளை" விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. பூநகரி இராணுவ -கடற்படை கூட்டுப்படைத் தளம் மீதான இத்தாக்குதல், சிறீலங்கா இராணுவம் இந் நான்காண்டுப் போரில் என்றுமே சந்தித்திராத தோல்வியாக அதற்கு அமைந்தது. இராணுவக் கட்டமைப்பு முற்றாகவே சிதைந்து போக, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ண பதவி விலகவும், இராணுவக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தையும் இத் தாக்குதல் ஏற்படுத்தியது.

இதே சமயம் யாழ். குடாநாட்டின் மீதான இறுதித் தாக்குதல் திட்டம் காலவரையறையின்றி பின்போடப்பட, முற்றுகைத் திட்டம் தோல்வியையும் தழுவிக்கொண்டது. யாழ் கடல்நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இந் நான்கு போராண்டைப்பற்றி இராணுவ ரீதியாகக் கூறுவதானால், கிழக்குப் போர்முனையில் சிறீலங்கா இராணுவம் சில அனுகூலங்களை அனுபவித்திருப்பினும், வடக்குப் போர்முனையில் சந்தித்த தோல்விகளும், இழப்புக்களும் சிறீலங்கா இராணுவத்தை மட்டுமல்ல, அரசையே உலுப்பும் அளவிற்குச் சென்றதெனலாம். இந்த வகையில் இந் நான்காண்டுப் போர் சிறீலங்காவின் அரசியல், பொருளாதார ரீதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பும் மிகவும் அதிகமாகும்.

இப் போராண்டு நான்கிலும் சிறீலங்கா அரசியலில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள், அதனால், இன்று எழுந்துள்ள அரசியல் நெருக்கடி என்பவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் போரின் தாக்கங்கள் என்றே கொள்ள முடியும். 1991 இல் இடம்பெற்ற பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதில் இருந்து கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு, கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ மீதான தற்கொலைத் தாக்குதல், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் சுட்டுக் கொல்லப்பட்டமை, ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டமை யாவும் அடங்குகின்றன.

இந்த வகையில், கடந்த நான்கு ஆண்டுகளும் இலங்கையின் அரசியல், இராணுவ வரலாற்றில் பல முக்கிய பதிவுகளைக் கொண்டவை. சிறீலங்காவைப் பொறுத்த வரையில் பல தோல்விகளுக்கும் இழப்புக்களுக்கும் காரணமாகிய இப் போராண்டுகள், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதைத் தெளிவாகவே புலப்படுத்தியுள்ளன. விடுதலைப்புலிகள் இக்காலப் பகுதியில் ஈட்டிய வெற்றிகள் தமிழர் தேசிய இனத்தின் போராட்ட வரலாற்றில் பெரும் முன்னேற்றப்படிகளாகும்.

அத்தோடு இந் நான்கு ஆண்டு காலம், ஒரு பெரும் பிரதேசத்தை தமது கட்டுப்பட்டிற்குள் வைத்திருந்ததோடு, தமிழீழ அரசொன்று உருவாவதற்கான கட்டுமான பணிகளாக காவற்துறை, நீதித் துறை, வங்கித்துறை(வைப்பகம்), நிர்வாகத் துறை போன்றவற்றை ஆரம்பித்துள்ளமை, தமிழீழ மக்கள் தமது அரசை நிறுவுவதற்கான வழியில் கணிசமாக முன்னேறிச் சென்றுள்ளனர் என்றே கூற முடியும்.

**நன்றி: 'ஈழநாதம்'**

# எறிகணை - குண்டு ...

இடைக்காடு, பத்தமேனி, ஆவரங்கால், நவக்கிரி, கதிரிப்பாய், நீர்வேலி, அச்செழு ஆகிய பகுதிகளில் வாழும் மக்களின் குடிமனைகள், கால்நடைகள், வியாபாரக் கட்டடங்கள் என்பன கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயமும் எறிகணைத் தாக்குதலால் சேதமடைந்துள்ளது. அச்சுவேலி தோப்புக் கொலினியில் 55 வயதுடைய சின்னத்தம்பி இலட்சுமி, 12 வயதுடைய அகிலன் சின்னத்தம்பி, மகப்பேற்றை எதிர்நோக்கியிருந்த 22 வயதுடைய இந்திரன் லீலாதேவி, அவரின் இரண்டு வயதுச் சிறுமி இந்திரன் வனிதாதேவி, மற்றும் 12 வயதுடைய வினிதா பொன்னன் ஆகியோர் எறிகணைவீச்சால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

## கடலில் சூடு

சக்கோட்டையைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான மரியாம்பிள்ளை யோசப் என்பவரும், அவரின் 22 வயதான மகன் யோசெப் மோசேஸ் தயானும் கடலில் மீன்படிக்கும்பொழுது சிறீலங்காக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ஓமந்தைப் பகுதியில், சிறீலங்காப் பாதுகாப்புப்படை விமானங்கள் கடந்த ஆவணி 25 ஆம் திகதியன்று, குண்டுவீசித் தாக்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவில்

வவுனியா ஓயார் சின்னக்குளம் பகுதியில், மோட்டார்க் குண்டுத் தாக்குதலில் சிறீலங்காவின் கப்டன் தரத்தினர் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர். இதில் கப்டன் தரத்தில் உள்ள வரது கால்கள் சத்திரசிகிச்சை மூலம் பின்னர், அகற்றப்பட்டதாக அனுராதபுர வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. ■

# யாழ் மாவட்ட...

னங்களும் குழந்தைகள் நலன் பேணும் நிறுவனங்களும் இவ் விடயத்தில் தலையிட்டு, சிறீலங்காவை, வடபகுதி மீதான பொருளாதாரத்தடையை அகற்றுமாறு வற்புறுத்தல் வேண்டுமென, யாழ். மாவட்டத்தில் குழந்தைகள் நலன்பேணல் சேவையில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவர் கண்ணீர் ததும்ப வேண்டிக் கொண்டார். ■

# பலாலி விமான...

அடுத்ததாக கரும்புலிகள் அணி ஊடுருவிச் சென்ற விமானப்படைத்தளம் சிறீலங்கா இராணுவத்தினராலும், விமானப்படையினராலும் உச்சப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட இடமாகும். அத்தோடு, ஊடுருவிச் சென்ற தூரமானது சுமார் நான்கு கிலோ மீற்றர்களுக்கும் மேற்பட்ட தூரமென இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தாக்கி அழித்தல் என்பதோடு ஊடுருவி நுழைதல் / முன்னேறுதல் என்பது, தாக்குதல் திட்டத்தின் முக்கியமானதொரு பகுதியாகவே இருந்திருக்கவேண்டும்.

இந்நிலையில் பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதை வரை விடுதலைப் புலிகள் ஊடுருவிச் சென்றமையானது, விமானப் படையின் பாதுகாப்பு மையத்தையே விடுதலைப் புலிகள் எட்டி விட்டதற்குச் சமமானதாகும். இதன் மூலம், கரும்புலிகள் வடபகுதியில் உள்ள சிறீலங்கா ஆயுதப்படையினரின் எந்த இலக்கையும் தாக்கும் வல்லமையைப் பெற்றுள்ளமை நிரூபணமாகியுள்ளது.

இந்தவகையில், தேசியத் தலைவர் பிரபாகரன் சிந்தனையில் உதிர்த்து, தியாகமும் -அர்ப்பணிப்பும் நிறைந்த போராளிகளால் செயலுருவம் பெறும், 'கரும்புலிகள்' போர்வடிவம் சிறீலங்கா இராணுவத்தால் என்றுமே எதிர்கொள்ள முடியாத ஓர் போர் முறையாகவே மாறியுள்ளது. இப்போர் வடிவமானது, சிறீலங்கா போர் முறைத்திட்டங்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் சிதைப்பதோடு, தமிழீழப் போராட்டத்தை நகர்த்திச் செல்லும் பிரதான உந்துசக்தியாக உள்ளது என்பதிலும் கேள்விக்கே இடமில்லை. ■

# நான் தேசியத் தலைவரை ...

பொருட்கள் மீதான விற்பனை வரியை, போராட்ட சூழலில் பல கஸ்ரங்களின் மத்தியில் தாய் மண்ணில் வாழும் மக்களிடம் விதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது.

தமிழீழத்திற்கு வெளியில் இருந்து பங்களிப்பவர்களை தமிழீழ மண்ணின் விடுதலையை நேசித்தவர்களாகவே கருதுகிறோம்.

வெளிநாடுகளில் பயிலும் தமிழீழ மாணவர்கள் தாய்மண்ணின் நிகழ்வுகளையும், தேவைகளையும் உணர்ந்தவர்களாகவும், தமிழீழ கலை பண்பாடுகளுடன் இணைந்தவர்களாவும் காணப்படுவதுடன், எமது மண்ணின் வளத்திற்கு உகந்ததான விவசாயத்துறை, பொறியியல்துறை, உதிரிப்பாக நுண் அறிவுத்துறை போன்றவற்றில் அறிவைப் பெறுவது தாய் மண்ணின் தேவையைப் பூர்த்தி செய்ய உகந்ததாகும்.

தமிழீழ மண்ணில் சேவை செய்யும் வைத்தியர்களின் விருப்பத்தைத் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் வாழும் தமிழிழீழ வைத்தியர்கள், எமது தாய் மண்ணின் நிகழ்வுகளை உணர்ந்து, ஒரு மருத்துவக் குழுவை அமைக்க வேண்டிய தேவை உண்டு. அதன்மூலம் எமது நாட்டின் மருந்துத் தட்டுப்பாட்டிற்கும், எமக்கு வேண்டிய வைத்திய கருத்துப் பரிமாறலுக்கும் உதவலாம். மிகச் சாதாரண மருந்துகளைக் கூட எமது நாட்டிற்குள் கொண்டுவர சிங்கள அரசு தடை விதித்துள்ளது. அதனால் எமது நாட்டில் அவற்றைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது என்றார். இதே கருத்து வெளிநாட்டு தொடர்புப் பொறுப்பாளர் கஸ்ரோ அண்ணனின் பேச்சிலும் கலந்திருந்தது. மலர்ந்து கொண்டிருக்கும் தமிழீழத்திற்கு இன்று உடனடியாக வைத்திய நிபுணர்கள், பொறியியல் நிபுணர்களின் சேவைகள் தேவைப்படுகிறது. குறிப்பாக நோயாளிகளால் நிரம்பிவழியும் யாழ். வைத்தியசாலையில் தமிழ் உணர்வுடன் மூச்சுவிட நேரமில்லாது உழைக்கும் ஒரு சில வைத்தியர்களின் நிலைமையைப் பார்த்தாலே புரிகிறது.

தமிழீழத்தில் நான் சந்தித்த போராளிகள் தொடக்கம் பொறுப்பாளர்கள் வரை ஒரே கருத்துடையவர்களாகக் காணப்படுவதுடன், கையில் ஆயுதமும் தலை நிறைய அரசியல் அறிவு நிறைந்தவர்களாகவும், தமிழீழத்தின் எந்தத் துறையிலும் பணியாற்ற பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

தமிழீழத்தின் எந்தத் துறையில் பணியாற்றுபவரானாலும் அது பற்றி பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக, தனியார் உணவு விடுதி நடாத்தும் முகாமையாளர்கள் கூட, தமிழீழத்தில் நடாத்தப்படும் முகாமையாளர் பயிற்சி நெறியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்காக வழங்கப்படும் சான்றிதழ்கள் உணவு விடுதிகளில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். தமிழீழத்தில் நடைபெறும் கொள்வனவு விற்பனவுகள் யாவும் பற்றுச்சீட்டுடன் இடம்பெற வேண்டும் என்பது பரவலாக்கப்படுகிறது. தமிழீழத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு போராளியும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலையில் எத்தகைய பங்கை வகிக்கிறார்கள்- அவர்கள் தாங்கள் வாழும் வெளிநாட்டு அரசாங்கங்களிடம், எமது நாட்டின் விடுதலைக்கான அவசியத்தை எவ்வாறு எடுத்து விளக்குகிறார்கள், வெளிநாட்டு அரசியல் கட்சிகள், சமூக சேவை நிறுவனங்கள் மத்தியில் தமிழீழவிடுதலைக்கான சர்வதேச அங்கீகாரம் எவ்வாறு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதில் பேரார்வம் உள்ளவர்களாக இருப்பதை அவதானிக்கலாம். ■

# தமிழீழ மக்களின்...

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிலுள்ள ஊர்காவற்றுறையில் 11,-263 வாக்குகளும், சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிலுள்ள காரைநகரை உள்ளடக்கிய, வட்டுக்கோட்டைத் தொகுதியில் 964 வாக்குகளும் பதிவாகியுள்ளதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. அதேபோல், காங்கேசன்துறைத் தொகுதியில் ஒரு பகுதி சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளது. அங்கு 121 வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதேவேளை, சிறீலங்காவின் இன்றைய வாக்காளர் பதிவு ஏட்டின்படி (இதில் பல குறைபாடுகள் உண்டு.) நல்லூர் 62,372. மானிப்பாய் 58,382. பருத்தித்துறை 40,336. கிளிநொச்சி 55,9-95. கோப்பாய் 56,496. சாவகச்சேரி 51,717. காங்கேசன்துறை 60,417. உடுப்பிட்டி 52,153. வட்டுக்கோட்டை 58,949. ஊர்காவற்துறை 49,504. யாழ்ப்பாணம் 50,-045.

சிறீலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் சிறீலங்கா அரசாங்கம் நேர்மையற்றதும், சுதந்திரமற்றதுமான தேர்தலை நடாத்தி, அதன்படி அங்கிருந்தும் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளதாக உலகுக்கு அறிவித்துள்ளது. ■

# தமது தலையில் ...

நிலையில் அல்பெய்த் சரணடைய வேண்டும் என்று சாலேயும், இறுதிவரை போராடுவோம் என்று அல்பெய்த்தும் கூறிக்கொண்டனர். சர்வாதிகாரப் போக்குடைய சாலேயின் பேராசை காரணமாக வெடித்த இப்போரின் முடிவு, எத்தகையதாக இருக்கும் என மற்றைய அரபு நாடுகள் சரியாகக் கணிப்பதற்கிடையில், சாலேயின் பிடிக்குள் தென்யேமன் வீழ்ச்சியடைந்து விட்டது.

***யேமனின் எதிர்காலம்***

தென்யேமனின் இவ்வீழ்ச்சியோடு, இருயேமன்களும் பௌதிக ரீதியாக ஒன்றாக்கப்பட்டாலும், அவற்றிடையேயுள்ள அடிப்படை முரண்பாடுகள் தீராத வரை, இவை நடைமுறைச் சாத்தியமற்றவை என்றே யேமனின் கடந்தகாலப் பாடம் கற்பிக்கின்றது. அதேபோல, சாலே போன்றோரின் சர்வாதிகாரப் போக்கிற்கு வரலாறு எவ்வகையில் பதிலளிக்கும் என்பதும், இனி யேமன் கற்றுத்தரப் போகும் பாடமாக அமையப் போகின்றது. ■

***நன்றி: 'ஈழநாதம்'***

www.tamilarangam.net



# துணிவு

சிறு கதை

இளஞ்செழியன்

சேகரரிற்கு மனம் 'திக் திக்' என்று அடிக்கத் தொடங்கியது. "இப்ப என்ன செய்கிறது ஆமிக்காறங்கள் வந்தாங்கள் எண்டால் என்ன நடக்குமோ? வீடு தரைமட்டமாகுமோ? சாமான்களெல்லாத்தையும் எரிப்பாங்களோ? அரைகுறையாய் வெட்டப்பட்டிருக்கும் 'பங்கரும்' அருகிலிருக்கும் மரக்குற்றிகளும் அவரைப் பயமுறுத்தியது. அதிகாலை வேளையிலே வீதியால் வேகமாகப் பறக்கும் சைக்கிள்களும் அதில் சென்றவர்கள் கூறிப் போன வார்த்தைகளும் அவரைப் பதற்றத்திற்குள்ளாக்கி நிலை தடுமாற வைத்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு குரல் கொடுத்தார், "தம்பி ஆமிக்காரங்கள் அரசடி வயலுக்க இறங்கியிட்டாங்களாம் கெதியா அம்மா எல்லாரையும் வெளிக்கிடச் சொல்லு."

மேல்வானில் கெலி ஒன்று வட்டமிட்ட படியிருக்க, கிழக்கு வானில் வேறொன்று தாழ்ந்துயர்ந்து கொண்டிருந்தது. கீழிருந்து வெடிக்கும் துப்பாக்கிகளின் ஓசை எங்கும் பரவி அவர் மனதில் ஒரு சிறு தெம்பை இழையோடவிட்டது.

அந்தக் கெலிதான் ஆமியளை இறக்குது போல என சேகரர் ஊகித்தார்.
"என்ன அப்பா ஆமிக்காறங்கள் அரசடி வயலுக்க இறங்கீட்டாங்களோ?"
ஓமடா கெதியா வெளிக்கிடு!; என்றபடி அறைக்குள் வேகமாக நுழைந்தார்.
தாய்க்கு செய்தி எட்டியதும் பரபரத்தாள்.
"ஆச்சியை இப்ப என்ன செய்றது? நடக்கவும் மாட்டா சைக்கிள்ளயும் இருக்க மாட்டா.... கடவுளே என்றபடி அவள் நிமிர்ந்தாள். அதற்குள் அவர்களது மகள் பரவை ஆச்சியிடம் ஓடிப்போய் ஆச்சி ஆமிக்காறங்கள் கிட்ட வந்திட்டாங்களாம். டப்பெண்டு வெளிக்கிடுங்கோ எங்கயாலும் தூரவாப் போய் நிற்பம்" என்றாள்.



"என்னால வர ஏலாது பிள்ளை. என்ர அரசடி வீட்ட விட்டு வேற இடத்துக்கு வரவும் மாட்டன் உனக்குப் பயமெண்டா எங்கயாவது போய் நில்" என்று கூறிவிட்டாள். பரவைக்கு ஆச்சியின் பதிலைக் கேட்கத் திகிலாக இருந்தது. தாயிடம் ஓடிப்போய் "அம்மா ஆச்சி இந்த இடத்தை விட்டு வேற இடத்துக்கு வரமாட்டாவாம் எங்கள வேணுமெண்டா போகட்டாம்" என்றாள்.

ஆச்சி திடீரென இப்படிக் கூறியது தாய்க்கு திகைப்பை ஏற்படுத்தியது.

ஆமி வருகிறான் என்ற செய்தி கேட்டு அவ்வளவாகப் பதட்டப்படவில்லை. ஆனால், ஆச்சி அரசடி வீட்டை விட்டு வரமாட்டாவாம் என மகள் கூறியதும் உதறலெடுத்தது. ஆச்சி ஒரு பொல்லாத பிடிவாதக்காரி. பிடிவாதம் பிடித்தால் இலேசில் மசிவதில்லை. இனி அவவின் கொள்கையை மாற்றிக் கூட்டிக் கொண்டு போவதென்றால் அது நடக்கக் கூடியகாரியமாக அவளுக்குத் தோன்றவில்லை.

தாய் பதறியபடி ஆச்சியிடம் போய்க் கேட்டாள், "ஆச்சி ஆமியெல்லே வந்திட்டான். கெதியா வெளிக்கிடுங்கோவன், எங்கையாலும் எட்டப் போய் நிப்பம். ஒருக்கால்லல்லோ சொல்லிப் போட்டன், அரசடியை விட்டு ஒரு இடமும் வரமாட்டன் எண்டு. பேந்தென்ன கரைச்சல் குடுத்துக் கொண்டிருக்கிறாய்" ஆச்சி கோபத்தோடு கத்தினாள்.

மக்கள் எல்லாம் தம் கால்போன போக்கில், எங்காவது ஓடித் தப்பி விடுவோம் என்ற எண்ணத்தில் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், ஆச்சியோ குறையில் கிடந்த பனையோலைப் பெட்டியை எடுத்து நிதானமாக இழைக்கத் தொடங்கினாள்.

அம்மாவிற்கு தனியே விட்டுப் போக மனமில்லை. மீண்டும் கேட்டாள், கெதியாய் வெளிக்கிடுங்கோவன் ஆச்சி. பெட்டியப் பின்னிக் கொண்டிருக்கிறியள், மோட்டுக் காடையன்கள் கண்ட பாட்டுக்கு வெட்டிப் போடுவான்கள்; தாயை மகள் சற்று மிரட்டிக் கூறினாள், கூறும் போதே அவள் கண்கள் கலங்கின. ஆனால், ஆச்சியோ அதற்கெல்லாம் பயப்பட்டதாக இல்லை.

"நான் வரேல்ல எண்டா வரேல்லத் தான். அவங்கள் என்னைக் கடிச்சுப் போட்டாலென்ன, வெட்டிப் போட்டாலென்ன நான் சொந்த நிலத்திலயே கிடந்து சாகிறன். ஆச்சிக்கு தன் மண்ணையும் வீட்டையும் விட்டு இடம் பெயர மனம் இடந்தரவில்லை. மகள் அவ்வாறு கேட்டது, கோபத்தை மூட்டிவிட்டது. பெடியள் எல்லாரும் எங்களுக்காக தங்கட உசிரையும் மதியாமல் பொம்பர் அடியுக்கையும் கெலி அடியுக்கையும் நிண்டு சண்டை பிடிக்கிறாங்கள். அவங்களுக்கு ஏதாவது ஒரு உதவியக்கிதவியச் செய்வமெண்டில்லாமல், ஆமி வருகுது எண்டோன்ன முயல்ப் பாச்சல்ல ஓடினமாம் எனப் படபடத்தாள். கிழவியின் வார்த்தைகளுக்குள் ஏதோ ஒரு நியாயம் எழுந்து நின்றது.

அதற்கு மேல் மகளால் அங்கு நின்று தாமதிக்க முடியவில்லை. அயலவர்கள் எல்லோரும் வேகமாக பாதுகாப்புத் தேடி வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வானில் கெலி வேறு தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தது, அதற்குள் கணவன் சேகரர் குரல் கொடுத்தார், என்ன இரண்டு பேரும் நிண்டு மினக்கெடுறியள் எல்லாச் சனங்களும் போட்டுதுகள் கெதியா வாங்க பாப்பம் கணவனின் குரல் அவளுக்கு மேலும் பயமூட்டியது. அயலவர்கள் எல்லோரும் தப்பியோடிவிட தான் மட்டும் தனிமையில் நிற்பது போல் உணர்வேற்பட ஆச்சியை விட்டுப் பிரிய மனமின்றி வெளியே விரைந்து வந்தாள்.

கணவனுக்கு விபரமெதுவும் புரியவில்லை. பிள்ளைகளும் கூறவில்லை. கூற நேரமும் கிடைக்கவில்லை. அவ்வளவு வேகமாக பொருட்களைச் சைக்கிளில் கட்டியிருந்தார்கள். மனைவி தனியே அங்கு வருவதைக் கண்ட சேகர

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

## ஓய்வு கொடுத்து விடு

தமிழா.......... நீ
தமிழன் என்று கூறி தலை நிமிர்ந்து பார்க்க
நீ நிம்மதியாய் வாழ சற்றும்
சம்மதியாத அதிகார வெறியன் காலமிது - நீயோ
வசந்தங்கள் அள்ளி அள்ளியே வழங்கப்படும் என்று
கனவுடன் காலவோட்டத்தில் கலக்கின்றாய்.

காலம் காலமாய் கனவுகள் நிஜமல்ல - என்று
காலம் உனக்கு உணர்த்தினாலும் - நீ
அடிக்கடி கனவுகளுடன் திடுக்கிடுகின்றாய் - ஆனால்
காலவோட்டத்துடன் சேர்ந்து ஓடும் நீ
குருடாக்கப்பட்ட கனவுகளை ஏன் சுமக்கின்றாய்.

சொத்துக்கள் சுகங்கள் எல்லாம் உனது தான் - ஆனால்
அவை இன்று உன்னிடமா இருக்கின்றது - இல்லையே
தாண்டி வந்து ஆண்டிட நினைக்கும்
நஞ்சுகளின் அடிமையாய் துஞ்சுவது மட்டும் புரிகின்றதா!

எது எப்படியாயினும் - நீ
ஓட்டமெடுக்கவே நினைப்பாய் - காரணம்
ஓடி ஓடியே அலுக்காதவன் தானே நீ
ஓடுபவன் இருக்குமட்டும் ஓட்டுபவன்
இருக்கத்தானே செய்வான்
சற்று நில்லேன் மெல்லத் திரும்பிப்பார்.

உன்னால் மறக்கப்பட்ட வசந்தங்கள்
உன்னையே பார்த்துச் சிரிக்கின்றது - என்பது புரியும்
உன் சொத்துக்கள் உன் வசந்தங்கள்
உரிமையல்லாதவனின் காலடியில் பட்டு
முனகும் ஈனக்குரல் உன் செவிக்கும் எட்டும்

நீயும் உன் சமுதாயமும் மறந்த
வசந்தங்களை மீண்டும்
உம்மிடம் ஒப்படைக்க உனக்கு
இடப்பட்ட விலங்கு அறுபட
ஓங்கி நிற்கும் உதவிக் கரங்கள் அப்போது
உனக்குத் தெரியும்.

ஆனால் நீ நில்....
தூரமாய் ஓடாதே உன் சுதந்திர பூமியில்
நீயும் தமிழன் சமுதாயமும்
நிம்மதியாய் வாழவேண்டி
நீண்டு புரண்டு குருதியில் மிதக்கும்
உரிமைக்குரல் ஒன்று கேட்கும் - உன் காதிலே



ஓடி ஓடியே ஓய்ந்த உன் கால்களுக்கு
ஓய்வு கொடு - உன் சுதந்திர பூமி
சுடுகாடாய் மாறிவிடப் போகின்றது
உனது அருகிலேயே உனது ஆயுதம் கிடக்கின்றது
தேவை என்பது தேவையாகிவிட்டது
துணிந்து தூக்கிவிடு சுதந்திரம்
உன்னிடம் ஓடி வந்துவிடும்

மணலாறு ஜெயராஜ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ உட்கட்டுமானம்

## நீர் வழங்கலும் வடிகாலும் - பகுதி 1

சென்ற இதழ் தொடர்ச்சி

**1. நீர்:**

நன்னீர் கிடைத்தற்கு அரியது. பூமியில் நன்னீரின் அளவு பின்வருமாறு:
உப்பு நீர் 97. 4%
பனிக்கட்டிகள் 1. 8%
நன்னீர் 0. 8%

ஆகவே, நாம் நீர் வளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
1. நிலக்கீழ் நீர் (General Water).
2. நிலமேல் நீர் (Surface Water).

பொதுவாக நிலக்கீழ் நீரில், இரசாயனச் சேர்க்கைகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. இதனால், பாரிய நீர் சுத்திகரிப்புத் தேவைப்படுவதில்லை. நிலக்கீழ் நீரில், உப்புத்தன்மையும் கடினத்தன்மையும் அதிகமாகக் காணப்படுகின்றது. சாதாரணமாகக் குளோறின் இடப்பட்டு, நோய்க்கிருமிகளை நீக்கி குடிநீராகப் பாவிக்கலாம்.

நிலமேல் நீர் இரசாயன மாசுக்கள் படிந்ததாகவும், கனியுப்புக்கள் மற்றும் பக்றீரியாத் தாக்கங்களுக்கு உட்பட்டதாகவும் காணப்படுகின்றது. ஆகவே, இந்நீரைக் குடிநீராகப் பாவிக்கும்போது, முழு அளவில் சுத்திகரிக்க வேண்டும்.

நிலத்துக்கு அடியிலுள்ள நீர் குறைவாகவே காணப்படுகின்றது. மழைவீழ்ச்சி இல்லாவிட்டால், மேலும் குறைந்துகொண்டே போகும். நாம் நிலக்கீழ் நீரைப் பாதுகாக்கும் வழிகளைப் பேணாவிட்டால், ஈற்றில் கடல்நீரே நம்கிணறுகளை ஆட்கொள்ளும். மேலும், விவசாயத் தேவைக்கு அதிகமான அளவு செயற்கை உரத்தையும், களை கொல்லிகளையும் பாவிப்பதனாலும் நைதரசனின் (Nitrogen) இரசாயனச் சேர்க்கை நிலக்கீழ் நீரை அசுத்தப்படுத்துகின்றது. இப்படி அசுத்தம் அடையும் நீர், சிறுகுழந்தைகளைப் பாதிக்கும்.

### தமிழீழத்தின் நீர் வளமும் குடிநீர் விநியோகமும்

2 ஒரு இடத்தின் நீர் வளம், நிலக்கீழ் நீராக இருந்தால், பூமியின் தன்மையில் (Geological Condition) தங்கியிருக்கும். மணற்பாங்கான இடங்களில் மணலுக்கு இடையிலும், கற்பாறைகளில் கற்பாறைகளுக்கு இடையிலும், வெடிப்புக்களுக்கு இடையிலும் தேங்கி நிற்கும். இது ஒரு வரையறுக்கப்பட்ட அளவாகவே இருக்கும். மேலும், நிலமேல் நீர் அந்தந்த இடங்களில் காணப்படும் நீர் நிலைகளிலே தங்கியிருக்கும். தமிழீழத்தின் பிரதான இடங்களின் நீர்வளம் பின்வருமாறு:

**2. 1 யாழ். குடாநாடு:**

இன்றைய நீர்த்தேவையைக் குடாநாட்டு மக்கள் முழுமையாக நிலக்கீழ் நீரிலேயே நம்பியிருக்கின்றார்கள். மட்டுப்படுத்தப்பட்ட அளவே நன்னீர் கிடைக்கின்றது. கடும் மழையினாலும் பருவமழையின் காரணமாகவும் நீரின்தன்மை மாறுதல் அடைகின்றது. ஆனால் நன்னீர் சேமிப்பு, சரியான முறையில் பராமரிக்கப்படாததனால் குறைந்துள்ளது. சில இடங்களில் எவ்விதமான காலநிலையிலும் நீர் உப்பாகவே காணப்படுகின்றது.

இரசாயன ஊடுருவலும், கழிவுப் பொருட்களின் வெளியேற்றமும் குடாநாட்டின் நிலநீரைப் பாவனைக்கு உகந்ததல்லாமல் செய்கின்றன. விவசாயப் பொருட்களான உரவகைகள், கிருமி நாசினிகள் நீரில் ஊடுருவியுள்ளதாக ஐயப்பாடு இருக்கிறது. அதிகமான இடங்களில் மிதமிஞ்சிய நைதரசன் மட்டம் 95 பி பி எம் ஆகக் கூடியுள்ளது. (50 பி பி எம் தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு).

சாதாரணமாகக் குடிநீர் 10 அடி - 12 அடி விட்டமுள்ள கிணறுகளில் இருந்து பெறப்படுகின்றது. காலத்துக்கு ஏற்றாற்போல், கிராமவாசிகள் அரைமைல் தொடக்கம், ஒரு மைல்வரை சென்று, குடிநீரைப் பெறுகின்றார்கள். உள்ளூராட்சி மன்றங்களினாலும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினாலும் குடாநாட்டில் குழாய்மூலம் நீர் விநியோகம், இருபத்தைந்து இடங்களில் நடைபெறுகின்றது. எல்லா நீர் விநியோகத் திட்டங்களிலும் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் நீர் வழங்கப்படுகின்றது. நாளாந்தம் சுமார் 3, 000 க. மீற்றர் நீர் எல்லாத் திட்டங்களிலும் இருந்தும் பெறப்படுகின்றது.

*1971 ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பும் குடிசன அடர்த்தியும் பின்வருமாறு:-*

| பகுதி | 1971ம் ஆண்டு குடிசன மதிப்பீடு | நிலப்பரப்பு சதுர மைல் | குடிசனச் செறிவு சதுர மைல் |
|---|---|---|---|
| யாழ் குடாநாடு | 575,300 | 351 | 1639 |
| தீவுப்பகுதி | 73,800 | 60 | 1230 |
| நெடுந்தீவு | 5,600 | 19 | 295 |
| மொத்தம் | 654,700 | 430 | 1523 |

வருடாந்தம் 1. 7% மக்கள் தொகை அதிகரிக்கின்றது. 2000 ஆம் ஆண்டளவில் 10 இலட்சம் மக்கள் தொகை அதிகரிக்கும். யாழ் குடாநாட்டின் அதிகமான மக்கள் நகரங்களிலேயே வாழ்கின்றார்கள். யாழ்ப்பாண மாநகரம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரப் பகுதிகளிலேயே சனத்தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டளவில், குடாநாட்டின் உத்தேச நீர்த்தேவை நாளாந்தம் 15 மில்லியன் கலன் ஆகும்.

குடாநாட்டின் நீர்த்தேவையை, இப்பொழுது உள்ள நீர் விநியோகத் திட்டங்கள் பூர்த்தி செய்வதாக இல்லை. இதனைக் கருத்திற்கொண்டு, தேசிய நீர்வழங்கல் சபை 1980 ஆம் ஆண்டு, அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் (US Aid), 'இஞ்சினியறிங் சயன்ஸ்' என்ற நிறுவனத்துடன் பின்வரும் வேலைகளுக்கு ஒரு ஒப்பந்தம் செய்தது.

1. சாவகச்சேரி, பருத்தித்துறை சந்தை நகர்களுக்கு இரு நீர் விநியோகத் திட்டங்களை வடிவமைத்து நிர்மாணிக்கவும்,
2 யாழ். குடாநாட்டு நீர்வளத்தை ஆராய்ந்து ஒரு பெருந்திட்டத்தை (Master Plan) சமர்ப்பிக்கவும் ஆகும்.

1987 ஆம் ஆண்டளவில், இரண்டு சந்தை நகர நீர் விநியோகத் திட்டங்களின் வடிவமைப்பும் நிர்மாணமும் 60 வீதம் பூர்த்தியானவேளையில், நாட்டின் அசாதாரண நிலமையினால், நிறுத்தி வைக்கப்பட்டன. இவர்கள் குழாய்க்கிணறுகளில் இருந்து, நீரின் வளத்தை சரியான முறையில் ஆராயமுடியாத நிலையில், இந்தப் பெருந்திட்டத்தைத் (Master Plan) தயாரித்தார்கள். இதில் போதுமான தரவுகள், ஏனைய விபரங்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன. மேலும், இவர்கள் நீர்வளத்தை மதிப்பீடு செய்வதற்காக, குடாநாட்டில் பரவலாக 56 குழாய்க் கிணறுகளைத் தோண்டி உள்ளார்கள். குறைந்தது இரண்டு வருடம், இக்கிணறுகளின் நீர்வளத்தை மதிப்பீடு செய்வதற்கு உத்தேசித்து இருந்தார்கள். 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட குழப்ப நிலைமை காரணமாக, வேலைகளை நிறுத்தவேண்டி இருந்தமையால், ஒப்பந்தக்காரரையும் குறை கூறுவதற்கில்லை.

மேலும், இந்நிறுவனம் குடாநாட்டில் அதிக அளவில் நன்னீர் எடுக்கக்கூடிய நான்கு நீர் நிலையங்களைக் (Water Basin) கண்டறிந்தார்கள். அவையாவன:

1. பருத்தித்துறைத் தளம்
2. சாவகச்சேரித் தளம்
3. சுண்ணாகத் தளம்
4. ஊர்காவற்துறைத் தளம்

மேற்கூறிய தளங்களில் இருந்து, பாதுகாப்பாகப் பெறக்கூடிய நன்னீரின் அளவு மிகக்குறைவாக இருக்கின்றது. சாவகச்சேரி, பருத்தித்துறை சந்தை நீர் விநியோகத் திட்டங்களுக்கு, பருத்தித்துறைத் தளத்தில் இருந்தே நீர் பெறப்படுகின்றது. மேலும், சுண்ணாகம் தளத்திலிருந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நிர்மாணித்து இருக்கின்றது. இதேபோல், ஊர்காவற்றுறை நீர்த் தளத்திலும் ஒரு நீர் விநியோகத்திட்டம் இருக்கின்றது. ஆகவே, இத்தளங்களிலும் உபயோகம் பெருகி, நீர்வளம் குறையலாம். சரியான கணிப்பீடு இல்லாதபடியால், திடமாக எதுவும் கூறமுடியாது.

ஆகையினால், நீர்வளச் சபையினால் குழாய்க்கிணறுகளின் நீர்வளம் ஆராயப்படவேண்டும். இரண்டு வருடங்களுக்கு நீர்மட்டம் மற்றும் தரவுகளை ஆராய்ந்து, கணனி (Computer) மூலம் கணக்கிட்டு, மிகுதியாகவிருக்கும் நீரின் அளவைக் கணிக்கவேண்டும். கணனிக்குத் (Computer) தேவையான தரவுகளும் முறைகளும் பெருந்திட்டத்தில் (Master Plan) தரப்பட்டு இருக்கின்றது.

மேலும், பெரிய மாதிரித்திட்டத்தில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, உரும்பிராய், சுண்ணாகம், மானிப்பாய், ஊர்காவற்துறை, பண்டத்தரிப்பு, சங்கானை, காங்கேசன்துறை ஆகிய பன்னிரண்டு நகரசபைகளை அறிமுகப்படுத்தி, அவைக்கான குழாய்நீர் விநியோக வடிவமைப்பையும், உத்தேச செலவீனங்களையும் தந்திருக்கின்றார்கள். ஆனால், இவற்றிற்கு எங்கிருந்து நீர் பெறுவது என்று சிபார்சு தரப்படவில்லை. இது இவ்வறிக்கையில் உள்ள ஒரு குறைபாடாகும்.

கடந்த நாற்பது ஆண்டுகளாகக் குடாநாட்டில் பலவிதமான ஆய்வுகளை மேற்கொண்டும், எவ்வளவு நன்னீர் பாதுகாப்பாகப் பெறமுடியும் என்ற முடிவுக்கு ஒருவரும் வரவில்லை. இதுதான் முக்கிய விடயமாகும். நாம் குடாநாட்டில் இருந்து பெறக்கூடிய நீரின் அளவைக் கொண்டுதான், தேவையான மேலதிக நீரின் அளவைக் கணக்கிடலாம்.

மேலதிக நீரைப் பெறுவதற்கு, பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன. குடாநாட்டில் உள்ள நன்னீர் காலப்போக்கில் முடிவடைந்து, உப்பு நீராக மாறலாம் என்ற பயம் எம்மிடையே இருக்கின்றது. ஆகவே, இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்ட நீர்வளத்தைப் பாதுகாக்க, வழங்கிய சிபார்சுகளைப் பரிசீலித்துக் கையாளவேண்டும். அவையாவன:

**2. 1. 1. உப்பு நீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றியமைத்தல்:**

யாழ். குடாநாட்டில் உள்ள வடமராட்சி பரவைக்கடல், உப்பாறு பரவைக்கடல் ஆகியவற்றை உப்புத் தன்மையிலிருந்து நன்னீராக்குவதற்கு, பலவிதமான சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த இருபரவைக் கடல்களுக்கும் இடையில் உள்ள குறுகிய வெளியேற்றுப் பகுதியைத் தடைசெய்து, ஆனையிறவு பரவைக்கடலிலிருந்து நன்னீரைக்கொண்டு வந்து நிரப்புதல் வேண்டும். ஒருமுறை இது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனையிறவுப் பரவைக்கடலிலிருந்து கடல் உப்பு நீரைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியாக அமையவில்லை. இதனால் நிலநீரின் தன்மை மாறும் என்று எவ்வித உத்தரவாதமும் இல்லை. பரவைக் கடலில் உப்புநீருக்குக் கீழ் களிமண் படிந்து இருப்பதால் நன்னீர் உட்புகுவதை தடைசெய்யலாம். வறண்ட காலங்களில் உப்புநீர் ஆவியாகி உப்புப் படிதலும் உண்டாகும். ஆகையால் இதற்கு ஒரு சரியான ஆய்வு செய்தல் வேண்டும்.

**2. 1. 2. கடலுக்குள் விழும் நீர் ஊற்றுக்களைத் தடுத்தல்:**

குடாநாட்டின் வடபகுதியில் அனேக நன்னீர் ஊற்றுக்கள் கடலில் சங்கமம் ஆகின்றன. சுண்ணாம்புக் கற்பாறைகளில் உண்டான பாரிய வாய்க்கால் மூலம் மழை காலங்களில் கடலில் கலப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வடகரையில் சுமார் இரண்டு, மூன்று மைல் நீளத்திற்கு கடல் மட்டத்தில் ஊற்றுக்கள் இருக்கின்றன. இவற்றைத் தடை செய்ய பின்வரும் மூன்று மாற்று வழிகள் இருக்கின்றன.

**அ நன்னீர் ஊற்றைத் திருப்புதல்:**

இம்முறை கீரிமலையிலுள்ள குளிக்கும் கேணியின் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளது. இங்கு ஊற்றுநீர் திருப்பப்பட்டு, ஒரு தாங்கியில் சேமித்துப் பாவிக்கப்படுகின்றது. இம்முறை கடற்கரையிலிருந்து சிறிது தூரம் உள்ளேயுள்ள சுண்ணாம்புக் கற்பாறையில் செய்யப்படவேண்டும். இப்படித் தாங்கியில் சேர்க்கப்படும் நீரை நீர் விநியோகத்திற்குப் பாவிக்கலாம்.

**ஆ. நீர் வெளியேறமுன் எடுத்தல்:**

சுண்ணாம்புக் கற்களிடையே உள்ள வாய்க்காலைக் கண்டுபிடித்து, அதில் வரும் நீரை ஒரு நிலத்தின்கீழ் உள்ள தாங்கியில் விழச்செய்து, பம்பிகள் மூலம் நிலமட்டத்திற்கு எடுத்து விநியோகிக்கலாம். ஆனால் பாரிய ஆய்வு நடாத்தியே இந்தச் சுண்ணாம்புக்கல் வாய்க்காலைக் கண்டுபிடிக்கலாம்.

**இ. தடைச்சுவர் கட்டுதல்:**

நீர் ஊற்றுக்கள் உள்ள பிரதேசத்தில், கடல் மட்டத்தில் ஒரு தடைச்சுவரைக் கட்டி, நீர் கடலுக்குள் பாய்வதைத் தடுக்கலாம். இது கடற்கரை ஓரத்திற்குச் சமாந்தரமாகக் களிமண், கொங்கிறீற், கரிசிலாந்து (Asphalt) முதலியவற்றினால் கட்டலாம். இந்தச் சுவர் நீரூற்றின் மட்டத்திற்குக் கீழே செல்லவேண்டும். இது ஒரு பாரிய அணைபோலவே இருக்கும். இந்தச் சுவர் ஓரளவு நீளமானதாகவும் இருத்தல் வேண்டும். ஏனென்றால் சுண்ணாம்புக் கற்களில் இருக்கும் வெடிப்புக்களின் மூலம் இலகுவாக நீர்சென்று சுவரின் இருகரைகள் மூலம் கடலுக்குள் கலக்கலாம். தண்ணீர் இவ்வணைக்குள் தேங்கி நிற்கும்போது, குடாநாட்டின் நீர்வளம் அதிகரிக்கும். இம்முறை மிகவும் செலவினம் கூடியதாக இருக்கும்.

**2. 1. 3. ஆழ்கிணற்றின் மூலம் நன்னீரை உட்செலுத்தல்:**

மழைக்காலங்களில், கடலுக்குள் செல்லும் நீரினைச் சேகரித்து, மிகவும் ஆழமான குழாய்க் கிணற்றின் மூலம் மண்ணிற்குள் செலுத்தி, நீர்வளத்தைக் கூட்டலாம். இதன் மூலம் படிப்படியாக (சுமார் மூன்று வருடகாலங்களில்) உப்பு

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ உட்கட்டுமானம்...

**எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந்திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

நீரை நன்னீராக மாற்றலாம். நன்னீரை உட்செலுத்தும்போது, உப்புநீர் இடம்மாறும். இம்முறை, இந்திய பொதுச்சுகாதார ஸ்தாபனத்தாலும், ஐக்கிய இராச்சியங்களிலும் செயற்படுத்தப்படுகின்றன.

### சிபார்சு

ஆகவே மேலே தரப்பட்டுள்ள, நீர்வளத்தை விருத்திசெய்கின்ற திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். சரியான ஒரு நீர்வளக் கணிப்பீடு நடாத்தப்பட வேண்டும். மேலும் போதிய நன்னீர் குடாநாட்டில் கிடைக்காதபட்சத்தில் குடாநாட்டுக்கு வெளியே இருந்து அமுக்க நீர்க்குழாய் மூலம்கொண்டுவர வேண்டும்.

## 2.2. கிளிநொச்சி

கிளிநொச்சி, பரந்தன் நகரங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்வதற்காக, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ஒரு நீர்விநியோகத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் எழுபதாயிரம் மக்களுக்கு நாளாந்தம் ஆகக்கூடுதலாக 450,000 கலன்நீர் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்திற்குத் தேவையான நீர் ஆற்றிலிருந்து (Dry Aru), பெறப்படுகின்றது. வருடம் முழுவதும் இத்திட்டத்திற்குத் தேவையான நீரைச் சேமித்து வைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நீர் நிலமேல் நீர் (Surface Water) ஆனபடியால், சுத்திகரிப்புச் செய்யப்பட்ட பின்புதான் விநியோகிக்கப்படுகின்றது. இச்சுத்திகரிப்பு முறையில் வடிகட்டல் (Filteration), வாயுவேற்றல் (Aeration), அடையவிடுதல் (Sedimentation), குளோறின் ஏற்றுதல் (Cholorination) என்பன அடங்கும். வடபகுதியின் நிலமேல் நீர் மூலம் நீர் விநியோகத்தை மேற்கொள்ளும் ஒரேயொரு திட்டம் இதுவாகும்.

இத்திட்டத்தின் மூலம் நாளாந்தம் ஒரு இலட்சம் கலன் நீரை, கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்திற்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்குரிய நீர்வழங்கற் குழாய்கள் விதானிக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சீரற்ற நிலைமையினால், இவை பொருத்தப்படவில்லை. அத்துடன், பொறியியல்பீடத்திற்குத் தேவையான நீரைக் குழாய்க் கிணற்றின் மூலம் தாமே பெறவுள்ளார்கள். கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆதார வைத்தியசாலைக்கு நாளாந்தம் 20,000 கலன் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகிக்கப்படும்.

முன்பு பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் நாளாந்தம் 25,000 கலன் நீரைக் கோரியிருந்தது. இத்தொகை நீரானது, பரந்தனில் அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி (Balancing) மூலம் இலகுவில் விநியோகிக்கப்படலாம். ஆனால் இத்தாங்கி அப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக இடிந்த நிலையில் உள்ளது.

தற்பொழுது கிளிநொச்சி, பரந்தன் பகுதியிலுள்ள மக்கள் குடிநீர் பெறுவதற்கு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்றே கூறலாம். அதனால், கிளிநொச்சி நகரம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, அங்கு குடிநீர்த் தேவை அதிகரித்தாலும், இத்திட்டத்தினால் விதானிக்கப்பட்ட நீரானது மேலும் பதினைந்து வருடங்களுக்குப் போதுமானதாயிருக்கும்.

இங்கு நடைபெற்ற வன்செயல் காரணமாக நீர் இறைக்கும் சாதனங்கள், நீர்த்தாங்கி, இரசாயன அறை, மின்மாற்றி மற்றும் விநியோகக் குழாய்களுக்குப் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. இதைப் புனர்வாழ்வு நிதி மூலம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் திருத்தியமைக்கப்படும்.

## 2.3. மாங்குளம்:

வடபகுதியின் பிரதான தலைநகரமாக மாங்குளம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பிரதேசம் கடும் கற்பாறைகளின் (Weatherd Rock) நடுவே அமைந்துள்ளது. இக்கற்பாறைகளின் வெடிப்புக்களுக்கு இடையே காணப்படும் நீரானது மிகவும் அரிதாகவே இருக்கும். நீர் வளச்சபையினால் இப் பிரதேசத்தின் நீர்வளம் பற்றி ஆராயப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே முழுமையான ஆய்வு நடாத்தப்படவேண்டும். எப்படியிருந்தும் இங்கு காணப்படும் நீரின் அளவு ஒரு குறிக்கப்பட்ட அளவாகவேயிருக்கும்.

எனவே, இங்கு நீர் சார்ந்த தொழிற்சாலைகள் அமைப்பது புத்திசாலித்தனம் அல்ல. இவ்விடத்திலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் காணப்படும் கனகராயன் குளத்திலுள்ள நிலமேல் நீரைப் பயன்படுத்தலாம். இப்பொழுது கனகராயன் குளத்திலிருக்கும் நீரானது நீர்ப்பாசனத்திற்கு மட்டுமே பாவிக்கப்படுகின்றது. கனகராயன் குளத்தில் காணப்படும் நீரானது குடிநீருக்குப் பாவிக்கப்படும்போது, முழுமையான சுத்திகரிப்புச் செய்யப்படவேண்டும். அதாவது வடிகட்டல், வாயு ஏற்றுதல், அடையவிடுதல், குளோறின் ஏற்றல் என்பன செய்யப்படவேண்டும். இம் முறையானது மிகவும் செலவாக இருக்கும். அத்துடன், இங்கு காணப்படும் நில அடிநீரின் அளவையும் கருத்தில் கொண்டு இதில் சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த முடிவு எடுக்கவேண்டும். எதற்கும் இது சம்பந்தமாக விபரமான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு குடிநீர் வழங்கும் சாத்தியக் கூறுகள் பற்றி அறிய வேண்டும். புத்தளத்திலிருந்து மாங்குளம் ஊடாக முல்லைத்தீவு வரை இருக்கின்ற சுண்ணாம்புக்கல், கருங்கல் எல்லையில் நீர் காணப்படலாம் என்று நம்பப்படுகின்றது. எனினும், நீர் இருக்கின்றதா என்பதைக் காண்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 2.4 முல்லைத்தீவு:

நீண்ட காலமாகவே முல்லைத்தீவுக்கான நீர் விநியோகம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. காலா காலமாகவே அரசாங்க அதிபர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். ஆனால், அதற்குரிய நிதி ஒதுக்கப்படாமையால் ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

1984 ல் அரசாங்க அதிபரின் வேண்டுகோளின்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் குடிசன மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளது. இவ்விபரங்கள் இரத்மலானையில் உள்ள தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக் காரியாலயத்தில் உள்ளது. அத்துடன் முல்லைத்தீவு நகரத்திற்கான நீர் விநியோகக் குழாய்களின் அமைப்பு விதானமும் முடிவடைந்துள்ளது. ஆனால், நிதி வசதியின்மையால் தேவையான நீர்வள மதிப்பீடு செய்யப்படவில்லை.

தண்ணீரூற்றில் உள்ள நீரைப் பயன்படுத்தலாம் என்று அரசாங்க அதிபரும், அப்பகுதி மக்களும் ஆலோசனை கூறியுள்ளார்கள்.

1988ல் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளில் நீர்விநியோகம் சம்பந்தமாக ஆரம்ப அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. எனினும், இந்த அறிக்கையிலும் நீர்வளம் சம்பந்தமாக திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடவில்லை. அத்துடன் இவ்வறிக்கையில் விபரமான ஆய்வு மேற்கொள்ளும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிக்குத் தேவையான நீர் நாளாந்தம், 500,000 கலன் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

அதன்பின் 1989ல் மாகாணசபையால் 100,000 ரூபா ஆரம்ப ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. எடுக்கப்படக்கூடிய நீரின் அளவு பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. அதாவது ஊற்றங் கேணியிலிருந்தும் இத் திட்டத்திற்குத் தேவையான 500,000 கலன் நீர் பெறும் சாத்தியக் கூறுகள் இல்லை.

நிலத்தின் தன்மையை ஆராய்ந்தபோது மென்மையான சிறுகற்களைக் கொண்ட படைக்குக் கீழ் நீர் புகாத களிமண் காணப்பட்டது. இதற்குக் கீழ் 30′ -50′ வரை ஆழமான நீர் உள்ள மணற்பகுதி காணப்பட்டது.

ஆரம்ப ஆய்வின்படி 100,000 கலனுக்கு மேற்படாத நீரை தண்ணீரூற்றில் இருந்து நாளாந்தம் பெற்றுக்கொள்ளமுடியும். எனினும், இதுபற்றி விபரமாக ஆய்வுகள்மேற் கொள்ளப்படல் வேண்டும்.

இப்பகுதியில் காணப்படும் நீரானது உவர்த் தன்மையும் மேலும் இரசாயன மாசுக்களும் காணப்படுகின்றன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடாத்திய சோதனைகளின்படி, இவ்விடத்திலுள்ள கிணறுகளில் இரும்பின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகவே இந்நீர் சுத்திகரிக்க சகல முறைகளும் பின்பற்ற வேண்டியிருக்கும். இதற்குச் செலவு மிகவும் அதிகமாக இருக்கும்.

எனவே இதற்குத் தகுதிவாய்ந்தவர்களினால் முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் பூரண ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். தேசிய நீர்வளச்சபை முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்வள இயல் பற்றி எந்தவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளவில்லை.

## 2.5 மன்னார்:

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தில் நீரியல், புவியியல் சரியான முறையில் அறியாத படியினால் வண்டல் மண்ணிற்கு அடியிலிருக்கும் நன்னீரின் அளவைக் கணக்கிட முடியவில்லை. இதை ஆராய்ச்சி செய்வதற்குப் போதிய நிதிவளமின்மையே காரணமாகும். இங்கு 1950 ஆம் ஆண்டு ஒரு சிறிய நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தோட்டக்காடு என்ற இடத்தில் இருந்து நீர் பெறப்பட்டது. குடிசனப் பெருக்கமும் வரட்சி காரணமாகவும் தேவையானளவு நீரைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. 1979ம் ஆண்டு டாக்டர் ராகவராவ் என்னும் நீரியல் புவியியல் நிபுணர் (உலக ஸ்தாபனம்) மன்னாரில் ஆய்வுகளை நடத்தினார். மன்னார் நகரிலிருந்து எட்டு மைல் அப்பால் உள்ள முருங்கன் என்னும் இடத்தில் போதிய அளவு நிலக்கீழ் நீர் இருப்பதைக் கண்டறிந்தார். மூன்று குழாய்க் கிணறுகளிலிருந்து நாளொன்றிற்கு 80 ஆயிரம் கலன்நீர் பெறமுடியும் என்பதைச் சிபார்சு செய்தார். 1984 ஆம் ஆண்டு மன்னார் மக்களின் குடிநீர்த் தேவையை அறிந்து ஒரு பாரிய நீர் விநியோகத் திட்டத்தை அன்பளிப்புச் செய்ய முன்வந்து, இதன்பயனாக 1990 இல் விஸ்தீரணமாகவும், விரைவாகவும், மன்னார் பட்டினத்திலும், வங்காலை, அடம்பன் பகுதிகளிலும் ஒரு நீர் வழங்கல் திட்டத்திற்கு வடிவமைப்பும் நிர்மாணமும் செய்து முடிக்கப்பட்டது.

முருங்கனில் மூன்று குழாய்க் கிணறுகள் அடிக்கப்பட்டு நீர் பெறப்பட்டது. மின்சாரம் இல்லாதபடியால் பாரிய இரண்டு டீசல் மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டது.
அடம்பன் வங்காலை ஆகிய இடங்களில் நீர்த்தாங்கிகளும், நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டன. தற்போது நாட்டின் நிலை காரணமாக உபகரணங்கள் அகற்றப்பட்டு நீர்த்தாங்கிகளும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. நீர்க்குழாய்களும் அதிகளவில் அகற்றப்பட்டதாக அறிய வருகின்றது. இது மீண்டும் செயற்படுவதற்கு பாரிய அளவில் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

தற்போது மன்னார் நகரத்துக்கு முன்னர் போல் சுமார் 30,000 கலன் நீர் மட்டுமே தோட்டக் காட்டிலிருந்து விநியோகப்படுகின்றது.

மேலும், விடத்தல் தீவு, திருக்கேதீஸ்வரம், எருக்கலம்பிட்டியிலுள்ள நீர் விநியோகத்திட்டங்களும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

முழு அளவில் மன்னார் அபிவிருத்தி அடைந்தால் மேலதிக நீர்வளம் தேவை. ஆகவே, மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு புதிய நீர்த்தேக்கங்களைக் கண்டுபிடிக்க நேரிடும்.

## 2.6 திருகோணமலை:

இப்பிரதேசம் ஒருவகைக் களிமண்ணும் பெருமணலும் கலந்த ஒருவகை மண்ணினால் ஆக்கப்பட்டு இருக்கின்றது. இந்த மண்ணின் ஊடாக நீர் புகுதல் கடினம். ஆகவே, இப்பிரதேசத்தின் நிலநீரைப் பெறும் வாய்ப்புக்கள் இல்லை. இதைக் கருத்தில் கொண்டு 1980ம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் ஓர் பாரிய நீர் விநியோகத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவையான நீர் 24 கி.மீற்றருக்கு அப்பாலுள்ள கந்தளாய்க் குளத்திலிருந்து பெறப்படுகின்றது. நிலமேல் நீர் ஆனதால் இதற்குச் சகலவிதமான சுத்திகரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் தற்போதைய நீர்த்தேவையை முழு அளவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. மேலும், இத்திட்டம் எதிர்வரும் முப்பது வருடங்களுக்கு போதுமான நீரை விநியோகிக்கக் கூடியதாக நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்றது.

திருகோணமலை தமிழீழத்தின் தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றபடியால், எதிர்கால வளர்ச்சியினால் நீரின் தேவைகளை அதிகரித்தாலும் தற்போதைய திட்டத்தில் சில மாற்றங்கள் செய்து தேவையான நீரை முழு அளவில் பெற்றுக் கொள்ளலாம்.

## 2.7 மட்டக்களப்பு:

இப்பிரதேசம் மணற்பாங்காகவே காணப்படுகின்றது. ஆகவே, நிலக்கீழ் நீர் பெறக்கூடியதாகவே இருக்கின்றது. கடல் அண்மித்து இருப்பதால் பொதுவாகக் கிணறுகளில் உப்புத்தன்மை கூடியதாகக் காணப்படுகின்றது. சில கிணறுகளில் இரும்பு உலோகம் கூடுதலாகக் காணப்படுகின்றது. தற்போது மட்டக்களப்பு நகரத்துக்கு நாளாந்தம் 25,000 கலன் நீர் விநியோகிக்கக் கூடிய ஒரு திட்டம் நீ.வ.வ.அ. சபையால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு கல்லடியில் உள்ள கூட்டமான கிணறுகளிலிருந்து நீர் பெறப்படுகின்றது.

மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்திற்கு நிர்வாக மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், இங்கு மேலும் நீர்த்தேவைகள் அதிகரிக்கலாம். ஆய்வுகளின் மூலம் கல்லடியிலிருந்து மேலதிகமாக நீரைப் பெறமுடியும் என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் தீர்மானிக்கப்பட்டது. மேலதிக கிணறுகளை கல்லடியில் அமைப்பதன் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளலாம்.
தமிழீழத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது நகரங்களின் நன்னீர்த் தேவைகளும் சிபார்சுகளும் "நீர்வழங்களும் வடிகாலும் பகுதி 11 இல்" விபரிக்கப்பட்டுள்ளது. ■

**(தொடரும்...)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# யேர்மனியில், தமிழ் மாணவர் அமைப்பினர் நடாத்திய மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி

06. 08. 1994 சனிக்கிழமையன்று யேர்மனியின், Monchengladbach நகரில் உள்ள Grenzland மைதானத்தில் தமிழ் மாணவர் அமைப்பினர், 'மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி -1994' ஐ நடாத்தினர். பூக்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட மாவீரர் சின்னம் நிலை நிறுத்தப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் உப அமைப்புக்களினதும் பொறுப்பாளர்களும் செயலர்களும் அஞ்சலித்து நிற்க, பார்வையாளர்களும் விளையாட்டு வீரர்களும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்ய, போட்டிகள் ஆரம்பமாயின.



விளையாட்டுப் போட்டியைப் பார்வையிட வந்தவர்களில் ஒரு பகுதியினர்

மதியம் ஆரம்பமான இரண்டாம் கட்டப் போட்டிகளின்போது, தமிழீழ தேசியக்கொடியான புலிக்கொடியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யேர்மன் கிளைப்பொறுப்பாளர் அவர்களும், தமிழ் மாணவர் அமைப்பின் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் அவர்களும், யேர்மன் நாட்டின் தேசியக் கொடியை உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் அவர்களும் ஏற்றினர். அதனைத் தொடர்ந்து, அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.



தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலின் போது


தமிழீழத் தேசியக்கொடி காற்றில் அசைந்தாடியபோது, கூடியிருந்த அனைவரும் உணர்ச்சிப் பெருக்கோடு மரியாதை செலுத்திய காட்சி, மலரப்போகும் தமிழீழத்தைக் கண்முன்கொண்டு வந்தது. தமிழ் மாணவர் அமைப்பினர் நடாத்தும் இரண்டாவது மாபெரும் விளையாட்டுப் போட்டி இது என்பதால், "அனுபவமிக்க திட்டமிடல்" எனப் பலராலும் பாராட்டப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது.

பரிசில்களை மாவீரர் லெப். கேணல் புலேந்திரன் அம்மான் அவர்களின் சகோதரி உட்பட, அமைப்பின் செயற்பாட்டில் உள்ளவர்கள் வழங்கினார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் அவர்கள் பேசுகையில்:-

"விளையாட்டுத்துறை என்பது, அலட்சியப்படுத்தக்கூடிய விளையாட்டுத்தனமான ஒரு காரியம் அல்ல; ஒரு இனம் முன்னேற வேண்டுமானால், ஆரோக்கியமும் அறிவும் பலமும் அவசியமாகின்றது. இவற்றிற்கு மூலகாரணமான ஒன்றே விளையாட்டுத்துறை. முன்னேற்றமான நாடுகள் விளையாட்டுத்துறையில் அக்கறை எடுக்க இதுவே காரணம். இதனை மனதில்கொண்டு மாவீரர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில்,

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...



மாணவ அமைப்பினி அணிநடையின் போது

# நோர்வேயில் விடுதலைச் சுடரேற்றிய 'சுதந்திரதாகம்'

உலக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக எமது தாயக மண்ணில், ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வரலாற்றின் பதிவுகளாகவே தமிழீழத்தின் இன்றைய கலை, இலக்கியங்கள் எழுச்சிபெற்று வருகின்றன. போர்க்கால வாழ்வின் எழுச்சிகளையும், அவலங்களையும், அது ஏற்படுத்தும் தனிமனித உணர்வுகளையும், தமது பாடுபொருளாகவும், கருப்பொருளாகவும்கொண்ட இப்படைப்புக்கள், போராட்டத்தை, முன்னோக்கி நகர்த்தும் முயற்சியில் வெற்றி பெற்று வருவதை தமிழீழம் இன்று கண்கூடாகவே கண்டு வருகின்றது.



'ஜீவயாகம்' என்ற நவீன இசை நடனத்தின் ஒரு காட்சி

புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மத்தியிலும், இப்போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளைக் கலை வடிவங்களுக்கூடாகச் சித்தரித்து காட்டும் முயற்சியாக, 'சுதந்திரதாகம்' என்னும் எழுச்சி நிகழ்வு 1986 ஆம் ஆண்டு தொட்டு நோர்வேயில், இடம்பெற்று வருகின்றது. தனக்கெனத் தனித்துவமான பார்வையாளர் வட்டத்தைக்கொண்ட இச்'சுதந்திரதாகம்', வழமைபோல் இவ்வருடமும் நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள், ஆதரவாளர்களின் கூட்டுமுயற்சியுடன், ஒஸ்லோ தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால், கடந்த ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஒஸ்லோவில் நடாத்தப்பட்டது. வெளிநாடொன்றில் இவ்வாறு பல்தொகைக் கலைஞர்களை ஒன்றிணைத்து, பாரிய நிகழ்ச்சியொன்றை நடாத்துவது சிரமம் நிறைந்தது என்றபோதும், 'இச் சுதந்திரதாகத்தின் வெற்றி அதன் பின்னாலுள்ள கடின உழைப்பையும், கூட்டுச்செயற்பாட்டையும் நன்றாகவே வெளிக்காட்டியது. அறிவித்த நேரத்திற்கு, மேடையில் திரைவிலகுவது தமிழ் அரங்குகளில் அரிதாகக் காணும் அனுபவங்களில் ஒன்று. சுதந்திரதாகம் இந்த அனுபவத்தைத் தந்தது மகிழ்ச்சிக்குரியது.

பாரதியாரின் 'என்று தணியும் இந்த சுதந்திரதாகம்... என்ற பாடலுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுமே, எமது பாரம்பரியக் கலையாக்கங்களின் மெருகூட்டப்பட்ட புதிய வடிவங்களாகவே இருந்தன. இவ்வடிவங்கள் காவிச்சென்ற செய்திகளும் காலத்தின் குரலாகவும், போர்க்கால வாழ்வின் பல்வேறு நிலைப்பட்ட அனுபவங்களை வெளிப்படுத்துவனவாகவும் இருந்தன.

முதல் நிகழ்ச்சியாக இடம்பெற்ற, 'கூடுதேடும் குயில்கள்' சிறுவர் நாடகம் உருவகப்படுத்தப்பட்ட கதையொன்றின் மேடை நிகழ்வாக இருந்தது. மிக அழகாகப் பாடத் தெரிந்தும் சொந்தமாகத் தமக்கென ஒரு கூடுகட்டத் தெரியாத குயில்கள், காகம் கட்டிய கூட்டினுள் களவாக முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதும், அக்குஞ்சுகள் வளர்ந்து கூவத் தொடங்கியதும் அவற்றை குயிலென இனம் கண்டு காகம் கொத்திக் கலைப்பதும் காலம் காலமாகப் பேசப்படும் குயிலின் வரலாறு. இவ்வரலாற்றிற்குப் புறம்பாக இளைய தலைமுறைக் குயில்கள் தமக்கென கூடு கட்ட முயல்வது இங்கு நாடகமாக்கப்பட்டிருந்தது. இந்நாடகம் அழகாகத் தயாரிக்கப்பட்டிருந்த போதும், சொல்லவந்த கருத்து சரியான முறையில் பார்வையா



'கூடுதேடும் குயில்கள்' சிறுவர் நாடகத்தின் ஒரு காட்சி

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# தங்கப்பதக்கம் வென்றார்

யாழ். மாவட்ட லியோ கழகங்களினால் நடாத்தப்பட்ட, தமிழ் நாவன்மைப் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி லியோ கழகத்தைச் சேர்ந்த கே. ஜெய நிதி தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டார். யாழ். மத்திய கல்லூரி லியோ கழகத்தைச் சேர்ந்த எல். சிறீதரன் இரண்டாம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி. தயாபரன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். லியோ கழகங்கள் செயற்படும் சகல பாடசாலை மாணவர்களுக்குமிடையே நடாத்தப்பட்ட ஆங்கில நாவன்மைப் போட்டியில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கிருஸ்ணாள் சுப்பிரமணியம் தங்கப்பதக்கத்தை வென்றார். யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த வே. கிருசாந்தன் இரண்டாம் இடத்தையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி அனுலோஜா பத்மபாலன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற மாவட்டக் கருத்தரங்கில் வைத்து வழங்கப்பட்டன. ■

## யேர்மனியில்...

'மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி' எனப் பெயரிட்டு, இந்தப் போட்டியை ஆண்டுதோறும் நடாத்திவரும் தமிழ் மாணவர் அமைப்பினர் பாராட்டப்படவேண்டியவரே" என்றார்.

சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யேர்மன் கிளைப் பொறுப்பாளர் அவர்கள் பேசுகையில், "இனவிடுதலை உணர்வோடு நடாத்தப்படும் இந்தப் போட்டி நமது மாணவரிடையே கட்டுப்பாடான வாழ்க்கை முறையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் ஒன்றாக அமையும்" என்றார். அவர் மேலும் பேசுகையில், "மேலை நாடுகளில் வாழும் நாம் இங்குள்ள பண்பாட்டுச் சீர்கேடுகளால் பாதிக்கப்பட்டு, நமது ஒழுக்கமான பண்பாட்டை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது; ஒழுக்கம் தான் எல்லாவற்றிலும் மேலானது; எனவேதான் இந்தப் போட்டிகளில் கட்டுப்பாடு குலையாது, ஒழுக்கம் தவறாது விளையாடிய உதைபந்தாட்ட அணிக்கென ஒரு மேலதிக வெற்றிக்கிண்ணத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் ஒழுக்கமானவரைக் கௌரவிக்கவும் எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டும்" என்றார்.

ஒழுக்கத்துக்கான வெற்றிக்கிண்ணத்தை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யேர்மன் கிளையின் அலுவலகப் பொறுப்பாளர் அவர்கள் வழங்க, 'Tutlingen' உதைபந்தாட்ட அணியினர் அதனைப் பெற்றுக்கொண்டனர்.

நன்றி தெரிவித்துப் பேசிய தமிழ் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் அவர்கள், "ஆரோக்கியமான தமிழீழ மாணவரை விடுதலை உணர்வோடு உருவாக்க, இந்த விளையாட்டுப் போட்டி வழிவகுக்கும். பலம் பொருந்திய அறிவார்ந்த இனமாக நமது எதிர்காலச் சந்ததி நிலைக்க வேண்டும்" என்றார். அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்தப் போட்டியை யேர்மனியின் அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டுப் போட்டியாக நாங்கள் நடாத்தினோம். இந்தப் பெரிய வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கிய, ஆதரவு தந்த, பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகூறும் அதேவேளை, தமிழீழ மலர்வுக்காக நடாத்தப்படும் நியாயமான போராட்டத்தில் உயிர்நீத்த உத்தமர்களின் நினைவாக நடாத்தப்படும் போட்டி இது. அந்த உத்தமர்களுக்கு எந்த வகையிலும் களங்கம் ஏற்படாத வகையில், நேர்மையும் நீதியும் கடைப்பிடிக்கும் முனைப்பில் சர்வதேச விளையாட்டு விதிகளை நாம் இறுக்கமாகக் கடைப்பிடித்தோம். இதனைப் புரிந்துணர்வோடு அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என வேண்டினார்.

விளையாட்டுக்கள் தொடங்கிய நேரம் தொடக்கம், முடிவின் இறுதிக்கணம் வரை அந்த மைதானம் ஒரு தமிழ்ப் பிரதேசத்தின் மைதானம் போலக் காட்சியளித்தது. ஒலிபெருக்கிகள் தமிழில் கட்டளைகளை வழங்கித் தமிழ் பொழிந்தன. புலிக்கொடி காற்றில் பட்டொளிவீசிப் பறந்தது.

இறுதி நிகழ்வாகக் கொடிகள் இறக்கப்பட்டு, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி விளையாட்டுப் போட்டி முடிவுற்றது. ■

## நோர்வேயில்...

ளர்களைச் சென்றடையவில்லை என்ற விமர்சனமும் பரவலாகக் காணப்பட்டது.

கிராமிய நடனம் நிகழ்ச்சியில், தாயகத்தில் நாம் விட்டுவந்த கலைச்சொத்துக்களான கரகம், காவடி, குதிரையாட்டம் என்பன மேடையில் அரங்கேறின. இந்நிகழ்ச்சியில் ஆண், பெண் கலைஞர்கள் கரகம், காவடி என்பவற்றுடன் குதிரையையும் மேடைக்குக் கொண்டுவந்து, தமது திறமையால் நிகழ்ச்சியை மெருகேற்றினர். மேடையில் பலவர்ணத் தன்மையும், அழகியலும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. இந்நிகழ்ச்சியின் பின்னணிப் பாடல்கள், வெற்றிமுகத்துடன் போராளிகள் தளம் திரும்புவதைக் கிராமிய மணத்துடன் மேடையில் விளக்கச் செய்தன.

நிகழ்ச்சியில் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்த, நவீன இசை நடனமான 'ஜீவயாகம்' வயற்காடுகளிலும், கடலிலும் ஆடியும் பாடியும் கழிந்த எம்மினத்தின் சமூகவாழ்வு, யுத்த மேகங்களால் சூழப்பட்டு திசை மாறிப் போன அவலத்தையும், இவ்யுத்தத்தை எதிர் கொள்ள மக்கள் எழுச்சியுடன் அணி திரள்வதையும், இழந்த இவ்வாழ்வை மீளப்பெற போராளிகள் புரியும் தற்கொடையையும், கலைஞர்கள் தம்முயற்சியால் முழுமையான கலைவடிவமாக்கினர். இந்நிகழ்ச்சி அதன் சிறப்பான பின்னணி இசையில் மேலும் மெருகூட்டப்பட்டு, 'சுதந்திரதாகம்' நிகழ்ச்சிக்கு சிறப்புச் சேர்த்தது.

தமிழீழத்தின் அண்மைக்கால இலக்கிய வெளிப்பாடுகளின் தன்மை பற்றியும், அவற்றின் மக்கள் நிலை ரசனை பற்றியும் விசாரித்தறிந்த ஒரு இலக்கிய ஆர்வலர் 'கவற் இலக்கியங்கள்' என்றொரு சொற்தொடரைப் பயன்படுத்தினார். தமிழ் சினிமா வழியாக கடந்த பல ஆண்டுகளாக ரஞ்சகப்படுத்தப்பட்ட கவிதை -இசை இணைவு, தமிழீழத்தில் 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புதிய தேவைகளை ஏற்றுக்கொள்வதற்கான கலைவடிவப் பின்புலத்தைத் தந்தது. இப்பின்புலத்தில் உருவாக்கப்பட்ட பல தனித்துவமான பாடல்கள் மக்களதும், விமர்சகர்களதும் பலத்த பாராட்டைப் பெற்றன.

இம் முயற்சிகளின் தொடர்ச்சியாக இன்றைய போராட்ட நிலையினையும், புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும், புலம் பெயர்வாழ்வின் அனுபவங்களையும் இசைவடிவில் வடித்தெடுக்கும் முயற்சியாக, நோர்வே வாழ் தேசப்பற்றுள்ள கலைஞர்கள் சிலரின் துணையுடன், 'சுதந்திரதாகம்' எனும் CD இசைத்தட்டு நோர்வே தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது. இவ் இசைத்தட்டில் உள்ள ஓரிரு பாடல்கள் விமர்சனத்துக்குரியனவாக இருந்தபோதும், பல பாடல்கள் சிறப்பாக அமைந்து, பலரதும் பாராட்டைப் பெற்றது.

இறுதியாக, திரு. சர்வேந்திராவின் நெறியாள்கையில் உருவான கவிஞர் இ. முருகையனின் 'மண்ணில் ஒரு பிடி' ஆள்வோருக்கும் ஆளப்படும் வேறோர் இனத்திற்கும் இடையேயான முரண்பாடும், அம்முரண்பாட்டின் உச்சநிலையில் ஆளப்படுவோர் ஒரு தலைவனின் வழிகாட்டலில் ஆள்வோரை எதிர்க்கத் துணிவதும் மோடிப்படுத்தப்பட்ட வடிவத்தில் நாடகமாக்கப்பட்டுள்ளது. இந்நாடகம் நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக கலைஞர்களின் திறமையான உழைப்பில் மெருகேறியிருந்தது.

மொத்தத்தில் இச் 'சுதந்திரதாகம்' தன் நோக்கில் வெற்றி பெற்றதுடன், விடுதலை உணர்வை நோர்வே வாழ் தமிழர்களின் இதயங்களிலும் பற்றிக்கொள்ளச் செய்தது.

"விடுதலை நோக்கிய பயணத்தில் வழி தெரியாத விழிகளும் வார்த்தைகளற்ற வாயும் ஆடாத கால்களும் அசையாத கைகளும் வரலாற்றுத்தவறு செய்தவைகளாகிவிடும்".

என்றான் ஒரு கவிஞன். கவிஞனின் வார்த்தைகளுக்கு 'சுதந்திரதாகம்' செவிசாய்த்திருக்கின்றது. ■

# சுவிசில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1994

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினால், 13. 08. 1994 சனிக்கிழமையன்று, பேர்ண் (Bern) மாநிலத்திலுள்ள Wankdorf என்னும் மைதானத்தில், மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான 4 ஆவது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடாத்தப்பட்டது.

சுவிசின் அனைத்து மாநிலங்களிலும் தெரிவுப்போட்டிகள் நடாத்தப்பட்டு, அதில் தெரிவு செய்யப்பட்ட 16 கழகங்கள் இறுதிப் போட்டியில் மோதிக்கொண்டன. பெருந்தொகையான மக்கள் பார்வையாளராகக் கலந்துகொண்ட இப்போட்டிக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார். பிரதம விருந்தினரால் 'தமிழீழத் தேசியக்கொடி' ஏற்றப்பட்டு, போட்டிகள் ஆரம்பமாகின. ஒரே நேரத்தில், இரண்டு மைதானங்களில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.



வீரர்கள் விறுவிறுப்பாக மோதும் ஒரு கட்டம்

அரை இறுதிப் போட்டியில் ஒரு அணியில், Zurich City Boys கழகமும், Bern Royal கழகமும் மோதிக்கொண்டன. மற்றைய அணியில் Basel Blue Birds கழகமும், Lausanne Blue Star கழகமும் மோதிக்கொண்டன. இறுதிப் போட்டியில் Zurich City Boys கழகமும், Lausanne Blue Star கழகமும் மோதிக்கொண்டன. இவ்விரு கழகங்களும் இறுதி நேரத்தில் 2:2 என்ற கணக்கில் கோல்களைப் போட்டதால், 'பனால்டி' முறையில் இறுதித்தெரிவு நடைபெற்றது. இதில், Surich City Boys கழகம் 4:3 என்ற கோல்களைப் பெற்று, மாவீரர் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது. Lausanne Blue Star கழகம், Bern Royal கழகம் என்பன முறையே இரண்டாவது மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்டன.



வீரர் ஒருவர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்

வெற்றியீட்டிய கழகங்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, 'செஞ்சோலை' சிறுவர் பராமரிப்பு நிதிக்காக ஒழுங்குசெய்யப்பட்ட அதிஸ்டலாபச்சீட்டுக்களும் அதிஸ்டம் பார்க்கப்பட்டன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிஸ்டசாலிக்குப் புதியதோர் Opel Astra கார் ஒன்று பரிசாக வழங்கப்பட்டது. ■


வெளிவந்துவிட்டது!




நோர்வே தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், 'சுதந்திரதாகம்' என்ற பெயரில் ஓர் ஒலி இசைத் தட்டினை வெளியிட்டுள்ளது. மொத்தம் 9 பாடல்களைக் கொண்ட இவ் இசைத்தட்டினை விடுதலைப் புலிகளின் அனைத்து சர்வதேசக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழர் கலை பண்பாட்டுக்கழகம்
நோர்வே

www.tamilarangam.net

# பகைவன் குகைக்குள் சாதனைபடைத்து சரித்திரமானவர்கள்



கரும்புலி மேஜர் நிலவன் (கௌடி)
(ஜெசுமி பெர்னாண்டோ)
வண்ணாகுளம், அடம்பன், மன்னார்



கரும்புலி மேஜர் ஜெயம்
(குணநாயகம் தேவராசா)
திருகோணமலை



கரும்புலி மேஜர் திலகன்
(சுப்பையா ராஜ்)
மட்டக்களப்பு



மேஜர் சேரன் (அசோக்)
(குணசிங்கம் குணராஜ்)
தனங்கிளப்பு, சாவகச்சேரி

## பகைவனே! படுக்கையை தட்டிப்பார்
## கட்டிலுக்குக் கீழே கரும்புலி இருப்பான்

புதுவை இரத்தினதுரை



02.08.1994 அன்று.
என்றும் போல் அன்றும்.
கதிரோன் எழுவான் திசையில் எழுந்தான்.
படுவான் கரையில் விழுந்தான்.
இரவு நகர்ந்து, தாயகத்தை தலைமுதல் கால்வரை
போர்த்திவிட, அதிகாலை ஆரம்பமானது.
'பலாலி'
நீண்டகாலம் தமிழனின் பாதம் படியாத நிலம்.
சிங்களப்பாட்டுக் கேட்டு சினந்திருக்கும் மரங்கள்.
வீசும் காற்றில் கூட அந்நிய நெடி. செம்பாட்டு மண்...
பூமிபுத்திரர்களின் வருகைக்காக காத்திருந்தது.
பகைவனின் படைத்தளத்தில்
பாட்டும், கூத்தும் பரவிக் கிடந்தது.
முன்னணிக் காவலரணில்...
அவர்களுக்கு முழு நம்பிக்கை.
எவன் நுழைவான் என்ற இறுமாப்பு. நாளை...
வசாவிளானுக்கு மாடு தேடி வருபவனையும்
கட்டுவனுக்கு வீடு பார்க்க வருபவனையும்
எப்படிக் கொல்லலாம்.
எங்கு எறிகணை வீசலாம்.
எவ்விடத்தில் குண்டுகள் போடலாம்.
பியர் அடிக்கும் உயர்மட்டப் பேச்சுக்கள் முடிந்து.
அதிகாரிகள் நுளம்புவலைக்குள் நுழைய
விளக்குகள் நூருகின்றன. யாரங்கே?
விமான ஓடு பாதைக்கு அருகிலும்
கட்டளைப் பணியகத்துக்குப் பக்கமாகவும்.
மெல்ல, மெல்ல நகரும் இவர்கள் யார்?
'கரும்புலிகள்'
காற்று, புன்னகைத்தபடி பெயர்களை உச்சரிக்கிறது.
மேஜர் நிலவன், மேஜர் ஜெயம், மேஜர் திலகன்,
கப்டன் திரு, கப்டன் நவரத்தினம், லெப்டினன்ட் ரங்கன்.
விரல்மடித்து எண்ணிவிட்டு
காற்று விசிலடித்தபடி நகர்கிறது.
இருண்ட வானத்தில் வெள்ளியொன்று
இப்படிக் குரல் கொடுத்தது.
''வீரத்தின் வேர்களே! வெல்லுங்கள்
வழியனுப்பி வைத்த 'வரலாறு' காத்திருக்கும்
புகுந்து விளையாடுங்கள்''
கட்டளைக்காக கரும்புலிகள் காத்திருந்தனர்.
'வோக்கிரோக்கி' உயிர்த்தது.
முதல் வெடி விழுந்தது. கொல்லும் எமன் வாகனம்...
'பெல்' உலங்குவானூர்தி எரிந்தது.
'பவள்' கவசவாகனம் சிதறியது.
எவர் என்னானாலும் எனக்கென்ன?
குண்டு வீச்சு விமானம் குடல் தெறிக்க ஓடியது.
ஆணவத்துக்கு அடிவிழுந்தது. கரும்புலிகளுக்கு...
எட்டமுடியாத சிகரங்கள் எதுவும் இல்லை
தொட்டசைக்க முடியாத சுமைகள் இல்லை.
கரும்புலிகள் , வேர்களை வெட்ட மட்டுமல்ல...
ஆணிவேர்களையும் அறுக்கக் கூடியவர்கள்.

கரும்புலிகளே!
சாவுக்குமட்டும் ஒப்பாரி வைக்கும் உலகம்
உங்களை எப்படி உணர்ந்து கொள்ளும்
முரடர்கள் என்றே முடிவெடுக்கும்.
உங்களுக்கு இளகிய இதயமென்று
உலகம் எப்போது உணர்ந்து கொள்ளும்.
'என் இனியவளுக்கு'
என்றோர் கடிதம் எழுதிவைத்துவிட்டு
பலாலிக்குள் புகுந்த பச்சைத் தளிரே!
உன்னிதயம் கள்ளிச் செடியல்ல... முல்லைக்கொடி.
மெல்லிய ஊற்றின் தோற்றுவாயே நீதான்.
உன் இதயத்தில்... எங்கோ ஒரு மூலையில்
காதல் கட்டவிழ்ந்திருந்தது. ஆனால்...
தலைவனின் பெயரையல்லவா
உன் இதயம் உச்சரித்துக் கொண்டது?
உங்களை உலகம் எப்படி உணர்ந்து கொள்ளும்?
அன்று போகின்றோம் என்றீர்கள்.
எங்கே என்றனர் தோழர்கள்.
''கிட்டண்ணாவிடம்'' என்று சிரித்தீர்கள்.
எத்தனை உறுதியிருந்தது உங்களிடம்.
ஆழமாக அல்லவா தாயகத்தை காதலித்தீர்கள்.
உள்ளே புகுந்த ஒருவனுக்கு
இருகாலும் இல்லாமற் போனது. என்ன செய்தான் தெரியுமா?
''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''
சொல்லியபடியே தன்னைச் சிதற வைத்தான்.
உங்களை எப்படி உலகம் உணர்ந்து கொள்ளும்?
அண்டகோள்களையும் அளக்கும் விஞ்ஞானிகளே!
இந்த வேங்கைகளை எப்படி அளப்பீர்கள்
உலக அதிசயங்கள் ஏழு என்றவர்களே!
இந்த அதிசயங்களை எதிலே... சேர்ப்பீர்கள்
இந்த 'உண்மை மனிதர்களின்' கதைகளை
எந்த எழுத்தாளன் எழுதத் தொடங்குவான்.
கரும்புலிகள் காற்றைப் போன்றவர்கள்
உணர முடியுமே தவிர, உற்றுப் பார்க்க முடியாது.
கரும்புலிகள் கடலைப் போன்று
அளக்க முடியாத வியாபகங்கள்.
எதிரியே!
ஓடி, ஓடி உலகெங்கும் ஆயுதம் வாங்கினாலும்
இந்த 'உயிராயுதங்களை' எப்படி இல்லாதழிப்பாய்?
பகைவனே!
படுக்கையை தட்டிப் பார்த்துவிட்டுத் தூங்கு
கட்டிலுக்குக் கீழே கரும்புலி இருப்பான்.





கரும்புலி கப்டன் திரு
(கோணமலை முகுந்தன்)
அம்பாறை



கரும்புலி கப்டன் நவரெட்ணம்
([illegible])
செட்டிகுளம்
தற்போதைய முகவரி:- மடு அகதி முகாம், மன்னார்



கரும்புலி லெப்டினன்ட் ரங்கன்
(குணமாலை ரதிக்குமார்)
தற்போதைய முகவரி:-
கரடியடி, வட்டக்கச்சி, கிளிநொச்சி



கப்டன் ஈழவன் (ராஜேஸ்)
(வேலாயுதம் உபேந்திரன்)
புலோலி தெற்கு, புலோலி


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்